இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 205 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 23 – புதன்கிழமை 06 மார்ச் 2024 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 205 : Thiruvalluvar Year - 2055 - Maasi 23 - Wednesday 06 March 2024 - Chennai 20 Pages ₹ 5.00

## ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடகம்:

# தேர்தல் ஆதாயத்திற்காக மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணி துவக்கமா?

## சமூக ஆர்வலர்கள் விமர்சனம்!

சென்னை, மார்ச் 6 –

**தேர்தல் ஆதாயத்திற்காக மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணியை ஒன்றிய பா.ஜ.க., அரசு அவசரம், அவசரமாக தொடங்கியுள்ளது. இதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

2019 ஆம் ஆண்டில் மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிலையில், அடிக்கல் நாட்டி 5 ஆண்டுகளாகியும் கட்டுமானத்துக்கான பணிகள் தொடங்கப்படவில்லை. ஒரே ஒரு செங்கல் மட்டுமே அங்கு வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க., அரசோ, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளதாக பொய் தகவலை வெளியிட்டு வருகிறது. இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். கடந்த சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின்போது எய்ம்ஸ் செங்கல்லை கையோடு எடுத்து சென்று ஊர், ஊராக மோடி அரசின் பொய்யை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அம்பலப்படுத்தினார்.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திலும் ஒற்றை செங்கல் பயன்படுத்தப்படும் என்ற அச்சம் காரணமாக மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் கட்டுமானப் பணியை ஒன்றிய பா.ஜ.க., அரசு அவசரம், அவசரமாக தொடங்கியுள்ளது.

இதற்கு அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. தேர்தல் ஆதாயத்துக்காக எய்ம்ஸ் கட்டு மானப் பணி தொடங்கப்பட்டிருப்பதாக பலர் விமர்சித்துள்ளனர்.

மோடி அரசின் செயலை மக்கள் ஒருபோதும் நம்ப மாட்டார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். 5 ஆண்டுகள் மவுனம் சாதித்து விட்டு இப்போது நாடகம் போடுவதா என்றும் அவர்கள் வினவியுள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தல் வருவதால் மதுரை எய்ம்ஸ் மருத்துவனை கட்டுமான பணிகளை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் குற்றம் சாட்டியுள்ளார். சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மக்களுக்கான திட்டங்களிலும் அரசியல் ஆதாயம் கருதி ஒன்றிய அரசு செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 5ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட நிலையில், தற்போது தேர்தல் ஆதாயத்திற்காக கட்டுமானப் பணிகளை, ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடங்குவதாக கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார். அந்த பணிகள் முழுமை பெறுமா என்பதை பொருத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளை ஒரு ரகசிய திட்டத்தைப் போல ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் விமர்சித்துள்ளார். இது, மக்களவை தேர்தலுக்கான பா.ஜ.க. வின் கண்துடைப்பு நாடகம், மக்களை ஏமாற்றும் செயல் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேபோன்று சமூக ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர்.




பயனாளிகளைத் தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் புதுமையான திட்டம்

‘நீங்கள் நலமா’

தொடங்கி வைப்பவர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் :
6.3.2024, புதன்கிழமை, காலை 11.00 மணி

இடம் :
மாண்புமிகு முதலமைச்சரின் முகாம் அலுவலகம், சென்னை



நீங்கள் நலமா

சிறப்பம்சங்கள்

- மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், அனைத்துத் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஆகியோர் அரசுத் திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களைத் தொலைபேசியில் நேரடியாகத் தொடர்பு கொண்டு கேட்டு அறிவார்கள்.
- திட்டப்பயன்கள் உடனுக்குடன் பொதுமக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்தல்.

சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., தலைமைச் செயலாளர்

செமதொஇ/347/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர்


### தேர்தல் பத்திரங்கள்: எஸ்.பி.ஐ. வங்கி மூலமாக

# மோடி தனது நன்கொடையை மூடி மறைக்கிறார்!

### மல்லிகார்ஜுன கார்கே - ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 6 –

நாட்டில் உள்ள அரசு நிறுவனங்கள் ஒவ்வொன்றையும் பிரதமர் மோடி நாசப்படுத்தி வருவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல்காந்தி ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

இந்தியாவின் மிகப் பெரிய வங்கியான ஸ்டேட் பாங்கை பா.ஜ.க.,வின் ஆதாயத்துக்காக பிரதமர் மோடி பயன்படுத்தியுள்ளார் என்று கார்கே சாடியுள்ளார். கருப்புப் பணத்தை தேர்தல் பத்திரங்கள் மூலம் வெள்ளையாக்கி மெகா நிதி மோசடி நடைபெற்றுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் பத்திரங்கள் மூலம் வசூல் செய்யப்பட்ட நிதி, யாருக்கு எவ்வளவு நிதி சென்றுள்ளது, யார், யார் நிதி அளித்துள்ளார்கள் என்பது குறித்த தகவலை அளிக்க ஸ்டேட் வங்கிக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், கூடுதல் கால அவகாசம் கேட்டு ஸ்டேட் வங்கி மனுத்தாக்கல் செய்திருப்பது கண்டனத்திற்குரியது என்று மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். கால அவகாசம் கேட்பது ஒன்றிய பா.ஜ.க., அரசை காப்பாற்றும் செயல் என்று தெரிவித்துள்ள அவர், ஆர்.பி.ஐ., தேர்தல் ஆணையம் உள்ளிட்டவற்றை தொடர்ந்து, தற்போது ஸ்டேட் வங்கி நிறுவனம் மூலமும் மோடி அரசு கபளீகர வேலையில் ஈடுபட்டு வருவதாக விமர்சித்துள்ளார்.

தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி அளித்தவர்கள் குறித்த தகவலை அளிக்க மறுப்பது தகவல் அறியும் உரிமை சட்டத்தை மீறும் செயல் என்றும் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார். உச்ச நீதிமன்ற உத்தரவை மதித்து, நிதி அளித்தவர்கள் குறித்த தகவலை காலதாமதமின்றி ஸ்டேட் வங்கி அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ராகுல் காந்தி

பாரத ஸ்டேட் வங்கியின் மனு குறித்து ட்விட்டரில் கண்டனம் தெரிவித்து காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி பதிவிட்டுள்ளார். அதில், மோடி தனது டொனேஷன் பிசினசை மூடி மறைக்க முயற்சி மேற்கொண்டுள்ளார் என்றும், அவரது உண்மையான முகத்தை மூடி மறைக்க நடைபெறும் கடைசி முயற்சி இது என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 06-03-2024



# எந்தத் திட்டத்துக்கு தடை போட்டோம்?- 3

**5. ஜி.எஸ்.டி. இழப்பீடு**

சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்திய பிறகு மாநிலங்களுக்கு கிடைக்க வேண்டிய வரி வருவாய் மிகப்பெரிய அளவில் குறைந்துவிட்டது. மாநிலங்கள் வசூலித்துக் கொள்ள வேண்டிய வரியை ஒன்றிய அரசு எடுத்துச் சென்று விடுகிறது. இதனால் ஏற்படும் இழப்பை ஈடு கட்ட இழப்பீடு பணம் தருவதாகச் சொன்னார்கள். அது ஒரு ஆசை வார்த்தைதான். அந்த இழப்பீடும் 2022 ஆம் ஆண்டோடு நின்று விட்டது. நிறுத்தப்பட்டு விட்டது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலுக்கு முந்தைய காலகட்டத்தை ஒப்பிடுகையில், ஆண்டொன்றுக்கு 20,000 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை தமிழ்நாடு அரசு எதிர்கொண்டு வருகிறது .

**6. கடன் வாங்குவதில் முட்டுக்கட்டை**

மாநிலங்கள் கடன் வாங்குவதில் கூட தடையை ஏற்படுத்துகிறார்கள். மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக்கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது ஆகும். ஆனால் மாநிலங்கள் கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது. இந்தப் பிரிவின்படி, மாநிலங்கள் கடன் வாங்க ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஷரத்து மாநில சுயாட்சிக்கு எதிரானது ஆகும். மாநில அரசின் நிதிப் பொறுப்பைத் தடுப்பது ஆகும். வரையறுக்கப்பட்ட நிதிப் பற்றாக்குறையை நேர் செய்யும் மாநில அரசின் முனைப்புகளை தடுக்கும் செயல் ஆகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு தொடர்ந்து 15 விழுக்காடு வளர்ச்சியை அடைந்த போதிலும், 2023-2024 ஆம் ஆண்டில் நிகரக் கடன் உச்சவரம்பைக் கணக்கிடுவதற்கான மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சியை வெறும் 8 விழுக்காடாக ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளது. இதனால், நடப்பாண்டில், 6,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

**7. சொன்னதை நிறைவேற்றினாரா?**

**2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் நாள் ராமநாதபுரத்துக்கு வந்து நரேந்திரமோடி அவர்கள் பேசினார்கள். அவர் அப்போது பிரதமர் ஆக வில்லை. வாக்குக்கேட்டு வந்து பேசும் போது என்ன சொன்னார்? “ மிகப் பெரிய புண்ணிய ஸ்தலமான ராமேஸ்வரம், சுற்றுலாத் தலமாக மாற்றப் பட்டு உலகத்தினர் அனைவரும் வந்து செல்ல ஏற்பாடு செய்யப்படும்” - என்று சொன்னார் நரேந்திர மோடி. இதற்காக என்ன பணிகள் செய்யப்பட்டன?**

**ராமேஸ்வரத்தை உலகப் புகழ் பெற்ற சுற்றுலா தலமாக மாற்றி விட்டார்களா?**

**ராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள தனுஷ்கோடி, 1964-ல் வீசிய புயல் மற்றும் கடல் கொந்தளிப்பால் அழிந்து போனது. ராமேஸ்வரம் தாண்டி தனுஷ்கோடி வரை ரயில்கள் முன்பு வந்து சென்றன. புயலால் தனுஷ்கோடி அழிந்த போது ரயில் பாதைகளும் காணாமல் போனது. தனுஷ்கோடி வரை மீண்டும் பாதை அமைத்து ரெயில் போக்குவரத்து தொடங்குவதற்காக 2019 மார்ச் 1-ம் தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். ராமேஸ்வரம் - தனுஷ் கோடி இடையே 17 கிலோ மீட்டர் தூர புதிய ரயில் பாதை இன்னும் வரவில்லை.**

**ஜவுளிகளின் சொர்க்கமான ஈரோட்டில் ஜவுளித் தொழிலுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். ஈரோட்டில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உறுதியான நடவடிக்கை எடுப்போம் - என்று ஈரோட்டில் பேசினார் மோடி. செய்து தரவில்லை.**

**பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.920 கோடி ஒதுக்கீடு செய்து அடிக்கல் நாட்டு விழா கடந்த 2021 இல் காணொலி வாயிலாக நடைபெற்றது. பட்டறை உரிமையாளர்கள் அளித்த பங்களிப்புத் தொகையை கொண்டு காவிரி ஆற்றின் வலது புறம் பவானியில் இரண்டு இடத்திலும், ஈரோடு வைராபாளையத்திலும், காவிரி ஆற்றின் இடதுபுறம் உள்ள நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம், பள்ளிபாளையம் ஆகிய இரண்டு இடம் என ஐந்து இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையம் கட்ட இடம் விலைக்கு வாங்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகி விட்டன. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரூ.920 கோடி என்ன ஆனது என்று துணி உற்பத்தியாளர்கள் கேட்கிறார்கள்.**

**“ஈரோடு மஞ்சளை இந்தியாவே நேசிக்கிறது. ஈரோடு விவசாயிகளுக்கு இந்தியாவே நன்றிக் கடன் பட்டுள்ளது. பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால் மஞ்சளை ஆயுர்வேதம் மட்டுமின்றி, அழகு சாதனப் பொருளாகவும் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்” - என்று ஈரோட்டில் பேசினார் மோடி. மஞ்சளில் இருந்து தயாரிக்க ஆயுர்வேத ஆலை, அழகு சாதனப் பொருட்களுக்கு பயன்படுத்தும் திட்டம், மருந்து மற்றும் பெயிண்ட் போன்றவை தயார் செய்யும் திட்டம் என இதுவரை எந்த திட்டமும் ஒன்றிய அரசு செய்யவில்லை.**

**மோடி அவர்கள் கொடுத்த முக்கியமான வாக்குறுதி மீனவர்களைப் பற்றியது ஆகும். “தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும் - கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதும் தினசரி நடந்து வருகிறது. இதற்கு காங்கிரஸ் அரசின் பலவீனம்தான் காரணம்” - என்று இதே ராமநாதபுரத்தில் வைத்துத்தான் சொன்னார் மோடி. மீனவர்கள் பாதுகாப்பாக வாழ வேண்டுமானால் இந்தியாவில் வலுவான அரசு அமைய வேண்டும். மீனவர்கள் வாழ்வு சிறக்க நான் ஒரு சபதம் எடுக்கிறேன் என்று கன்னியாகுமரியில் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் தேதி பேசினார் மோடி. அவரது சபதத்தை நிறைவேற்றி விட்டாரா?**

**““நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு மீனவர் கூட உயிரிழக்க மாட்டார். தமிழ்நாட்டு மீனவர்க்கு இலங்கையால் பிரச்சினை. குஜராத் மீனவர்க்கு பாகிஸ்தானால் பிரச்சினை. இரண்டு மாநில மீனவர்களையும் இணைத்து பேசி கூட்டு நடவடிக்கை எடுப்போம்” என்று சொன்னார் நரேந்திர மோடி அவர்கள். 2014 முதல் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது சிங்களக் கடற்படை தாக்குதல் நடத்தவில்லையா? அவர் ஆண்ட பத்தாண்டு காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் 3 ஆயிரத்து 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களின் 534 படகுகள் சிங்கள அரசாங்கத்தால் கடத்தப்பட்டுள்ளன.**

இப்படி கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை மோடி. எந்த திட்டமும் கொண்டு வரவில்லை. ஆனால் வாயால் வடை மட்டும் விதவிதமாக சுட்டுக் கொண்டு இருக்கிறார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சமத்துவ மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் எர்ணாவூர் ஏ. நாராயணன் சந்தித்து, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு சமத்துவ மக்கள் கழகத்தின் ஆதரவினை தெரிவித்தார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் உள்ளனர்.

# “மற்றவர்கள் மீது பழிபோடுவதற்குப் பெயர்தான் மோடி பார்முலாவா?”

## அமைச்சர் எஸ்.இரகுபதி கேள்வி!

*நாகர்கோயில், மார்ச் 6-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி நேற்று (05-03-2024) நாகர்கோயில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது மற்றவர்கள் மீது பழி போடுவதற்குப் பெயர்தான் மோடி பார்முலவா? எனக் கேள்வி எழுப்பினார்.

செய்தியாளர்களுக்கு அமைச்சர் எஸ்.இரகுபதி அளித்த பேட்டி வருமாறு:

போதைப்பொருட்களைத் தடுப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 10.08.2022 அன்று மாநில அளவிலான காவல் துறை அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி போதைப்பொருளே தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்பதற்கான நடவடிக்கையை எடுத்தார். கஞ்சா பயிரிடப்படாத பூமியாக உள்ளது தமிழ்நாடு.

பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுப் போதைப்பொருள் தடுப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. போதைப்பொருள் நடமாட்டம் இருந்தால் உடனடியாகத் தடுக்கப்பட்டு, காரணமானவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

கடந்த அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் அமைச்சரே குட்கா வியாபாரத்தில் உடந்தையாக இருந்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டது. அமைச்சராக இருந்தவர் மீது வழக்கு தொடர ஆளுநர் அனுமதி தந்துள்ளார். அப்படிப்பட்ட ஆட்சி அப்போது நடைபெற்றது.

தமிழ்நாட்டில் கஞ்சா கடத்தல், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட தொழில்களில் ஈடுபட்டவர்கள் 14 பேருக்குச் சிவப்புக் கம்பளம் விரித்துத் தங்கள் கட்சியில் சேர்த்துள்ளது பா.ஜ.க. அகில இந்தியளவிலேயே பா.ஜ.க.வில்தான் இதுபோன்ற தொழில்களில் ஈடுபடுபவர்கள் உறுப்பினர்களாக அதிகம் இருக்கிறார்கள்.

பிரதமர் மோடியின் சொந்த மாநிலம் குஜராத். இன்றைக்கு போதைப்பொருள் நடமாட்டம் என்பது அதிகமாக இருப்பது அவரது குஜராத்தில்தான். இப்படி எல்லாவற்றிற்கும் உடந்தையாக இருந்துவிட்டு, மற்றவர்கள்மீது பழி போடுவதற்குப் பெயர்தான் மோடி பார்முலாவா? என கேட்க விரும்புகிறோம்.

ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, வட கிழக்கு மாநிலங்களில் போதைப்பொருள் பயிரிடப்படுவதாகத் தகவல் உள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல, தமிழ்நாட்டு மக்கள் மீது தேர்தலுக்காகப் பழி போடுவதை பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

விமான நிலையம், துறைமுகங்களையெல்லாம் தனியாருக்குத் தாரைவார்த்துவிட்டது ஒன்றிய பா.ஜ.க அரசு. தனியாருக்குத் தாரைவார்த்தால் கட்டுப்பாடு தனியாரிடத்தில்தான் இருக்கும், அதற்குத்தான் தனியார்மயத்தை எதிர்க்கிறோம். தனியாரிடமிருந்து வாங்கியது அன்றைய ஒன்றிய அரசு, தனியாருக்கு இன்றைய ஒன்றிய அரசு கொடுப்பதற்குப் பெயர் மோடி பார்முலாவா? மோடியிசமா?



2019-இல் 11,418 கிலோ, 2020-இல் 15,144 கிலோ, 2021-இல் 20,431 கிலோ, 2022-இல் 28,381 கிலோ, 2023-இல் 23,364 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 2022-இல் 2,016 வழக்குகள் போடப்பட்டதில் 1,916 வழக்குகள் அதாவது 80% வழக்குகளில் தண்டனை பெற்றுள்ளனர். 418 வழக்குகளில் விடுதலையாகியுள்ளனர். 2023-இல் 3,567 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில் 2,988 வழக்குகளில் தண்டனை பெற்றுத்தரப்பட்டுள்ளது, 579 வழக்குகளில் விடுதலையாகியுள்ளனர்.

தமிழ்நாட்டு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தண்டனை பெற்றுத்தருவதில் தயக்கம் காட்டுவது கிடையாது. வருங்கால சந்ததியினரைப் பாழாக்கிவிடும் என்பதால் போதைப்பொருட்களைத் தடுப்பதற்கு முழுக் கவனம், முழு சக்தியையும் செலுத்தி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

**போதைப் பொருள் வழக்கில் பா.ஜ.க.வினர்!**

பா.ஜ.க.வைச் சேர்ந்த 14 பேர் மீது போதைப்பொருள் தொடர்பாக 23 வழக்குகள் உள்ளது. அவர்கள் குறித்த பட்டியல்

1. சரவணன், உறுப்பினர்
2. ராஜேஷ், சென்னை 109-ஆவது வட்ட தலைவர்.
3. விஜய நாராயணன், மத்திய சென்னை மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்
4. விஜயலட்சுமி, செங்கல்பட்டு வடக்கு மாவட்டத் தலைவர்
5. மணிகண்டன், தாழ்த்தப்பட்டோர் பிரிவு மண்டல தலைவர்
6. ஆனந்த ராஜேஷ், திருவள்ளூர் மேற்கு மாவட்ட எஸ்.சி./ எஸ்.டி. மாவட்ட துணைத் தலைவர்
7. ராஜா, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் நலன் அபிவிருத்தி பிரிவு செயலாளர்
8. குமார் எ குணசீலன், உறுப்பினர்
9. மணிகண்டன், உறுப்பினர்
10. லிவிங்கோ அடைக்கலராஜ், பெரம்பலூர் மாவட்ட முன்னாள் செயலாளர்
11. சிதம்பரம் எ குட்டி, தஞ்சாவூர் வடக்கு மாவட்ட துணைத்தலைவர்
12. ராஜா, விவசாய பிரிவு மாநிலச்செயலாளர்
13. சத்யா எ சத்யராஜ், உறுப்பினர்
14. காசிராஜன், மதுரை நகர இளைஞர் பிரிவு செயலாளர்

அண்ணாமலை பா.ஜ.க.வில் உள்ள நபர்களிடம் போதைப்பொருள் நடமாட்டத்தை முதலில் தடுக்கட்டும். அதே போல் குஜராத்திலும் தடுக்கட்டும். பா.ஜ.க. ஆளும் பிற மாநிலங்களிலும் போதைப்பொருள் நடமாட்டத்தைத் தடுக்கட்டும். அதன் பிறகு அவர் தமிழ்நாட்டில் போதைப்பொருள் தடுப்பதை மக்கள் இயக்கமாக மாற்றுவதைப் பார்க்கட்டும்.

போதைப்பொருள் கடத்துவது குறித்து தி.மு.க.விற்குத் தெரிந்திருக்க வாய்ப்பே கிடையாது. எங்களுடைய நோக்கம் அதைத்தடுக்கவேண்டும் என்பதுதான். போதைப் பொருள் நடமாட்டம் குறித்து அண்ணாமலைக்கு வேண்டுமானால் தகவல் தெரிந்திருக்கும். அதை அவர் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

தி.மு.க.வில் இருக்கும் உறுப்பினர் மீது ஒரு குற்றச்சாட்டு வந்தால் உடனடியாக அவர்களைக் கட்சியில் இருந்து நீக்கிவிடுகிறோம். குற்றப் பின்னணி உடையவர்களைக் கட்சியில் வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அவசியம் தி.மு.க.விற்கு என்றும் கிடையாது.

இல்லம் தேடிக் கல்வி என்ற திட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் விஜய பாஸ்கர், இல்லம் தேடி குட்கா என பேசியுள்ளார். ஆனால் அவர் மீதே வழக்கு உள்ளது என்பதை மறந்து விட்டுப் பேசியுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியுள்ளார்.

### தா.மோகன்குமார் தலைமையில், இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# 168 (அ) வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழன் பிரசன்னா – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – மு.மகேஷ்குமார் சிறப்புரை!

*சென்னை, மார்ச் 6-*

சைதை கிழக்கில் 168 (அ) வட்டத்தில் கழக தலைவர் தமிழக முதல்வரின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

தா.மோகன்குமார் எம்.சி. தலைமையில், இரா. துரைராஜ் எம்.சி, எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, துணைமேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 168வது (அ) வட்ட திமுக சார்பில் கழக தலைவர், தமிழக முதல்வரின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (05.03.2024 புதன்கிழமை) மாலை 6 மணியளவில் ஈக்காட்டுத் தாங்கல், பூந்தமல்லி சாலையில் உள்ள கங்கையம்மன் கோயில் அருகில் 168வது வார்டு மாமன்ற உறுப்பினரும், வட்டக் கழக செயலாளருமான தா.மோகன்குமார் தலைமையிலும் சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும் 13வது மண்டலக் குழு தலைவருமான இரா. துரைராஜ், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும் 10வது மண்டல குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும், வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், பகுதி பொருளாளர் ஆர்.அருணகிரி, மாவட்ட பிரதிநிதிகள் ச.சேகர், டி.வி.நரசிம்மன், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் ஆர்.டி. மூர்த்தி, வட்டக் கழக நிர்வாகிகள் ஏ.சீனிவாசன், ஜி. என்.நாராயணன், மீனாபரமானந்தம், ஹரியப்பன், என்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், எம்.லிங்கேஸ்வரன், டி.மனோகரன், பி. சென்னப்பன், எஸ்.அறிவானந்தம், எஸ்.தேவி, கு.வீராசாமி, கே.ராஜாராம், ஆர். குப்பன், கு.மோகன், ம.ராஜ்குமார் ஆகியோர் வரவேற்பில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக மாநில செய்தி தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, சைதைசம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் எல்.ஆரோக்கியராஜ், மு. ராஜா, க.மணி, கோட்டூர்சண்முகம், நேருநகர்பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதைசாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர். கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள் என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், எஸ்.ஜெ.சலாம், க.உமாபதி, வே.முருகன், ந.பாபு, மு. மகேஷ்லாரன்ஸ், இரா.சுதாபிரியன், ஜி.யோவான், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், எஸ்.கணேசன், ஏ.மஜீத், எஸ்.ரவி, தலைமை கழக பேச்சாளர்கள் க.ஒப்பிலாமணி, ஈகைதனசேகரன்,

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.அகஸ்டின், பி.செல்வம், க.வேல்முருகன், பார்சன்லோகு, கே.எஸ். பாபு, வ.கதிர்வேல், ஆர். செல்வம், எம்.மோகன்தாஸ், வி.பிரதாப், என்.சுதாகர், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் கொடி கே. பாலா, மே.குணா, பா.பரத்குமார், தி.கோகுலன், ப. அருண்குமார், கோ.ராஜன், ராஜாசம்பத், என்.சிலம்பரசன், எஸ்.நாகவேல், எலின் செல்வம், பரணிதரன், விஜி ஜெயராம், ரஞ்சித் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தின் நிறைவாக வட்ட துணை செயலாளர்கள் த.பாண்டியன், ஈ. தனசேகரன், எம்.ராஜி ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,3.3.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் அடையாறு பள்ளிப்பட்டு,சேவா சமாஜ் ஆதரவற்றோர் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு,கழக இலக்கிய அணி தலைவர், புலவர் இந்திர குமாரி அவர்கள் ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கினார்.உடன் மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ்,வட்டக் கழகச் செயலாளர் சண்முகம் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அரசின் திட்டங்கள் மக்களிடம் சென்றடைவதை உறுதி செய்திட

# “நீங்கள் நலமா?” புதிய திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, மார்ச் 6 -**

**‘திராவிட மாடல்’ நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் மக்கள் பயன்பெற்றிட தீட்டப்பட்ட திட்டங்கள் எண்ணிலடங்காதவை. அத்திட்டங்களின் பயன்கள் மக்களிடம் சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில், “நீங்கள் நலமா?” எனும் புதிய திட்டத்தினை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று காலை சென்னையில் தொடங்கி வைக்கிறார்.**

**இது பற்றிய விவரம் வருமாறு :-**

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மே 7ஆம் தேதி அன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே, முத்தான 5 திட்டங்களுக்கு கையெழுத்திட்டார்.

**திராவிட மாடல் அரசின் வரலாற்று திட்டங்கள்!**

இத்திட்டங்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. அதிலும் அரசுப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்கலாம் என்ற பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் இந்தியா விலேயே முன்மாதிரியான திட்டமாகத் திகழ்ந்தது. “விடியல்” பேருந்து பயணத் திட்டம் மூலமாக 445 கோடி முறை பயணித்து பெண்கள் பயனடைந்து இருக்கிறார்கள்.

**மகளிர் உரிமைத் தொகை ரூ.1000**

அதுமட்டுமல்லாமல்,

மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை, “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை”யாக ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் பெறுகிறார்கள்.

“மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தால் பயனடைந்தவர்கள் ஒரு கோடி பேர்.

**சிறார்களுக்கு காலை உணவுத்திட்டம்!**

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 16 லட்சம் பிள்ளைகள் வயிறார உணவு உண்கிறார்கள்.

நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 13 லட்சத்து 12 ஆயிரம் பேர்.

கூட்டுறவுக் கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 1 லட்சம் பேர்.

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் “புதுமைப் பெண்” திட்டப்படி 2 ஆண்டுகளுக்கு, 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள்.

‘நான் முதல்வன்’ திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**இல்லந்தோறும் கல்வித் திட்டம்!**

‘இல்லம் தேடி கல்வித்திட்டத்தில்’ 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிப் பிள்ளைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

62 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பை பெற்றுள்ளது.

2லட்சம் உழவர்கள் புதிய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள்.

உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 30 லட்சம் முதியோர் மாதந்தோறும் பெறுகிறார்கள்.

உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 5 லட்சம் மாற்றுத்திறனாளிகள் மாதந்தோறும் பெறுகிறார்கள்.



கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தால் பயனடைந்தவர்கள் 42 லட்சத்து 33 ஆயிரம் பேர்.

முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு தொகை உயர்ந்த பிறகு பயன்பெற்றவர்கள் 20 லட்சத்து 55 ஆயிரம் பேர்.

**இலட்சக்கணக்கானோருக்கு அரசின் நலஉதவிகள்!**

மீன்பிடி கால உதவித்தொகை பெற்றவர்கள் 4 லட்சத்து 86 ஆயிரம் பேர்.

மீன்பிடி இல்லாத கால உதவித்தொகை பெற்றவர்கள் 5 லட்சத்து 15 ஆயிரம் பேர்.

‘நம்மைக் காக்கும் 48’ திட்டத்தால் பயனடைந்தவர்கள் 2 லட்சம் பேர்.

‘முதல்வரின் முகவரி திட்ட’த்தினால் பயனடைந்தவர்கள் 19 லட்சத்து 69 ஆயிரம் பேர்.

‘மக்களுடன் முதல்வர் திட்ட’த்தின் மூலமாக, 3 லட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 45 லட்சம் குடும்பங்களுக்கு ரூ. 6 ஆயிரம் மற்றும் ரூபாய் ஆயிரம் என நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, இந்த 33 மாதங்களில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று 6 ஆயிரத்து 569 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உதவிகளை இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குவதைப் போன்று மாணவர்களுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் உள்பட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து வரும் நிதியாண்டில் செயல்படுத்திட உள்ளார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!**

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை திறந்து வைத்து சிறப்புரை யாற்றுகையில்;

“அரசின் இந்தத் திட்டங்களுடைய பயன்கள் எல்லாம் உரிய மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்று உறுதி செய்வதற்கு, ஒரு புது திட்டத்தை வருகின்ற ஆறாம் தேதி சென்னையில் தொடங்கி வைக்கப் போகிறேன். அந்தத் திட்டத்தின் பெயர் என்ன தெரியுமா? ‘நீங்கள் நலமா?’ இந்த “நீங்கள் நலமா?” திட்டத்தின் மூலமாக, முதலமைச்சரான நான் உட்பட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், அனைத்துத் துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என பொதுமக்களான உங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு, கருத்துக்களை கேட்கப் போகிறோம்.

உங்கள் கருத்துக்களின் அடிப்படையில், நம்முடைய அரசின் திட்டங்கள் மேலும் செம்மைப்படுத்தப்படும். முதற்கட்டமாக, நலத்திட்டங்கள் பற்றியும் அடுத்த கட்டமாக, அரசுத் துறைகளால் வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றியும் கருத்துக்கள் பெற்று அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என்று குறிப்பிட்டார்.

**சென்னையில் இன்று நிகழ்ச்சி!**

அதன்படி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தபடி திட்டங்களின் பயன்களை மக்கள் உறுதி செய்திட “நீங்கள் நலமா?” என்ற புதிய திட்டம் இன்று (6.3.2024) காலை சென்னையில் முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் தொடங்கி வைக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று “நீங்கள் நலமா?” திட்டத்தை தொடங்கி வைத்து சிறப்பிக்கிறார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

---

## ‘இந்தியா’ கூட்டணி வெல்வது உறுதி!

# மோடியின் பொய், பித்தலாட்ட, மக்கள் விரோதச் செயல் விரைவில் அம்பலமாகும்!

### தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. - எஸ்.டி. பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் அறிக்கை!

*சென்னை, மார்ச் 6-*

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., எஸ்.டி., பிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பெரும் முயற்சியில் இந்தியா கூட்டணி கட்டமைக்கப்பட்டது. அப்போதிலிருந்து திரா விட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்றாலே பிரதமர் மோடிக்கு கை, கால் எல்லாம் உதறல் எடுக்கத் தொடங்கிவிட்டது.

இந்தியாவில் எந்த மூலைக்குச் சென்றாலும் ஸ்டாலின்தான் அவரது முதல் குறியாக இருக்கிறது. அந்த அளவுக்கு மோடியின் கண்களில் பயத்தைக் காட்டியிருக்கிறார் நமது திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

வட மாநிலங்களில் சமீப காலமாக மோடிக்கும் பா.ஜ.க.வுக்கும் எதிராக இளைஞர்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த பத்தாண்டு கால மோடியின் கொடுங்கோல் ஆட்சியால் அனைத்துத் தரப்பினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பெரும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிறார்கள். ஏழைகள் பரம ஏழைகளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை வட இந்திய மக்களும் உணரத் தொடங்கி விட்டார்கள். வாக்குப் பதிவு இயந்திரத்தில் முறைகேடு செய்தாவது ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் தான் 400 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று பா.ஜ.க. வினர் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்.

வட இந்தியாவில் பருப்பு வேகாமல் போனால் என்ன செய்வது? என்ற பயத்தில் தான் தமிழ்நாட்டில் ஓட்டுக்களைப் பொறுக்க முடியுமா நோக்கில் தொடர்ந்து இங்கு வந்து கொண்டிருக்கிறார் மோடி. 3 சதவிகித வாக்குகள் கூட இல்லாத பா.ஜ.கவுக்கு. 18 சதவிகித வாக்குகள் இருப்பதாக சொல்லி ஊடகங்களும் ஊதுகுழலாக மாறியிருக்கின்றன.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த பா.ஜ.க. கூட்டத்தில் பேசிய மோடி, ஆதாரமில்லாமல் ஏதோ வழிப்போக்கர் போல பொத்தாம் பொதுவாக தி.மு.க. மீது சேற்றை வாரி இரைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

பா.ஜ.க. தொடங்குவதற்கு முன்பே ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்த கட்சி தி.மு.க. ஆட்சியில் அமர்ந்தது முதல் சமூக நீதியை நிலைநாட்டும் அரசாக செயல்பட்டு வருகிறது.

காற்று, தண்ணீர், உணவு, உடை, உறைவிடம், மொழி, மருத்துவம், கல்வி, பாதுகாப்பு, சாலை வசதி, மின்சாரம், போக்குவரத்து, உள்கட்டமைப்பு, தொழிற்சாலை, தொலைத் தொடர்பு என ஒவ்வொன்றிலும் தி.மு.க. தடம் பதித்திருக்கின்றது.

காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரியும். அதேபோல் தேர்தல் நன்கொடை பத்திரம் என்ற மெகா ஊழலில் ஈடுபட்டு உச்ச நீதிமன்றத்தில் குட்டுப்பட்ட மோடி, இன்றைக்கு ஆதாரமே இல்லாமல் தி.மு.க. மீது ஆதாரமற்ற ஊழல் புகாரைச் சொல்லியிருக்கிறார்.

சென்னை வெள்ளத்தைப் பற்றி உருகியிருக்கிறார். ஆடு நனையுதே என்று ஓநாய் அழுத கதை தான் நினைவுக்கு வருகிறது. சென்னை பெரு வெள்ளத்திலிருந்து மக்களை ஓரிரு நாட்களில் அதிரடி நடவடிக்கைகள் மூலம் மீட்டு எடுத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் வடிகால் திட்டப் பணிகளுமே அதற்குக் காரணம்.

இதற்காக மக்கள் அவரை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதுவரை முதலமைச்சர் கேட்ட பேரிடர் நிவாரணத் தொகையில் சல்லிக்காசு கூட தராமல் தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் ஏமாற்றி வருகிறார் மோடி. இந்த லட்சணத்தில் பேரிடரை சிறப்பாக கையாண்டு சொந்த நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண உதவி வழங்கிய முதலமைச்சரை குறை கூற மோடிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

ஒன்றிய அரசின் திட்டம் என்பது இந்தியாவுக்கானது. இதில் காப்பியடிக்க என்ன இருக்கிறது. கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு சொத்தில் உரிமை, நிலச்சீர்திருத்தம் ஆகிய திட்டங்களை காங்கிரஸ் ஒன்றியத்தில் ஆண்ட போது செயல்படுத்தியது. இந்தியாவுக்கே முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருவது தி.மு.க.தான்.

மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற சுயச்சார்பு திட்டங்களை பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் உள்ளிட்ட நாட்டின் பல மாநிலங்கள் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இது திராவிட மாடல் அரசுக்கு கிடைத்த வெற்றி. இந்த நிலையில் ஒன்றிய அரசின் திட்டங் களுக்கு தமிழ்நாடு அரசு ஸ்டிக்கர் ஒட்டுவதாகக் கூறுவது உச்சக்கட்ட நகைச்சுவையாகும்.

**நாடே வெட்கப் படுகிறது!**

தமிழ்நாட்டில் போதைப் பொருள் அதிகமாக இருக்கிறதாம். போதைப் பொருளின் தலைநகரம் என்று இன்றைக்கு அழைக்கப்படும் மாநிலம் குஜராத். அங்கு போதை சாம்ராஜ்யத்தை உருவாக்கியதில் 5 முறை முதலமைச்சராக இருந்த மோடிக்கு நிச்சயம் பங்களிப்பு உண்டு. அங்கிருந்து தான் மற்ற மாநிலங்களுக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுகின்றன. இந்த உண்மையை மறைத்து விட்டு பொய்யை மட்டும் பேசும் ஒருவரை பிரதமராகப் பெற்றதற்கு நாடே வெட்கப்படுகிறது.

மோடி அவர்களே, இந்தியா கூட்டணி வெல்வது உறுதி. ரபேல் விமான பேர ஊழல் முதல் நீங்கள் செய்த அனைத்து ஊழல்களும் அம்பலத்துக்கு வரும். அன்றைய தினம் நீங்கள் அடித்த கொள்ளையும் உங்கள் பினாமி தொழிலதிபர்கள் அடித்த கொள்ளையும் வெளிச்சத்துக்கு வரும். உங்கள் தலைமையில் இந்தியாவில் சுரண்டிய வளங்களை எல்லாம் மீட்டு மீண்டும் நாட்டுக்கே ஒப்படைப்போம். இதனை காங்கிரஸ், தி.மு.க பங்கேற்றுள்ள இந்தியா கூட்டணி செய்து காட்டும். அன்றைய தினம் மோடியின் பொய், பித்தலாட்ட, மக்கள் விரோதச் செயல் அம்பலமாகும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கழக தலைவர் – முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு. சேப்பாக்கம் பகுதி 62வது வட்ட தி.மு.க. சார்பில் வட்ட கழகச் செயலாளர் ஆர்.ஜெகதீசன் எம்.சி. ஏற்பாட்டில் 1000 பேருக்கு அறுசுவை பிரியாணியை – பகுதிக் கழகச் செயலாளர் 9வது மண்டலக் குழு தலைவருமான எஸ். மதன்மோகன் எம்.சி. பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

---

## இன்று பழநியில் தொடங்குகிறது!

# அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, மார்ச் 6-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணம் இன்று (06.03.2024) பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலிலிருந்து தொடங்குகிறது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருத்தலங்களுக்கும் சுற்றுலாத் துறையுடன் இணைந்து ஆன்மிகப் பயணம் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது. கடந்தாண்டு முதல் இராமேசுவரத்திலிருந்து காசிக்கு பக்தர்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 200 பக்தர்கள் வீதம் ஆண்டிற்கு 5 முறை அதாவது 1,000 பக்தர்களை அழைத்து சென்று தரிசனம் செய்து வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதன் முதற்கட்டப் பயணம் கடந்த ஜனவரி 28 அன்று சென்னை, கந்தக்கோட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. முதற்கட்டப் பயணத்தில் பங்கேற்ற 207 மூத்த குடிமக்களும் அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் சிறப்பாகவும், மிகுந்த மனநிறைவை தந்ததாகவும் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, திண்டுக்கல், திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மண்டலங்களை சேர்ந்த 200 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணம் இன்று (மார்ச் 6) பழநி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயி லிலிருந்து தொடங்குகிறது.

பின்னர், திருச்செந்தூர், பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை மற்றும் திருத்தணி ஆகிய திருக்கோயில்களுக்கு தரிசனம் செய்த பின் பழநியில் நிறைவடைகிறது. இந்த ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் மூத்த குடிமக்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுடன் போர்வை, துண்டு, குளியல் சோப், டூத் பிரஷ், பேஸ்ட், முகம் பார்க்கும் கண்ணாடி, தேங்காய் எண்ணெய், சீப்பு போன்ற பொருட்கள் அடங்கிய பயணவழிப் பைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், அவர்களுக்கு உதவியாக செயல் அலுவலர்கள், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினரும் உடன் செல்கின்றனர் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



கழக தலைவர், முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஏற்பாட்டில் படப்பை பேருந்து நிலையம் அருகில் கழக கொடியேற்றி 1000 பேருக்கு அறுசுவை உணவினை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளனர்.



கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழக குழு தலைவருமான, டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் அண்மையில் திருமணம் நடைபெற்ற ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான, என்.சந்திரனின் மகன், ச.மகேஷ், ம.ஷிவானி ஆகியோரை வாழ்த்தினார். உடன் 167–வது மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், 167–வது வட்ட கழக செயலாளர் ஜெ.நடராஜன், 166–வது வட்டக் கழக செயலாளர் இ. உலகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.03.2024) அடையாறு மண்டலம், வார்டு 169க்குட்பட்ட ஜோதியம்மாள் நகரில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்குக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு. மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர். துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காயும் கூட்டத்திடமிருந்து

# இந்தியாவை மீட்க - பெரியார் மண்ணிலே உறுதியேற்போம்!

## ஈரோடு பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

ஈரோடு,மார்ச்.6–

**முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா, நிதிநிலை அறிக்கை விளக்கம், தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கப் பொதுக்கூட்டம் ஈரோடு நகரில் மார்ச் 4 ஆம் தேதி நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் துணைத் தலைவருமான கனிமொழி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றுகையில், 'இந்தியாவை மீட்க பெரியார் மண்ணிலே உறுதியேற்போம்' என சூளுரைத்தார்.**

இக்கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை வருமாறு:

"மார்ச் 2 ஆம் தேதி தஞ்சையிலே இதேபோன்ற பொதுக்கூட்டத்துக்கு சென்றிருந்தேன். அங்கே, 'என் தந்தை வீட்டுக்கு வந்தது போன்ற உணர்வு இருந்தது' என்று கூறினேன். தஞ்சாவூர் எனது தந்தை வீடு. இந்த ஈரோடோ தமிழ்நாட்டுக்கெல்லாம் தந்தை வீடு. தந்தை பெரியாரின் மண்ணுக்கு வந்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி.

### சிம்ம சொப்பனமாக திகழும் தந்தை பெரியார்!

தந்தை பெரியாரின் பெயரை சொன்னாலே சிலருக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறது. ஏனென்றால் இன்று யாரெல்லாம் அரசியலை மதத்தோடு கொண்டு வந்து இணைத்து, அதன் மூலம் மக்களை ஏமாற்றி குளிர் காயலாம் என்று நினைக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் . இன்றுவரை சிம்மசொப்பனமாக இருப்பது தந்தை பெரியார்தான்.

அதனால்தான் பெரியார் சிலைகளை பார்த்தாலே காவியடிப்பது அவமதிப்பது போன்றவற்றை செய்கிறார்கள். இதெல்லாம் எதை தெளிவாக சொல்கிறது என்றால், நாங்கள் எப்படி பெரியாரை மறக்கவில்லையோ, அதேபோல நீங்களும் பெரியாரை மறக்கவில்லை.

அவருடைய கருத்தியல் என்பது உங்களை அச்சுறுத்தக் கூடிய பயமுறுத்தக் கூடிய ஒன்றாகத்தான் இன்றுவரை இருக்கிறது. இத்தனை ஆண்டுகள் ஆன பின்னாலும் உங்களை ஓட ஓட விரட்டுவது பெரியாரின் கருத்து.

அந்த பெரியாரின் கருத்துகளை மையமாக வைத்து திராவிட மாடல் ஆட்சியை உருவாக்கியவர் தலைவர் கலைஞர். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். இந்த சமூகத்தில் யாரெல்லாம் ஒதுக்கப்பட்டார்களோ ஒடுக்கப்பட்டார்களோ அவர்களுக்கெல்லாம் தலை நிமிர்ந்து வாழக் கூடிய சமமான வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று வாழ்நாளெல்லாம் பாடுபட்டவர் தலைவர் கலைஞர்.

### வாக்குறுதிகளை நிறைவேற்றியவர் கலைஞர்!

தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான் பெண்களுக்கு சொத்திலே சமபங்கு உண்டு என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. அதுவரைக்கும் பெண்கள் சொத்தில் பங்கு கேட்டால், 'அதான் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சுல்ல, போயிட்ட இரு' என்பார்கள். ஆனால் கலைஞர் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு சட்டம் கொண்டுவந்த பிறகு சொத்தில் பங்கு கேட்டால் கொடுத்துதான் ஆக வேண்டும். பெண் பிள்ளைக்கு உரிமை இல்லை என்று சொல்லும் சகோதரன் இருக்க முடியாது.

அதேபோல பெண்களின் படிப்பில் மிக முக்கிய மாற்றங்களை செய்தது தலைவர் கலைஞர். பெண் பிள்ளைகளின் படிப்பை பாதியில் நிறுத்தி விடுகிறார்கள் என்பதால், 'கல்யாணச் செலவுக்குதானே படிப்பை நிறுத்துகிறாய்? பெண்ணை பத்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தால் நானே கல்யாண செலவை ஏற்கிறேன்' என்று அறிவித்தார் கலைஞர். அந்த பெண் பத்தாவது வரை படித்துவிட்டால், எப்படியாவது மேற்கொண்டு பிளஸ்டூ படித்து கல்லூரிக்கு சென்றுவிடுவார் என்று கலைஞர் நம்பினார்.

அதேபோல பெண்களுக்கு கேஸ் ஸ்டவ் தருவேன் என்று தேர்தல் வாக்குறுதியளித்தார் கலைஞர். வாக்குறுதியளிக்கும்போது எத்தனை பர்னர் கொண்ட ஸ்டவ் என்று சொல்லவில்லை. வெற்றி பெற்று ஆட்சி அமைத்த பிறகு... அதிகாரிகள், 'நீங்க ரெண்டு பர்னர் கொண்ட ஸ்டவ் கொடுக்க ஆசைப்படுறீங்க. ஆனால் ஒரு பர்னர் கொண்ட ஸ்டவ் கொடுத்தா செலவு பாதியாக குறையும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கு கலைஞர், 'நான் செலவை மிச்சம் பண்றத்துக்காக ஆட்சியில இல்லை. அந்த பெண்கள் அடுப்படியிலயே தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பர்னர் கொண்ட ஸ்டவ் கொடுத்தால் ஒன்றில் சாதம், இன்னொன்றில் குழம்பு வைத்து விட்டு சீக்கிரம் சமையலை முடித்துவிட்டு வெளியே வந்து உலகம் என்னவென்று தெரிந்துகொள்வார்கள்' என்று பெண்களுக்காக அன்றே சிந்தித்தவர் தலைவர் கலைஞர்.

### கல்லூரி மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய்!

இன்று தலைவர் கலைஞர் ஆட்சியின் நீட்சியாக அன்று பத்தாம் வகுப்பு வரை படிப்பதற்கு உதவிய கலைஞரின் தொடர்ச்சியாக, அந்த பெண்கள் கல்லூரிக்கு சென்று படிக்கும்போது மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார் அண்ணன் முதலமைச்சர் தளபதி. கல்லூரிக்கு போக கூடிய பெண்ணுக்கு பேப்பர், பேனா, உள்ளிட்ட செலவுக்கு காசு கேட்டால், 'இதுக்குதான் உன்னை காலேஜுக்கு அனுப்பமாட்டேன்'னு சொன்னேன் என்பார்கள். அந்த மனவலி கூட மாணவிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரிகளுக்கு செல்லும் மாணவிகளுக்கு ஓர் அண்ணனாக தந்தையாக புதுமைபெண் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் தந்திருக்கிறார்.



கலைஞர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் விவசாயக் கடன்களை ரத்து செய்தார். நமது தளபதி ஆட்சிக்கு வந்தவுடன் பெண்களுக்கு கட்டணமில்லாமல் பேருந்து பயணத்தைத் தந்தார். அதன் பெயர் ஏன் விடியல் பயணம் என்றால்... இருட்டுச் சிறைக்குள் இருந்து பெண்களுக்கு விடுதலை அளித்து விடியல் வெளிச்சத்தைக் காட்டுகிற பயணமாக இருக்கிறது என்பதால்தான். இன்று பெண்கள் வீட்டை விட்டு வெளியே போக, அம்மா வீட்டுக்குப் போக, நண்பர்களைப் பார்க்க, ஒரு வகுப்புக்குப் போக யாரிடமும் பஸ்ஸுக்கு காசு கேட்டு நிற்க வேண்டியதில்லை. இப்போது ஆண்கள்தான் பெண்களிடம் கேட்டு நிற்கிறார்கள்.

### ஒரு கோடியே 13 லட்சம் பேருக்கு கலைஞர் உரிமைத் தொகை!

இதேபோல வீட்டில் இருக்கும் பெண்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டால், 'சும்மாதான் இருக்கிறார்கள்' என்று சாதாரணமாக சொல்லுவார்கள். அதிகாலையில் எழுந்து, காபி, டிபன், மதிய சாப்பாடு, துணி துவைத்து காயப் போட்டு மடித்து வைக்க வேண்டும், பாத்திரம் தேய்த்து, பிள்ளைகளை பார்க்க வேண்டும், இரவு சமையல், சமையலறையை சுத்தம் செய்து பின் அனைவரும் தூங்கிய பிறகுதான் படுக்க வேண்டும்.

இந்த வேலையில் ஞாயிறு விடுமுறையெல்லாம் கிடையாது. தீபாவளி, பொங்கல் என்றால் டபுள் வேலை. இப்படி உழைத்துக் கொண்டிருக்கும் சகோதரிகளுக்கு ஒரு மரியாதையாக அங்கீகாரமாக மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார் முதலமைச்சர் தளபதி. கலைஞர் உரிமைத் தொகையாக அதை அளிக்கிறார். ஒரு கோடியே 13 லட்சம் பேருக்கு அளித்து வருகிறார்.

( பேசிக் கொண்டிருக்கும்போது அருகே இறைவணக்கத் ஒலி கேட்டதும் பேச்சை சில நிமிடம் நிறுத்துகிறார்)

அருகே இறைவணக்கம் செய்கிறார்கள். அதற்காக பேச்சை நிறுத்துகிறோம். பின் தொடங்குகிறோம். இதற்காக கூட்டத்தில் கைதட்டுகிறீர்கள். இதுதான் இந்தியா. இப்படித்தான் மத நல்லிணக்கம் கொண்ட, மதச்சார்பற்ற இந்தியா இருக்கிறது. ஆனால் ஒன்றியத்தில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சியில் மதத்தைப் பயன்படுத்தி மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் வெறுப்பு, காழ்ப்புணர்வை பரவச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

### பிரித்தாளும் சூழ்ச்சியை செய்யும் ஒன்றிய அரசு!

அவர்கள் அரசியலுக்காக மணிப்பூரில் பற்ற வைத்த நெருப்பு இன்று வரை அணையவில்லை. நாங்கள் மணிப்பூர் சென்று அந்த மக்களை சந்தித்தபோது யாரும் வீட்டில் இருக்க முடியாத நிலைமை. இரண்டு இனத்தவரும் பாதுகாப்பாக இல்லாததை உணரக் கூடிய நிலை. ஆயிரம் பேர் முன்னால் இரு பெண்கள் அவமானப்படுத்தப்பட்டு கூனிக்குறுகி நிற்கிறார்கள். அந்த பெண் போல ஏராளமான பெண்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பிரதமர் மோடி இன்றுவரை மணிப்பூர் பக்கம் செல்லவில்லை. அவர்களை சந்தித்து ஆறுதல் சொல்லை, அங்கே பிரச்சினையை பேசித் தீர்க்கவோ நேரமில்லை.

ஆனால் பிரதமருக்கு இப்போதெல்லாம் தமிழ்நாட்டுக்கு வருவதற்குதான் நேரம் இருக்கிறது. நேற்று வந்தார், முந்தநாள் வந்தார், போன வாரம் வந்தார், நாளை வருவார் என்கிறார்கள். தேர்தல் வரும் வரை தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டே இருப்பார்.

ஆனால் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். மோடி தமிழ்நாட்டிலேயே வந்து குடியேறினால் கூட அவருக்கு தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர் யார் என்று தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியும்.

### சாமானிய மக்களுக்காக பா.ஜ.க. செய்தது என்ன?

நம்மைப் பார்த்து இந்து விரோதி என்கிறார்கள்., மத நம்பிக்கை என்பது தனிப்பட்ட நம்பிக்கை, தனிப்பட்ட விஷயம். அதில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அரசாங்கம் பொதுவாக மக்களை பாதுகாக்க வேண்டும்.

இந்தியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி பெரும்பான்மை மக்கள் இந்துக்கள். யாரும் அதை மறுக்க முடியாது. அவர்கள் இந்த பெரும்பான்மை மக்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள்? ஒன்றும் இல்லை. இந்து மக்களில் பெரும்பான்மையாக இருப்பது ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதாரண சாமானிய மக்கள். இவர்களின் இட ஒதுக்கீட்டுக்காக பா.ஜ.க. என்ன செய்திருக்கிறது?

நம் வீட்டுப் பிள்ளைகளும் மருத்துவம் படித்து டாக்டர் ஆக வேண்டும் என்று தலைவர் கலைஞர் மாவட்டம் தோறும் அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கினார். அந்த அரசு மருத்துவக் கல்லூரிகளில் நம் வீட்டுப் பிள்ளைகள் படித்துவிடக் கூடாது என்பதற்காக நீட் தேர்வை கொண்டு வந்திருக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையில் பி.ஏ. , பி.காம்,என்று எதைப் படிக்க வேண்டுமென்றாலும் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். சாதாரண மக்கள் கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாது. அவர்களைப் பொறுத்தவரை இந்துக்கள் என்றால் மேல் சாதி என்று சொல்லப்படக் கூடிய சிலரை மட்டுமே கருதுகிறார்கள். ஆனால் பெரும்பான்மை மக்களுக்கு என்ன செய்தார்கள்?

இன்று விவசாயிகள் போராடுகிறார்களே அவர்கள் இந்துக்கள் இல்லையா? தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்துக்கள் இல்லையா?

பெண்களுக்கு இட ஒதுக்கீடு மசோதாவை கொண்டுவந்துவிட்டோம் என்றார்கள். ஆனால் அந்த மசோதா எப்போது நடைமுறைக்கும் வரும் என்று யாருக்கும் தெரியாது. இன்று உள்ளாட்சி அமைப்புகளில் ஐம்பது சதவிகிதம் கொண்டுவந்திருக்கிறோம்.,

### பெண்களை ஏமாற்றி விடலாம் என கருதும் பா.ஜ.க. அரசு!

ஆனால் அவர்கள் எப்படி தெரியுமா இட ஒதுக்கீடு அளிக்கிறார்கள்? முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துவார்களாம்... அதன் பின் தொகுதி மறுவரையறை செய்வார்களாம்... அதன் பின்னர்தான் மகளிருக்கு இட ஒதுக்கீடு வரும். மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது சாதாரண விஷயமா? அதன் பின் தொகுதி மறு வரையறை கொண்டு வரும்போது மாநிலங்கள் எதிர்க்கும், வழக்குத் தொடுக்கும். இதற்கெல்லாம் பிறகுதான் மகளிர் இட ஒதுக்கீடு வரும். அதனால் முடியவே முடியாது என்று தெரிந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து விட்டு மகளிர்க்கு இட ஒதுக்கீடு அளித்து விட்டோம் என்று பெண்களை ஏமாற்றி விடலாம் என்று கருதுகிறது பா.ஜ.க..

### தேர்தல் முடிந்ததும் அ.தி.மு.க. பா.ஜ.க. இரண்டும் ஒட்டிக் கொள்ளும்!

2014 இல் மோடி இந்தப் பக்கம் வந்தபோது சொன்னார். இங்கே இருக்கக் கூடிய ஜவுளித் தொழிலை தரமுயர்த்துவதற்கான மிகப்பெரிய பூங்காவை அமைத்துத் தருவேன் என்று சொன்னார். 2024 வந்துவிட்டது. பூங்காவும் வரவில்லை. எதுவும் வராது.

நம்மைப் பார்த்து ஸ்டிக்கர் ஒட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். பிரதமரின் வீடு கட்டும் திட்டத்துக்கு பிரதமர் கால் வாசி பணம் கொடுக்கிறார், முக்கால் வாசி பணத்தை நம்முடைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் கொடுக்கிறார். ஆனால் இதில் ஸ்டிக்கர் ஒட்டு வது யார்? ஏற்கனவே எல்லாவற்றுக்கும் ஸ்டிக்கர் ஒட்டிய அதிமுக, இப்போது ஸ்டிக்கர் ஒட்டும் பா.ஜ.க.... இந்த இரண்டும் தேர்தலுக்காக பிரிந்து நிற்கிறது. தேர்தல் முடிந்ததும் மீண்டும் ஒட்டிக் கொள்ளும். அதனால் இவர்களை நம்பாதீர்கள்.

இந்த ஈரோட்டில் பெருந்துறையில் 100 பெட் கொண்ட உயர் மருத்துவமனை தரமுயர்த்தப்படும் என்று அறிவித்து 40 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜவுளிப் பூங்காவை அவர்கள் தரமாட்டார்கள் என்று அறிந்து... 10 ஜவுளிப் பூங்காக்களுக்காக 20 கோடி ஒதுக்கியிருக்கிறார் நமது முதலமைச்சர்.

பழமையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக கொடுமுடியில் உள்ள மிகப் பழைய பயணியர் விடுதியை செப்பனிட்டு, வரக் கூடிய மக்களை ஈர்க்கக்கூடிய அளவுக்கு மாற்ற 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி மக்களுக்கான அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு.

### நிதிநிலை அறிக்கையிலே பல திட்டங்கள் அறிவிப்பு!

பெண்களுக்கு மட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையிலே இளைஞர்கள் கல்லூரிக்கு சென்று படிக்கும்போது தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மதியம் வரை பசியோடு இருக்கக் கூடாது என்று காலை உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பாடுபட்டு வருகிறோம்.

ஆனால் அங்கே இருக்கும் ஒன்றிய அரசு என்ன செய்திருக்கிறது? ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் செல்லாது என்றார்கள். இத்தோடு கருப்புப் பணம் ஒழிந்துவிடும், நாடு இனி வேறு மாதிரி ஆகிவிடும் என்பார்கள். வங்கி வாசலில் காத்திருந்து நாடு முழுதும் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துபோனார்கள். அந்த உயிர்த் தியாகம் எதற்காக? இன்றுவரை அதை நியாயப்படுத்த முடியவில்லை. ஆயிரம், ஐநூறுக்கு பதில் இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டுவந்தார்கள். இப்போது இரண்டாயிரம் ரூபாயும் செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். இதன் பெயர்தான் துக்ளக் தர்பார்.

பணமதிப்பிழப்பு வந்த பின் சிறு குறு தொழில்கள் ஏராளமானவை முடங்கியது. அவர்களை கைதூக்கிவிட எதுவும் செய்யாமல் ஜிஎஸ்டி கொண்டுவந்து தெரிந்த பாக்கி., தெரியாத பாக்கி என திணித்து... இன்று சிறு குறு தொழில்களை எல்லாம் மூட வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் முதுகெலும்பான சிறு குறு தொழில்களை முடக்கி, அதிலே வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களை எல்லாம் வேலை இழக்கச் செய்திருப்பதுதான் மோடியின் ஆட்சி.

ஆனால் நாட்டின் தனி நபர் வருமானம் அதிகரித்திருக்கிறது என்கிறார்கள். அதானி, அம்பானியின் வருமானம்தான் பா.ஜ.க. ஆட்சியில் அதிகரித்திருக்கிறது.

இந்த ஊரில் இருக்கும் ஒருவர், பா.ஜ.க.வுக்கு ஊழலே தெரியாது.. திராவிடக் கட்சிகள்தான் ஊழல் கட்சிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். உலகத்திலேயே மிகப்பெரிய ஊழல் எலக்டரல் பாண்ட் தான். அதை சட்டமாக்கி யார் எந்த கட்சிக்கு எவ்வளவு நிதி கொடுக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. இந்தியாவில் உள்ள எல்லா கட்சிகளுக்கும் வந்த நிதியைவிட மூன்று மடங்கு அதிகமாக நிதி வசூலித்துள்ளது பா.ஜ.க.. உச்ச நீதிமன்றம் இந்த எலக்ட்ரல் பாண்டுகளை செல்லாது என்று தீர்ப்பளித்து. யார் யார் எவ்வளவு நிதி கொடுத்தார்கள் என்ற விவரங்களை வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டது. ஆனால் இப்போது அந்த விவரங்களை வெளியிட அவகாசம் அளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திடம் அபிடவிட் போட்டிருக்கிறார்கள். மடியிலே கனம் இருப்பதால்தானே இந்த பயம். இதற்கு பெயர் ஊழல் இல்லையா? ஊழலை சட்டமாக்கினால் அது ஊழல் இல்லையா?

இவர்கள் எந்த மக்களைப் பற்றியும் அக்கறை இல்லாதவர்கள். விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கும்போது ஓர் அமைச்சரின் மகன் வண்டியை விட்டு கொலை செய்கிறார். பத்திரிகையாளர்களை, எதிர்க்கருத்து உடையவர்களை எல்லாம் கைது செய்து நாட்டையே சர்வாதிகாரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு சுதந்திரப் போராட்டம் என்று தளபதி சொன்னதுபோல மறுபடியும் நாட்டின் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, ஒருவரை ஒருவர் நேசித்து வாழ, அடுத்த தலைமுறையினர் அனைத்து வாய்ப்புகளையும் பெறுவதற்கு... இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கடமை நாம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

நம் பிள்ளைகளுக்கு நாம் தரப் போகிற பரிசு பாதுகாப்புதான். அந்த உணர்வோடு இந்தத் தேர்தலில் வாக்களியுங்கள். மக்களை பிளவுபடுத்து பவர்களுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்பதை சொல்லித் தாருங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஈரோடு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான முத்துசாமி, உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் கந்தசாமி, மாநில மகளிரணி தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநில நெசவாளர் அணி செயலாளர் சச்சிதானந்தம் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம் பட்டரை பெரும்புதூர் அரசு அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி 1 இலட்சம் விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 1674 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார் உள்பட பலர் உள்ளனர்.

# பாசிச பா.ஜ.க. வீழட்டும்...பெண்கள் அச்சமின்றி வாழட்டும்.. 5

**ஸ்பெயின் நாட்டு பெண்ணிற்கு பாலியல் கொடுமை :**

உலகின் 66 நாடுகளில் சுற்றுப்பயணம் செய்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த தம்பதியினர் இந்தியா வந்திருக்கும் நிலையில், அப்பெண் ஜார்கண்டில் கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டிருப்பது உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் தலைகுனிவைஏற்படுத்தியுள்ள இந்த கொடூரத்தைத் தொடர்ந்து மோடியை நோக்கி கண்டனக் குரல்கள் எழத் தொடங்கியுள்ளன.

ஜார்கண்டில் பா.ஜ.க. ஆட்சி இல்லையே, எனில் இதற்கு மோடியை நோக்கி ஏன் கேள்வி எழுப்பப்பட வேண்டும் என்று நீங்



கள் நினைக்கக் கூடும். இசுலாமியர்கள், கிறிஸ்தவர்கள் என்று மதவெறியைத் தூண்டி வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் மதச் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பில்லாத சூழலை ஏற்படுத்தியதில் மோடிக்கும் அவரது சித்தாந்தத்திற்கும் பெரும் பங்குண்டு.

அது மட்டுமல்ல, பாலியல் வல்லுறவு குற்றவாளிகளை பா.ஜ.க. தொடர்ந்து பாதுகாப்பதும், அவர்களுக்கு பா.ஜ.க.விலும், பா.ஜ.க. ஆளும் அரசுகளிலும் அதிகாரம் வழங்குவதும் குற்றவாளிகளுக்கு ஊக்கமளித்து வந்ததைபல முறை நான் சுட்டிக்காட்டி வந்துள்ளேன். அதன் விளைவே இன்று ஸ்பெயின் பெண்மணிக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

பாசிச பா.ஜ.க.வின் பெண்கள் விரோதச் செயல்பாடுகளை பட்டியலிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**பெண்களுக்கு எதிரானது பா.ஜ.க. :**

**பெண்களை போகப்பொருளாக, அடிமைப் பண்டமாக பார்ப்பதுதான் பா.ஜ.க.வின் அடிப்படை சித்தாந்தம்.குஜராத்தில், மோடி**



**முதலமைச்சராக இருந்த போது நடைபெற்ற இசுலாமியர்களுக்கு எதிரான கலவரம் நாம் அனைவரும் அறிந்த ஒன்று.**

**அக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர்தான் பில்கிஸ் பானு. 5 மாத கர்ப்பிணியான இவரை மதவெறிக் கூட்டம் கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்கிறது.அவரின் கைகளில் இருந்து பில்கிஸ் பானுவின் 3 வயது குழந்தையை பிடுங்கி தரையில் அடித்து அக்குழந்தையைக் கொடூரமாகக் கொல்கிறது.**

இதயம் உள்ள ஒவ்வொருவரையும் உலுக்கிய இந்த கொடூரத்தை எதிர்த்து பில்கிஸ் பானு சட்டப் போராட்டத்தை பல ஆண்டுகள் நடத்தினார்.ஒரு வழியாக குற்ற வாளிகள் 11 பேருக்கு ஆயுள்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

ஆயினும் குற்றவாளிகள் வருடத்தின் பெரும்பாலான நாட்கள் பா.ஜ.க. அரசு கொடுத்த பரோலில் வெளியில் சுற்றி வந்தனர். உச்சபட்சமாகஇந்தியாவின் 75வது சுதந்திர தினத்தை நாம் எல்லோரும் தேசியக் கொடியேற்றி மிட்டாய் கொடுத்து கொண்டாடிக் கொண்டிருந்த போது, பா.ஜ.க. அரசு அந்த 11 கொடூர குற்றவாளிகளையும் விடு



தலை செய்தது. அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக அமைக்கப்பட்டகுழுவில் இடம்பெற்றிருந்த பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், "அந்த 11 பேரும் உயர்குடியைச் சேர்ந்தவர்கள், எனவே அவர்கள் நல்லவர்கள் அதனால் அவர்களை பா.ஜ.க. அரசு விடுவிக்க முடிவெடுத்ததாகச்" சொன்னார்.

இதையெல்லாம் பார்த்து ஒட்டுமொத்த இந்தியாவும் அதிர்ந்து போய் நின்றது. மீண்டும் நீதிகேட்டு நீதிமன்றம் சென்றார் பில்கிஸ் பானு. அப்போது நீதிபதிகள் சொன்ன வரிகள்தான் இந்தியாவின் இன்றைய நிலைக்கான கண்ணாடி எனலாம். இவ்வளவு கொடூர குற்றவாளிகளை எப்படி விடுதலை செய்தீர்கள்என்று கேட்ட நீதிபதிகள், "இன்று பில்கிஸ் பானு, நாளை இது நாமாக இருக்கலாம்" என்று வேதனையுடன் கூறும் நிலைக்கு சூழலை பெண்களுக்கு எதிராக மாற்றியது மோடியின் பா.ஜ.க.

அதே குஜராத் கலவரத்தின் போது நரோடா பாட்டியா தொகுதியில் 97 இசுலாமியர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். அந்த வழக்கின் குற்றவாளி மனோஜ் குக்ரானிக்கு 2012 ல் ஆயுள் தண்டனை விதிக்கிறது நீதிமன்றம். அவரால் தேர்தலில் நிற்க முடியாது என்பதால் பா.ஜ.க. அந்த கொடூர குற்றவாளியின்மகள் பாயல் குக்ரானிக்கு அதே தொகுதியில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்தது பா.ஜ.க..




**தமிழ்க் கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்


நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டாலும் உடல் நலத்தை காரணம் காட்டி பிணையில் வெளியில் கொடூர குற்றவாளி மனோஜ் குக்ரானி அவரது மகள் பாயல் குக்ரானிக்குஆதரவாக அதே நரோடா பாட்டியா தொகுதியில் வாக்கு சேகரிக்கும் பணியில் இறங்கினார்.

இப்படி கொடூர குற்றவாளிகளை பா.ஜ.க. தொடர்ந்து ஆதரிப்பதன் விளைவாக இந்தியாவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் செய்வோருக்கு எந்த அச்சமும் இல்லாமல் போய்விட்டது.

**சிறுமிகளுக்கு பா.ஜ.க. இழைத்த அநீதி:**

கொடுமைகளின் உச்சமாக 2018 ல் காஷ்மீரில் ஹசீபா என்று சிறு குழந்தை மத வெறியர்களால் கோவிலுக்குள் வைத்து பாலியல் கொடுமை செய்யப்பட்டு கொல்லப்படுகிறாள்.

இதில் தொடர்புடைய குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என்று நாடே குரல் கொடுத்துக் கொண்டிருந்த போது, குற்றவாளிகளுக்கு ஆதரவான கருத்




துக்களை விதைக்கமுயற்சித்தனர் பா.ஜ.க.வினர். குற்றவாளிகளுக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்தும் அளவிற்கு சென்றனர்.

குற்றவாளிக்கு ஆதரவாக நடைபெற்ற பேரணியில் அம்மாநில பா.ஜ.க. அமைச்சர் சந்தர் பிரகாஷ் கங்கா உள்ளிட்ட முக்கிய பா.ஜ.க. நிர்வாகிகள் கலந்து கொண்டதைப் பார்த்து நாடே வெட்கித் தலை குனிந்தது.

இப்படி **காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பெண்களுக்கு எதிரான குற்றவாளிகளை ஊக்கப்படுத்தும் செயல்களை மோடியின் பா.ஜ.க. செய்து வந்ததன் விளைவு, பா.ஜ.க. கொடுத்த துணிச்சல் இன்று ஸ்பெயின் பெண்ணிற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி.**

**குஜராத், காஷ்மீர் என்றில்லை பா.ஜ.க. ஆளும் பல மாநிலங்களில் இதுதான் நிலை. உத்தரப்பிரதேசத்தில் பா.ஜ.க.வின் எம்.எல்.ஏ., குல்தீப் செங்கார் என்பவர் 2017ல் அவரது வீட்டில் வேலை பார்த்த 10**




**வயது சிறுமியை பாலியல் வல்லுறவு செய்கிறார். நீதி கேட்டு போராடிய சிறுமியின் தந்தையை பா.ஜ.க. காவல்துறை கைது செய்தது. அவர் காவல்துறை விசாரணையில் இருந்த போதே மரணமடைந்தார்.**

**ஒரு புறம் குற்றவாளிக்கு பாதுகாப்பு அளித்த பா.ஜ.க. மறுபுறம் பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை உயிரைப் பறித்தது. நீண்ட நெடிய சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, குல்தீப் சிங் செங்கார் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.**

**ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் குல்தீப் சிங் செங்காரால் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படுகிறது.குற்றவாளி யான குல்தீப் சிங் செங்காருக்கு ஆதரவளிக்கும் வகையில், அவரது மனைவி சங்கீதா செங்காரை அதே உன்னாவ் உள்ளாட்சித் தேர்தலில் பா.ஜ.க. சார்பாகவேட்பாள ராக களமிறக்கி அவரை வெற்றி பெறச் செய்கிறது பா.ஜ.க..**

**இப்படி எல்லா வகைகளிலும் குற்ற வாளிகளை தொடர்ந்து ஆதரித்து வருகிறது பாஜக . அதனால்தான் சொன்னேன்.நடைபெறும் கொடூர குற்றங்களுக்கு மோடியின் பா.ஜ.க.தான் முழு பொறுப்பு என்று.**

**மல்யுத்த வீராங்கனைகளுக்கு பா.ஜ.க. இழைக்கும் அநீதி :**



இந்த இந்திய தேசத்திற்காக மல்யுத்த களத்தில் விளையாடி ஏராளமான பதக்கங்களைக் குவித்த வீராங்கனைகள், சாக்சி மாலிக் உள்ளிட்டோரை மல்யுத்த சம்மேளனத்தின் தலைவரும், பா.ஜ.க. எம்.பி.யுமான பிரிஜ் பூசன் சிங் தங்களை பாலியல் ரீதியாக தொல்லைகளுக்கு உள்ளாக்கினார் என்று கண்ணீருடன் புகார் அளித்தனர். மோடி கண்டுகொள்ளவே இல்லை. 'டெல்லி வீதியில் அவர்கள் போராட்டத்தைத் தொடங்கினர் அப்போதும் மோடியின் மனம் இரங்கவில்லை. மாறாக, நீதிகேட்டு போராடிய வர்களை கைது செய்தது மோடியின் டெல்லி போலீஸ்.

உச்சபட்சமாக, மல்யுத்த வீராங்கனைகள் தாங்கள் பெற்ற பதக்கங்களை எல்லாம் திருப்பி அளித்து தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர். ஆனால் எது குறித்தும் மோடியோ, பாஜகவோ கவலைப் படவேயில்லை. குற்றச்சாட்டுக்கு உள்ளான பா.ஜ.க. எம்.பி. பிரிஜ் பூசன் சிங்கை பதவியில்இருந்து நீக்கவோ, கட்சியில் இருந்து நீக்கவோ பா.ஜ.க.விற்கு மனமில்லை. இந்த தேசத்தில் தங்களுக்கு நீதி கிடைக்கவில்லையே என்ற ஆற்றாமையில் துயரத்தில் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றனர் மல்யுத்த வீராங்கனைகள்.

இப்படி மோடியின் ஆட்சியில் திரும்பும் பக்க மெல்லாம் பா.ஜ.க. வினர் செய்யும் பாலியல் குற்றங்களும், அவ்வாறான குற்றவாளி களுக்கு பா.ஜ.க. அளித்து வரும் பாதுகாப்பும்தான் குற்றங்கள் அதிகரிக்க காரணம்.

**மணிப்பூரில் கதறும் பெண்கள் :**

அதன் மற்றொரு பகுதிதான் மணிப்பூரில் அரங்கேறிய அவலம். இந்த நாட்டின் புதல்விகள் இருவர் பட்டப் பகலில் நிர்வாணப் படுத்தப்பட்டு சாலையில் இழுத்துச் செல்லப் பட்டுகூட்டு பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டதை கொஞ்சமும் பதட்டமின்றி வேடிக்கை பார்த்தது பா.ஜ.க.. இந்த நிமிடம் வரை மணிப்பூர் பக்கமே செல்லவில்லை பிரதமர் மோடி

மணிப்பூரை ஆட்சி செய்யும் பாஜக முதலமைச்சர் பீரோன் சிங்கோ," இது போல் தினசரி ஏராளமான நிகழ்வுகள் நடக்கின்றன அதற்கு நான் என்ன செய்யமுடியும் " என்று தன் பொறுப்பை தட்டிக் கழித்தார்.

இப்படி இவர்கள் எல்லா மாநிலங்களிலும் பாலியல் குற்றவாளிகளைப் பாதுகாத்ததன் விளைவு, உத்தரப் பிரதேசம் மோடியின் சொந்ததொகுதியான வாரணாசியில் உள்ள பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழக மாணவி பா.ஜ.க.வின் ஐடி பிரிவைச் சேர்ந்த குணால் பாண்டே உள்ளிட்ட மூன்று பேரால் பாலியல் வல்லுறவு செய்யப்படுகிறாள்.

அந்த கொடூர குற்றவாளிகள் பிரதமர் மோடி உள்ளிட்டோருடன் உள்ள புகைப் படங்கள்வெளியான போது , நாட்டில் உள்ள பெண்களின் அச்சம் மேலும் அதிகமானது.



இப்படி ,குஜராத், உத்தரப் பிரதேசம், மணிப்பூர் என்று பாஜக ஆளும் மாநிலங்களில் எல்லாம் பாஜகவினரும், அதன் ஆதரவுக் கூட்டமும் நடத்தும் அத்துமீறல்களை தொடக்கத்திலேயே கண்டித்திருந்தால், கொடூர குற்றவாளிகளின் மீது கடும் நடவடிக்கை எடுத்திருந்தால், இன்றைக்கு ஸ்பெயின் பெண்மணிக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்காது.

குற்றம் செய்தவர்களுக்கு பாதுகாப்பும். குற்றவாளிகளின்குடும்பத்தினருக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கும் பா.ஜ.க. கொடுக்கும் வரை இந்தியா பெண்களுக்கு பாதுகாப்பற்ற நாடாகவே இருக்கும்.

**இனியும் வேண்டாம் பா.ஜ.க. :**

**மீண்டும் ஒரு முறை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், இந்தியாவில் பெண்களின் நிலை என்னவாக இருக்கும்என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரம் இது.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள், கூட்டணிக் கட்சியின் தோழர்கள்சமூக நீதிக் களத்தில் துணை நிற்பவர்கள் என்று அனைவரும் ஒன்றிணைந்து பாசிச பா.ஜ.க. ஆட்சியில் பெண்களுக்கு எதிராக நடைபெற்ற,நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கொடுமைகளை நாட்டு மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் எடுத்துச் சொல்வோம்.**

**பாசிச பா.ஜ.க.வை வீழ்த்துவோம், பெண்கள் அச்சமின்றி வாழ துணை நிற்போம்.**

**(தொடரும்...)**



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் படுநெல்லி ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் படு நெல்லி பி.எம்..பாபு ஏற்பாட்டில். கழகத் தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பிரம்மாண் டமான கழக கல்வெட்டினைத் திறந்து வைத்து, கழக இரு வண்ண கொடியினை ஏற்றி, 71 கிலோ கேக் வெட்டி பொதுமக்க ளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட கழக துணை செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., கழக மாணவரணி செயலாளர் சிவிஎம்பி.எழிலரசன் எம்.எல்.எ. ஒன்றியக் குழுத் தலைவர் ர்.கே.தேவேந்திரன், ராஜலட்சுமி , ஒன்றிய நிர்வாகிகள் வி.பழனி, வி.வெங்கட்ராமன், கவிதாடில்லிபாபு , மற்றும் கே.ஆறுமுகம், கே.பார்த்திபன், எம்திருஞானசம்பந்தம், எம்.அருள்முருகன், என். ஜெயபால், எஸ்.கே.சுரேஷ், ஆர்.கே.சசிகுமார் மற்றும் பலர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்கு பகுதியின் சார்பில் கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு புகழரங்கம் நிகழ்ச்சி கொரட்டூர் மோகன் கார்டனில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி இராஜகோபால் தலைமை தாங்கினார். மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் புகழரங்கம் நிகழ்ச்சியில் நடிகர் சத்யராஜ், வழக்கறிஞர் அ.அருள்மொழி, கவிஞர் பா.விஜய் ஆகியோர் புகழ் உரையாற்றினர். நிகழ்ச்சியில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி (ஏழாவது மண்டல குழு தலைவர்) தலைமை செயற்குழு உறுப்பினர் அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி ஆர். நாகராஜ் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எல்.பி.எப்.மோகன், டாக்டர் சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி உஷா நாகராஜ், ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் பூர்ணிமா மற்றும் கு. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் பலர் பங்கேற்றனர். வட்டக் கழக செயலாளர் சீ. லோகநாதன், சு. மோகன் குமார் நன்றி கூறினர்.

### சென்னை தெற்கு மாவட்டத்தில்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாள் - இன்றைய நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 6-

சென்னை தெற்கில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளையொட்டி இன்று (6.3.2024) நடைபெறும் நிகழ்ச்சிகளை பின்வருமாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

பாட்டுப்பட்டிமன்றம் இடம்: தரமணி, தலைப்பு : முதல்வர் தளபதியிடம் முதன்மையாய் இருக்கும் குணம் மண்ணுரிமை மீட்பதா? பெண்ணுரிமை காப்பதா? தலைமை: பேரா. பழனி (விஜய் டி.வி.புகழ்), மண்ணுரிமை மீட்பதே: அன்னலட்சுமி, பேரா.சங்கீதா, பெண்ணுரிமை மீட்பதே: அறந்தாங்கி நிஷா, லலிதா. ஏற்பாடு : வேளச்சேரி, பாஸ்கரன், மாவட்டப் பொருளாளர் - நெறியாளுகை : முனைவர் சொற்கோ கருணாநிதி.

168 அ வட்டம், பூந்தமல்லி சாலை, ஈக்காட்டுத் தாங்கல்,

நிகழ்ச்சி : பொதுக்கூட்டம், சிறப்புரை: தமிழன் பிரசன்னா, தலைமை : தா.மோகன்குமார், வட்டச் செயலாளர்.

துர்க்கையம்மன் கோயில் தெரு, நிகழ்ச்சி : 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், தலைமை : நிஷா, மாவட்ட அமைப்பாளர்-மகளிர்தொண்டர்அணி.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னணித் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### துரை சரவணன் தலைமை! இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# 169வது வட்டத்தில் மகளிர்க்கு பரிசளிப்பு - பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்கி சிறப்புரை! மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 6

சைதை கிழக்கு பகுதி 169-வது வட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 71-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மகளிர்களுக்கான விளையாட்டு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (6.3.2024) மாலை 6.00 மணிக்கு சின்னமலையில் துரைசரவணன் (வட்ட துணை செயலாளர்) தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்டச் செயலாளர் மு.ஆரோக்கியம், பகுதி துணை செயலாளர் எல்.ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட பிரதிநிதி இரா. சுதாபிரியன், அ.ஆரி, இரா. தமிழ்வாணன், சைதை ஆ.விக்டர், மு.சந்திரா, மை. அருள்ராஜ், வி.என். செல்வமணி, சூரியன், கே.பிரபு, ஆ.பரணி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் தமிழச்சி தங்கபாண்டியன் , துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை எஸ்.குணசேகரன், சைதை சம்பத் மின்னல் கந்தப்பன், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, தா.மோகன் குமார் எம்.சி., இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு.பாக்கியலட்சுமி, களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதமன், சைதை மு. இராஜா, க.மணி, கோ.சண்முகம் ,நேருநகர் எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், சை.மு.சேகர் ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, அட்சோ கமலநாதன், ஆர்.டி.மூர்த்தி, சைதை சாதிக், ஜெ.அகஸ்டின், நா. மணிகண்டன், அந்ஸ்ராமன் கோ.பாஸ்கர், க.ஒப்பில்லாமணி, டி.வி.நரசிம்மன், என்.நந்தகோபால், ஏ. மஜீத், எஸ்.ஜெ.சலாம், எஸ். ராதாகிருஷ்ணன், வே.முருகன், க.உமாபதி, ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், ஜி. யோவான், கோட்டூர் ந. பாபு, எஸ்.ரவி, எஸ்.சேகர், மு. மகேஷ்லாரன்ஸ், கே. எம்.எஸ்.கணேசன், எ.கௌதம், சே.அருண், ஈ.மதனசேகரன், க.வேல்முருகன், பி. செல்வம், ஆர்.ஜி.ஸ்டாலின், ஆர்.செல்வம், கே.எஸ். பாபு, இரா.சுதாகர், எஸ். எம். மோகன்தாஸ், ஜெ.வி. பிரதாப், மோ.எழில், எஸ். பிரகாஷ், பார்வதி, புவனேஸ்வரி, ஆர்.சேதுராமன், பு.ஜவஹர்தீன், மு.முருகன், மு.செல்வகுமார், எஸ்.மணிகண்டன், எஸ்.ஜெ.அன்புரோஸ், மு.ஜெயவேல், ச. ஜெயராம், சி.தேவேந்திரன், எஸ்.கரிமுல்லா, பி.திவாகர் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஆனந்தராஜ் , தவமணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### இராயபுரம் கிழக்கு பகுதியில்

# கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் அறிவிப்பு !

சென்னை மார்ச்: 6

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடைபெறுகிறது என்று பகுதி செயலாளர் இரா.செந்தில் குமார் அறிவித்துள்ளார்.

கூட்டங்கள் குறித்து விபரம் வருமாறு :

1) 06.03.2024 புதன் கிழமை மாலை 6.00 மணியளவில் 49(அ) வட்டம் பேச்சாளர் திராவிட இயக்க பேச்சாளர் டான் அசோக், நிகழ்ச்சி ஏற்பாடு வட்ட செயலாளர் காட்டன் ஜி. சதிஷ்குமார்.

2) 07.03.2024 வியாழக் கிழமை மாலை 6.00 மணியளவில் 51வது வட்டம் பேச்சாளர் கழக மாணவரணி துணை செயலாளர் தமிழ் க.அமுதரசன், நிகழ்ச்சி ஏற்பாடு வட்ட செயலாளர் க.கோவிந்தராஜ்.

3) 09.03.2024 சனிக் கிழமை மாலை 6.00 மணியளவில் 51(அ) வட்டம் பேச்சாளர் திராவிட இயக்க பேச்சாளர் வி.மதிமாறன் நிகழ்ச்சி ஏற்பாடு வட்ட செயலாளர் பி.கண்ணன்.

4) 10.03.2024 ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணியளவில் 50வது வட்டம், பேச்சாளர் கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் பொள்ளாச்சி சித்திக், நிகழ்ச்சி ஏற்பாடு வட்ட செயலாளர் ஆர்.வி. கணேஷ்.

5) 11.03.2024 திங்கட் கிழமை மாலை 6.00 மணியளவில் 50(அ) வட்டம், பேச்சாளர் கழக சட்ட திட்ட திருத்தகுழு செயலாளர் இரா.கிரிராஜன், நிகழ்ச்சி ஏற்பாடு வட்ட செயலாளர் என்.கிருஷ்ணன்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இராயபுரம் தொகுதி பொறுப்பாளர் என்.நவீன் மற்றும்

மாநில,மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் அறிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தியாகராயர் நகரில் உள்ள ‘அன்னை உள்ளம்’ முதியோர் இல்லத்தில் மார்ச் மாதம் முழுவதும் காலை சிற்றுண்டிக்கான காசோலையை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. நிர்வாகி முன்வர் பாஷா விடம் வழங்கினார். இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., வெல்டிங்ராஜா, சாந்தி பங்காரு, ஜெ.ஜானகிராமன், எஸ்.ராமலிங்கம், ப.கண்ணன், மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### சைதாப்பேட்டை 169-வது வார்டில் நூலகம் - பல்நோக்கு கட்டிடம் திறப்பு -

# சமுதாய நலக்கூடம் அமைக்கும் பணி: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

## மேயர் பிரியா - தமிழச்சி தங்கபாண்டியன் - துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு

சென்னை, மார்ச் 6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.03.2024) அடையாறு மண்டலம், வார்டு-169க்குட்பட்ட ஜோதியம்மாள் நகரில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.30 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகக் கட்டடம் மற்றும் ரூ.20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, சின்னமலை, வெங்கடாபுரம் பகுதியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.1.50 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள சமுதாய நலக் கூடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-139, மேற்கு மாம்பலம், அண்ணாமலை நகர், 3வது தெருவில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.35.45 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர், ஜாபர்கான் பேட்டை, ஆர்.ஆர்.காலனி, 3வது தெருவில் மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.37 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள கேரம் மற்றும் சதுரங்க விளையாட்டு அரங்கத்தை உள்ளடக்கிய பல்நோக்குக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் . மு. மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் இரா. துரைராஜ், .எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ப.சுப்பிரமணி, ஸ்ரீதர், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், வட்ட செயலாளர் எல். ஆரோக்கியராஜ், மு.ஆரோக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஏ.மஜித், எஸ்.இராதாகிருஷ்ணன், இரா.சுதாபிரியன், அ.ஆரி, வே.கோதண்டம்,, இரா.தமிழ்வாணன், சைதை ஆ.வரதன், துரை. சரவணன், டி.கண்ணன், சொ.முருகையன், கே.செல்லபாண்டியன், மு.சந்திரா, மு.சாந்தி, கேபிள் சம்பத், கே.பி.மகேஷ், ரியாஸ் அகமது, வி.என்.செல்வமணி, மை.அருள்ராஜ், சூரியன் பிரபு, ஆ.பரணி, உள்ளிட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

### மின் கழக தொ.மு.ச. சார்பில் முதல்வர் பிறந்த நாள் :

# தூய்மைப் பணியாளர் - காவல் பணியாளர்களுக்கு உதவிகள்!

## பா.மணிமாறன் வழங்கினார்!

சென்னை, மார்ச் 6 -

முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மின் வாரிய தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்களுக்கு நல உதவிகளை மின் கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்.

தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் 04 -03- 2024 அன்று முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக, பொதுச்செயலாளர் பா.மணிமாறன் நல திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு, வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணிப்பாதுகாப்பை வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், உடனுக்குடன் அகவிலைப்படி, கருணைத்தொகையுடன் போனஸ் போன்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய தொழிலாளர் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அலுவலகத்தில் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள தூய்மைப்பணியாளர்கள், காவல் பணியாளர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளர்கள் என சுமார் 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு பேர்களுக்கு இனிப்புகள், ரூ.1000/ மதிப்புள்ள அரிசி மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பைகளில் நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தே.மெய்ஞானமூர்த்தி, மாநில பொருளாளர், தே. முரளிகுமார், முதன்மைச் செயலாளர், மு.சடாச்சரம், மாநில வெளியீட்டுச் செயலாளர், எம்.பாஸ்கரன், வட்டாரச்செயலாளர், எம். சி.முருகேசன், மாநில செய்தி தொடர்பாளர், கே. பாலாஜி, தொழிலாளர் நலச்குழு செயலாளர், விநாயகமூர்த்தி, திட்டச்செயலாளர்கள் குகானந்தம், அருண்சங்கர், கனகராஜ், நாகராஜன், சிவக்குமார், சந்திரசேகரன், குமார்,

ஆல்பர்ட் மோசஸ், ஜெயகுமார், செந்தில்குமார், அறிவொளி மற்றும் சென்னை வடக்கு: ரமேஷ் பாபு, திட்டத்தலை வர், பொன் சீனிவாசன், பிரச்சாரச் செயலாளர், சென்னையா, கோட்டச்செயலாளர், பாபுராஜ், அமைப்புச் செயலாளர், வேதசுகந்தராஜன், தேசிங்கு, பழனி, சாமுவேல் மற்றும் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன் ஏற்பாட்டில் 17வது வட்டம் வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதியில் தாய்மார்களுக்கு புடவை மற்றும் காலை உணவு ஆகியவற்றை வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் சீ. மூர்த்தி சி பாலாஜி என் நாகராஜன் ஜி முனிவேல் எஸ் சிவக்குமார் கே. சண்முகப்ரியன் எம். ஜான்சன் எஸ் சதீஷ் எஸ் தினேஷ் பூபாலன் எம் என் தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## மயிலாடுதுறை - திருவாரூர் - நாகப்பட்டினம் மாவட்டங்களில்

# ரூ.655 கோடி மதிப்பிலான முடிவுற்ற - புதிய திட்டப்பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில், விவசாயிகளுக்கு இயற்கை விவசாய இடுபொருட்கள் தயாரிப்பு மையம் அமைக்க ஊக்கத்தொகை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ, மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே. ராஜாராமன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தஞ்சை, மார்ச் 6 -

**மயிலாடுதுறை மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை திறந்து வைத்து, மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ரூ.655 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2024) மயிலாடுதுறை மாவட்டம், மன்னம்பந்தலில் நடைபெற்ற அரசு விழாவில், 114 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் மயிலாடுதுறையில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மற்றும் மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 308 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 70 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 88 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 40 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், பல்வேறு துறைகளின் சார்பில் 12,653 பயனாளிகளுக்கு 143 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

### மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை திறந்து வைத்தல்

மயிலாடுதுறை, மன்னம்பந்தலில் தரைத்தளம் மற்றும் ஏழு தளங்களுடன் 2,82,883 சதுர அடி பரப்பளவில் 114 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். மயிலாடுதுறை புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்களால் 19.1.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, விரைந்து கட்டி முடிக்கப்பட்டு இன்றையதினம் முதலமைச்சர் அவர்களால் இப்புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்!

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 4 கோடியே 72 ஆயிரம் ரூபாய் செலவில் சீர்காழி வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, மயிலாடுதுறை மற்றும் சீர்காழி வட்ட குறுவட்ட அளவர் குடியிருப்புகள்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் செம்பனார் கோவிலில் 48 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகம்; கலை பண்பாட்டுத் துறை சார்பில் தாடாளன் கோவிலில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அரசினர் இசைப்பள்ளி;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் மயிலாடுதுறை நகராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம், திருவெண்காடு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த புற நோயாளிகள் பிரிவு மற்றும் சித்த மருந்தகக் கட்டடங்கள், பெருந்தோட்டத்தில் துணை சுகாதார நிலையம், மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் ஒலி புகா அறை;

நெடுஞ்சாலைத் துறை சார்பில் 12 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் பெரிய மற்றும் சின்ன வகுப்பு சாலையில் பாலம் கட்டும் பணி, மாப்படுகை - கடலங்குடி சாலை, மேமாத்தூர்உத்திரங்குடி சாலை, கண்டியூர் - புதுத்தெரு ஆகிய இடங்களில் பாலங்கள்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 71 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் மயிலாடுதுறை நகராட்சியில் மாமரத்து மேடை குளம், அங்காளம்மன் குளம், ஆழிக்குளம், உள்ளிட்ட 14 இடங்களில் மேம்படுத்தப்பட்ட குளங்கள் மற்றும் பூங்காக்கள், திம்மனாயக்கம் படித்துரை மயானத்தை LPG கிரிமிடோரியமாக கட்டி முடிக்கப்பட்ட பணி, மயிலாடுதுறை பெரியார் மருத்துவமனை வளாகத்தில் உட்புற நோயாளி உடன் தங்குவோர் தங்குமிடம், மேலச்செட்டித் தெருவில் மேம்படுத்தப்பட்ட பொதுக் கழிப்பிடம், பேரூராட்சிக்கு உட்பட்ட தெருக்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்ட பணிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 4 கோடியே 54 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் செம்பனார்கோயில், காட்டுச்சேரி ஊராட்சியில் 100 சமத்துவபுர வீடுகள் புனரமைப்பு மற்றும் 9 உட்கட்டமைப்பு பணிகள்;

என மொத்தம் 150 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 34 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

காவல்துறை சார்பில் 15 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட காவல்துறை அலுவலகக் கட்டடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் குத்தாலம் அரசு மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் சீர்காழியில் 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனை, நீர்வளத்துறை சார்பில் 24 கோடியே 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அளக்குடி கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொள்ளிடம் ஆற்றின் வலது கரையை பலப்படுத்தும் வெள்ள தடுப்புப் பணி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை சார்பில் 3 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரங்கம்பாடி மற்றும் குத்தாலத்தில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்;

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 7 கோடியே 46 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வைத்தீஸ்வரன் கோயில் முதல்நிலை பேரூராட்சியில் அரசினர் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளிக் கட்டடங்கள், குத்தாலம் தேர்வுநிலை பேரூராட்சியில் புதிய வணிக வளாகம், அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிய கழிவறைகள், பள்ளி வகுப்பறைகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள், மணல்மேடு முதல்நிலை பேரூராட்சி அரசு பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் கழிவறைகள், சுற்றுசுவர், வகுப்பறைகள்;

பள்ளிக்கல்வித் துறை சார்பில் 24 கோடியே 4 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் எருமல் தொக்கலகுடி, காவேரிபூம்பட்டினம், உள்ளிட்ட 18 இடங்களில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் கழிப்பறைகள்; என மொத்தம் 80 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 37 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

### மயிலாடுதுறை மாவட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விவரம் :

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 1200 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, பழங்குடியினர் சாதிச் சான்றிதழ், திருமண உதவித் தொகை மற்றும் இறப்பு உதவி தொகை, தமிழ்நாடு மாநில ஊரக (நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) மகளிர் திட்டத்தின் கீழ் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி கடனுதவி, வங்கிக்கடன் பெருங்கடனுதவி, சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி கடனுதவி மற்றும் சுழல்நிதி, ஒருங்கிணைந்த வேளாண் பண்ணை தொகுப்பு, மீன் வளர்ப்பு, வட்டார வணிக வள மையம், இயற்கை வேளாண் பண்ணை தொகுப்பு, விவசாய உழவர் உற்பத்தியாளர் நிறுவன பசுமை நிதி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் முன்தொழில் நிதி, இணை மானிய நிதி, செம்மயில் விவசாய உழவர் உற்பத்தியாளர் நிறுவன பசுமை நிதி;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பராமரிப்பு உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி, இலவச தையல் இயந்திரங்கள், இலவச காதொலி கருவிகள், கைபேசிகள், மடக்கு குச்சிகள், வங்கி கடனுதவி, திருமண உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி, வாசிப்பாளர் உதவித்தொகை;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு பெட்டகங்கள் மற்றும் மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டைகள் வழங்குதல், கூட்டுறவுத் துறை சார்பில் பயிர்கடன், பல்சேவை மையம், கால்நடை கடன், சிறுவணிக கடன் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் இலவச சலவை பெட்டிகள், தையல் இயந்திரங்கள், பால் பண்ணை அமைக்க கடனுதவி, வாகன கடன்கள் வழங்குதல்;

பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் வீட்டுமனைப் பட்டா, தையல் இயந்திரங்கள், முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் உதவித்தொகை, மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் மானியத்துடன் கடனுதவி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் இயற்கை இடுபொருள் தயாரிப்பு ஊக்கத்தொகை, சுழற்கலப்பை, தார்பாய், மின்கல விசைத்தெளிப்பான், விவசாய பண்ணை கருவிகள் வழங்குதல், கொடிவகை காய்கறி வளர்ப்பதற்கான நிரந்தர பந்தல், காளான் வளர்ப்பு ஊக்கத் தொகை, நுண்ணீர் பாசனம், தமிழிசைமூவர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு நிதியுதவி வழங்குதல்;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க நிதியுதவி, கறவை மாடு வழங்குதல், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் நாட்டு படகுகளுக்கு மானிய விலையில் வெளிபொருத்தும் இயந்திரம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் இலவச தையல் இயந்திரங்கள், கல்வி உதவித் தொகை, கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குதல், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் 150 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள், கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, நலவாரிய அட்டை வழங்குதல், எரிசக்தித் துறை சார்பில் 150 நபர்களுக்கு மின் இணைப்பு பெயர் மாற்ற ஆணைகள் வழங்குதல்; என மொத்தம் மயிலாடுதுறை மாவட்டத்தில் 8032 பயனாளிகளுக்கு 128 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### திருவாரூர் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 5 கோடியே 12 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் செலவில் நன்னிலம், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம், திருத்துறைப்பூண்டி குறுவட்ட அளவர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, பாலையூர், மன்னார்குடி, தலையாமங்கலம், வடுவூர், ஆலங்குடி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள சரக வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள், வலங்கைமான் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம், ஆய்குடி – கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் ஊர்குடி, பூவனூர், புதுதேவங்குடி, பேரையூர், கமலாபுரம், மாணிக்கமங்கலம், எரிவேலூர், கோவில்வெண்ணி, எடகீழையூர், முனியூர், கருவாக்குறிச்சி, செல்லூர், அபிவிருத்தீஸ்வரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையங்கள், திருவாரூர் - தடுப்பூசி உபகரணங்கள் கிடங்கு, வடுவூர் - வட்டார பொது சுகாதார மையம், அரித்துவாரா மங்கலம் - ஆரம்ப சுகாதார நிலையம்;

பள்ளிக்கல்வித் துறை சார்பில் 69 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வலங்கைமான் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2 அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள், கலை மற்றும் கைவினை அறை, கணினி அறை; ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 1 கோடியே 51 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கருப்புகிளார், பைங்காட்டூர், புளியக்குடி ஆகிய இடங்களில் கிராம ஊராட்சி செயலகங்கள் மற்றும் புழுதிக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்; போக்குவரத்துத் துறை சார்பில் மன்னார்குடியில் 1 கோடியே 97 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் மற்றும் சோதனை ஓட்ட வழித்தடம்; என மொத்தம் 13 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் திருவாரூர் மாவட்டத்தில் 32 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### திருவாரூர் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்!

வருவாய் மற்றும் போடர் மேலாண்மைத் துறை சார்பில் 1040 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்கள், ஸ்பைனல் ஸ்கூட்டர், தையல் இயந்திரங்கள், ஸ்மார்ட் போன்கள், சமூக நலத்துறை சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் உதவிகள் மற்றும் தையல் இயந்திரங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஆடுவளர்ப்பு மற்றும் ஆடு சார்ந்த தொழில், வேளாண் மற்றும் வேளாண் சார் துணை தொழில்களுக்கு உதவிகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தையல் இயந்திரங்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் நிதி ஆதரவு திட்ட உதவிகள், மகளிர் திட்டத்தின் கீழ் மகளிர் குழுவிற்கு சமுதாய முதலீட்டு நிதியுதவி மற்றும் முதியோருக்கு வாழ்வாதார நிதி; என திருவாரூர் மாவட்டத்தில் மொத்தம் 1961 பயனாளிகளுக்கு 5 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்!

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வேதாரண்யத்தில் 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், தலைஞாயிறில் 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நாகப்பட்டினம், ஒரத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தின் மருத்துவமனையில் 126 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவ சேவைகளை தொடங்கி வைத்தல் மற்றும் ஒரத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியில் 128 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள், ஆண்கள் மற்றும் பெண்கள் மருத்துவர் விடுதிகள், செவிலியர் குடியிருப்பு, முதல்வர் குடியிருப்பு, நிலைய மற்றும் உதவி நிலைய மருத்துவ அலுவலர் கட்டடங்களின் பயன்பாட்டு சேவைகளை தொடங்கி வைத்தல்;

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நாகூரில் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விடுதி மற்றும் சமுதாயக்கூடம்; என மொத்தம் 259 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 5 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்!

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு த்துறை சார்பில் நாகூரில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய மருத்துவமனைக் கட்டடம்; பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நாகப்பட்டினம் நகரத்தில் 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிறிஸ்துவர்களுக்கான கல்லறை தோட்டத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில் நாகப்பட்டினத்தில் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிகவரி அலுவலகக் கட்டடம்; என மொத்தம் 7 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்!

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் இயற்கை மரண உதவித்தொகை வழங்குதல், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் தேய்ப்புப் பெட்டிகள் வழங்குதல், தோட்டக்கலைத் துறை சார்பில் பந்தல் வளர்ப்பு, காளான் வளர்ப்பு, சொட்டுநீர் பாசனத்திற்கான நிதியுதவி வழங்குதல், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு தார்பாலின், மருந்து தெளிப்பான் வழங்குதல், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் நாட்டு படகிற்கு வெளிப்புற இஞ்சின் வழங்குதல், சமூகநலத்துறை சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட முதிர்வு தொகை வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதியுதவி, மாவட்ட தொழில மையத்தின் சார்பில் தொழில் கடன்கள் வழங்குதல், கூட்டுறவுத் துறை சார்பில் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி, சமூக பாதுகாப்புத் திட்டத்தில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமணம் மற்றும் இயற்கை மரண உதவித் தொகை வழங்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 1500 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குதல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்ககத்தின் மகளிர் திட்டத்தின் கீழ் கடனுதவிகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் கடனுதவிகள்; என மொத்தம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2660 பயனாளிகளுக்கு 9 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

### கிராம நத்தம் பகுதிகளுக்கு இணையவழியில் பட்டா மாறுதல் சேவைகள் வழங்குவதற்கான நத்தம் இணைய வழி பட்டா மாறுதல் திட்டத்தை தொடங்கி வைத்தல்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் கிராம நத்தம் பகுதிகளுக்கு இணையவழியில் பட்டா மாறுதல் சேவைகள் வழங்குவதற்கான நத்தம் இணையவழி பட்டா மாறுதல் திட்டம் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, முதற்கட்டமாக 146 வட்டங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் கிராமப்புற விவசாய நிலங்கள் மற்றும் நகர்ப்புற பகுதிகள் அனைத்தும் நில அளவை மற்றும் நில வரித்திட்ட பணிகள் முடிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட கைப்பிரதி ஆவணங்கள் அனைத்தும் ஏற்கனவே கணினிமயமாக்கப்பட்டு பட்டா மாறுதல் சேவைகள் இணையவழியில் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கிராம நத்தம் பகுதிகள் அனைத்தும் 1987ஆம் ஆண்டு அரசாணையின் படி நத்தம் நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, நத்தம் நில ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. நத்தம் நில ஆவணங்கள் 38 மாவட்டங்களில் 301 வட்டங்களில் பயன்பாட்டில் இருந்துவருகின்றன.

2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், கிராம நத்தம் மனை பகுதிகளுக்குண்டான கைப்பிரதி நில ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, கிராம நத்தம் மனை பகுதிகளுக்கான கைப்பிரதி நிலஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, தேசிய தகவலியல் மையம் மூலம் புதியதாக தமிழ்நிலம் (நத்தம்) மென்பொருள் உருவாக்கப்பட்டு, 146 வட்டங்களில் முதற்கட்டமாக இந்த மென்பொருள் வாயிலாக நத்தம் பட்டா மாறுதல் சேவைகள் பட்டாதாரர்களுக்கு இணையவழியில் வழங்கப்படும்.

"இணையவழி நத்தம் பட்டா மாறுதல் திட்டத்தின்" மூலம் தற்போது 146 வட்டங்களில் 30,20,247 தனிப்பட்டாக்களில் 30,20,247 பட்டாதாரர்களுக்கும் 5,15,941 கூட்டுப்பட்டாக்களில் 45,12,855 பட்டாதாரர்களுக்கும், என மொத்தம் 35,36,188 பட்டாக்களில் 75,33,102 பட்டாதாரர்களுக்கு இணையவழி சேவை மூலம் கிராம நத்தம் பட்டா வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் மீதமுள்ள 155 வட்டங்களில் "இணையவழி நத்தம் பட்டா மாறுதல் திட்டம்" 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் நடைமுறைக்கு கொண்டுவரப்படும்.

இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், எஸ். இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி,சிவ.வீ. மெய்யநாதன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செ.இராம லிங்கம், எஸ். கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா மு. முருகன், எம். பன்னீர்செல்வம், எஸ். ராஜகுமார், சாக்கோட்டை க. அன்பழகன், பூண்டி கே.கலைவாணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், ஒன்றிய முன்னாள் அமைச்சர் மணிசங்கர் அய்யர், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் காஞ்சி வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பாக முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கால்பந்தாட்ட போட்டி நடை பெற்றது இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்டக் கழக செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு கால்பந்தாட்ட போட்டிகளை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்கள். நிகழ்ச்சியில் பல்லாவரம் மண்டலத் தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், கால்பந்தாட்டம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார். பகுதி கழக நிர்வாகிகள் இளைஞர் அணியினர், வட்டக் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

2024, மார்ச் - 12 அன்று மாலை 5 மணிக்கு சென்னை, ஓட்டல் அகார்டில்

# தி.மு.க. சொற்பொழிவாளர்கள் கூட்டம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றிட வேண்டிய நெறிமுறைகளை வகுத்திடும் "தி.மு.க. சொற்பொழிவாளர்கள் கூட்டம்" வருகிற 12.03.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு சென்னை, தியாகராயநகர், ஜி.என்.செட்டி சாலையில் உள்ள "ஓட்டல் அகார்டில்' கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் - மாநிலங்களவைக்குழுத் தலைவர் திருச்சி சிவா, எம்.பி., அவர்கள் தலைமையில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் வரவேற்புரையாற்றிட, கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிட இருக்கின்றார்கள்.

அழைப்பிதழ் வரப் பெற்றவர்கள் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள்: 05.03.2024.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

# வேளாண் நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் நலன்காக்கும் திட்டங்களுக்குப் பாராட்டு!

## தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மார்ச் 6-

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம்

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் (29.0.2 2024) அன்று மாலை 3.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தி, கழக விவசாய அணித் துணைத் தலைவர் விவசாய அணி எஸ்.கே.வேதரத்தினம் தலைமையில் விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ். அப்துல்காதர், நாகை ஆர். அருட்செல்வன், கள்ளிப்பட்டி மணி, ம.முத்து ராமலிங்கம், பா.செந்தமிழ் செல்வன், குறிஞ்சி என்.சிவகுமார் விவசாய அணி துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், மதுரை ஆர்.கணேசன், கிருஷ்ணகிரி டேம் டி.வெங்கடேசன், டி.எம்.அரியப்பன், இராமநாதபுரம் என். நல்லசேதுபதி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

'எல்லோருக்கும் எல்லாம்' எனும் தாரக மந்திரத்துடன் 'திராவிட மாடல்' ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை தமிழ்நாடு முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவீர்.

'எல்லோருக்கும் எல்லாம்' எனதும் தாரக மந்திரத்துடன் "திராவிட மாடல்" ஆட்சி நடத்தி வரும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71வது பிறந்த நாளை, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் எழுச்சியுடன் ஊர்தோறும் கழகக் கொடியேற்றி, கொண்டாடிட வேண்டுமெனவும், மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மரக் கன்றுகள் நட்டும் மிகச் சிறப்பாக கொண்டாடுவது என தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தீர்மானிக்கிறது. ஏழை, எளிய தமிழ் நாட்டு மக்கள் நலம், வளம் பெறும் வகையில் தமிழ் நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் நிதி நிலை அறிக்கைக்குப் பாராட்டு.

சமூகநீதியை மையப்படுத்தி அதனைச் சுற்றி கடைக்கோடி தமிழர் நலன், தமிழ்மொழி மற்றும் பண்பாடு, மகளிர் நலன் காக்கும் சமத்துவப் பாதை, உலகை வெல்லும் இளைய தமிழகம், பசுமை வழிப் பயணம், அறிவுசார் பொருளாதாரம் எனும் அடிப்படை கோட்பாடுகளையும், கொள்கைகளையும் கொண்டு, கடந்த 19.2.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் நிதி நிலை அறிக்கை "காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்" (குடிமக்கள் எவரும் எளிதில் அணுகக்கூடியவராகவும், எவரிடத்திலும் கடுமையான சொற்களை கூறாது ஆட்சிபுரிந்து வரும் அரசரின் நாட்டை உலகமே போற்றும்) எனும் அய்யன் வள்ளுவன் குறளுக்கேற்ப உலகமே போற்றும் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையிலான கழக அரசுக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

"மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்! மண்ணையும் வளர்த்து, மக்களையும் வாழ்விப்போம்!" எனும் கொள்கையுடன் 'உழவர்கள் போற்றும் உத்தமன்' தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் தாக்கல் செய்யப்பட்ட வேளாண் நிதி நிலை அறிக்கைக்கு பாராட்டு

"மண்ணையும் காப்போம்! மக்களையும் காப்போம்! மண்ணையும் வளர்த்து, மக்களையும் வாழ்விப்போம்!" எனும் கொள்கையுடன் 'உழவர்கள் போற்றும் உத்தமன்' தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கடந்த 20.2.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2024-25ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில்; மண் வளம் பேணிக் காக்கவும், மக்கள் நலன் காக்கவும் உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செயல் முறைகளையும் ஊக்கப்படுத்திட 'முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்'

இரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதால் மண்ணிலுள்ள நுண்ணியிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளம் குறைந்து வருகிறது. எனவே மண் வளத்தை மீட்டெடுக்க இரசாயன உரங்களைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நெற்பயிரில் இரசாயன மருந்துகளைக் குறைத்தலுக்கு முக்கியத்துவம் தரப்படும்.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது 2400க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளை உயர்த்தப்படும்.

மரபுசார் நெல் இரகங்களை ஊக்குவிப்பு சிவன் சம்பா நெல் ரகம் அதிகம் பயிரிட அறிவுறுத்தப்படும்

டெல்டா மாவட்டங்களின் வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

வேளாண் இயந்திரங்கள் வாடகைக்குக் கிடைக்கும் மையங்களை உருவாக்க இருக்கிறோம். இயற்கைச் சீற்றங்களால் உழவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பில் இருந்து அவர்களை மீட்கப் பயிர் காப்பீட்டுத் திட்டம் இந்த ஆண்டு அந்தத் திட்டத்துக்கு மட்டும் 1,775 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

'ஒரு கிராமம் ஒரு பயிர்' என்ற திட்டம் 15 ஆயிரத்து 280 கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

பத்து ஆண்டுகளாகப் பாசன மின் இணைப்புக்கான விண்ணப்பங்களை அ.தி.மு.க. அரசு கிடப்பில் போட்டு வைத்திருந்தது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 1.50 லட்சம் பேருக்கு இலவச மின் இணைப்புகளை கழக அரசு வழங்கி உள்ளது. இந்த ஆண்டில் மேலும் 50 ஆயிரம் பேருக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கப்படும். நெல்லுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை வழங்க 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கரும்புவிவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு 215 ரூபாய் கூடுதலாக வழங்கப் பட்டுள்ளது.

தொழில் துறை சார்பில் நடைபெறுவதைப் போல வேளாண்மைத் துறை சார்பில் கண்காட்சி, திருவிழா, சங்கமம் போன்றவற்றை நடத்தி வேளாண்மை மீதான ஆர்வத்தைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து உருவாக்கும்

'உழவர்கள்' மட்டும் தான் வேளாண்மை செய்ய வேண்டும் என்று இல்லை. தொழில் துறையைப் போல அனைவரையும் வேளாண்மையை நோக்கி ஈர்க்க வைக்கும் முயற்சித் திட்டங்கள் என விவசாயிகளான உழவர்களுக்கான பல்வேறு திட்டங்களை 'வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்து, இந்திய துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக விளங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் தாக்கல் செய்யப்பட்ட வேளாண் நிதி நிலை அறிக்கைக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தனது பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

பாலாற்றின் குறுக்கே புதிய அணை கட்டும் முயற்சியை ஆந்திர அரசு உடனே கைவிட வேண்டும்.

பாலாறு ஒரு பன்மாநில நதி ஆகும். இது 1892 ஆம் ஆண்டைய மதராஸ் மைசூர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பன் மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளில் பாலாறும் ஒன்றாகும். 1892ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தின்படி, மேற்பகுதியிலுள்ள மாநிலங்கள் கீழ்ப்பகுதியிலுள்ள மாநிலங்களின் முன் அனுமதி இல்லாமல், எந்த அணைகட்டுமானத்தையோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானத்தையோ அல்லது நீரைத் திருப்புவதற்கும், நீரைத் தேக்குவதற்கும் உரிய எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது. இந்த ஒப்பந்தம் படுகை சம்பந்தப்பட்ட மாநிலங்களையும் கட்டுப்படுத்தும். மேலும் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும் என 16.02.2018 அன்று உச்சநீதிமன்றம் காவிரி சம்பந்தப்பட்ட பிரச்சினையில் அளித்த தீர்ப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு இருக்கையில் ஆந்திர அரசு தன்னிச்சையாக ஒரு புதிய அணையை கட்ட முயற்சிப்பது 1892ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மீறுவதாகும். மேலும் உச்சநீதி மன்றம் மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட செயலாகும். இது ஒரு தவறான முயற்சியாகும்.

இதற்கிடையே ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே ஏற்கெனவே அமைக்கப்பட்ட தடுப்பணைகளின் உயரத்தை அதிகரித்து இருப்பதை எதிர்த்து மற்றும் ஒரு சிவில் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தொடுத்துள்ளது. இந்த வழக்கும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இவ்வாறு 2 அசல் வழக்குகளும் உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது தன்னிச்சையாக ஆந்திர அரசு பாலாற்றில் ஒரு புதிய அணையை கட்ட முயற்சிப்பதும், அதற்காக அதனுடைய நிதிநிலை அறிக்கையில் பணம் ஒதுக்கியிருப்பதும் முற்றிலும் உச்சநீதிமன்றத்தை அவமதிப்பதாகத் தான் கருத வேண்டும். இச்செயல் இருமாநிலங்களின் நட்பிற்கு ஏற்றதல்ல. மேலும் கூட்டாச்சிக்கு எதிரானது என்பதை இக்கூட்டம் சுட்டிக்காட்டுவதோடு, இருமாநில நலன் கருதி இம்முயற்சியை உடனடியாக கைவிட வேண்டுமென தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் ஆந்திர அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட முயற்சிக்கு கர்நாடக அரசுக்குக் கண்டனம் தமிழ்நாட்டு மக்களின் ஜீவாதாரமும் - காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கும் காவேரியில், காவிரி நடுவர் தீர்ப்பாணையத்தின் உத்தரவின்படி, காவிரியில் தண்ணீர் திறந்து விடாமல் தொடர்ந்து வஞ்சித்து வரும் கர்நாடக அரசு, காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தையே கேள்விக்குறியாக்கும் வண்ணம், காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டியே தீருவோம் என கூறி வருகிற கர்நாடக அரசையும், அதனை தூண்டிவிடும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

'தலைவனுக்கு தொண்டன் கட்டிய தாஜ்மஹால்' என்று உலகோர் போற்றும் வண்ணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு பிரம்மாண்டமான நினைவகம் கட்டிய கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

வருங்காலத் தலைமுறையினர் முத்தமிழறிஞர் கலைஞரை அறிந்து கொள்வதற்கும் - அவரால், தங்கள் முன்னோரும், தாங்களும் பெற்றுள்ள பயன்களைப் புரிந்துகொள்வதற்கும் ஏற்ற வகையில் நவீனத் தொழில் நுட்பங்களால் கட்டமைக்கப்பட்ட 'கலைஞர் உலகம்' எனும் அருங்காட்சியகத்துடன் கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தை ஒரு வரலாற்றுச் சின்னமாக வடிவமைத்து, "ஒரு தலைவனுக்கு தொண்டன் கட்டிய தாஜ்மகால்" என்று உலகோர் போற்றும் வண்ணம் பிப்ரவரி 26ஆம் நாள் அதனைப் பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியறிதலோடு பாராட்டி மகிழ்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அய்யா வைகுண்டர் குறித்த

# ஆளுநர் ரவியின் கருத்துக்கு கண்டனம்!

## பாலபிரஜாபதி அடிகளார் குற்றச்சாட்டு

கன்னியாகுமரி,மார்ச் 6-

அய்யா வைகுண்டர் குறித்த ஆளுநர் ரவியின் கருத்துக்கு அய்யாவழி அடிகளார் பாலபிரஜாபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் சாமிதோப்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மொழி பேதம், ஆண் பெண் பாகுபாடு, சாதிகள் இல்லை என சமத்துவத்தை எடுத்துரைத்தவர் ஐயா வைகுண்டர் என்று தெரிவித்தார்.

அவரை யாரும் சனாதனத்திற்குள் கொண்டுவர முடியாது என்றும் பாலபிரஜாபதி அடிகளார் கூறினார்.

அய்யா வைகுண்டர் குறித்த வரலாற்றை திரித்து ஆரிய கோட்பாட்டிற்கு அணி சேர்ப்பது போல் ஆளுநர் ரவி பேசியிருப்பதாகவும் கண்டனம் தெரிவித்தார்.

ஆளுநர் அவரது வேலையை மட்டும் பார்த்தால் போதும், ஆன்மீக பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என்றும் பாலபிரஜாபதி அடிகளார் கூறினார்.

### சென்னை உயர்நீதிமன்றத்தில்

# தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும்!

## இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 6 -

இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என வழக்கறிஞர் செயல்பாட்டுக் குழு மற்றும் பொதுமக்கள் உண்ணா நிலைப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். போராட்டம் தொடங்கி ஏழு நாட்கள் ஆகின்றன. இந்த ஒரு வார காலத்தில் நாட்டின் பிரதமர் தமிழ் நாட்டில் மூன்று தேர்தல் பரப்புரை கூட்டங்களில் பங்கேற்றுள்ளார். ஆனால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்ற கோரிக்கை மீது மூச்சு விடாமல் அமைதி காத்து சென்று விட்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. வழக்கொழிந்து வரும் மொழிக்கு பெரும் நிதி ஒதுக்கீடு செய்யும் பா.ஜ.க. ஒன்றிய அரசு தமிழ் மொழியை, தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக எது இருக்க வேண்டும் என தீர்மானிக்கும் உரிமையை மறுக்கும் முறையில் உச்ச நீதிமன்றத்தின் கருத்தை கேட்டு வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் வழக்கறிஞர்களும், தமிழ் பற்றாளர்களும் தொடங்கியுள்ள கால வரையற்ற உண்ணாநிலை போராட்டம் முழு வெற்றி பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வாழ்த்துக்கூறி, போராட்டத்துக்கு முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. கற்றறிந்த வழக்கறிஞர்கள் மற்றும் தமிழ் மொழி பேணி வளர்க்கும் பற்றாளர்கள் உடல்நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போராட்டத்தில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடுமின்கழகதொ.மு.ச.சார்பில்கழகத்தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின்அவர்களின்பிறந்தநாளைமுன்னிட்டுமின்வாரிய காவல்பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகளை பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார். மெய்ஞானமூர்த்தி,தே.முரளி குமார்,மு.சடாச்சரம், எம்.பாஸ்கரன், எம்.சி., முருகேசன், கே.பாலாஜி, விநாயகமூர்த்தி உள்ளிட்டோர் உடனுள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிழக்குப் பகுதி சார்பில் நேற்று (5.3.2024) சென்னை, பெரியார் நகர் திருவள்ளூர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தமிழ்நாடு மின்சார வாரிய 271 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் , வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி , தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு வாரியத் தலைவர் பி.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளைச் சேர்ந்த ஐ.சி.எப் முரளி, நாகராஜன், சந்துரு, மகேஷ்குமார் துரைக்கண்ணு, 6வது மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.3.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை இராணி மேரி கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திருமதி ஆ.அமிர்தகௌரி சந்தித்து பேசினார். உடன் அவரது கணவர் பேராசிரியர் மா.செல்வராசன், இங்கிலாந்தில் பணியாற்றும் அவரது மகள் மருத்துவர் செ.வண்ணமலர், அவரது மருமகன் மருத்துவர் சு.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (5.3.2024) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சரும், திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான டி.பி.எம். மைதீன்கான், அண்மையில் திருமணமான தனது பேத்தி அஃப்சான் நபோரா – ஜவஹர் அலி ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# முதல்வரின் பெண்கள் நலத் திட்டங்கள் - பெருமை பேசும் ஆவணங்கள்!

## பெண்கள் சமுதாயம் வரவேற்பு!

சென்னை, மார்ச் 6–

“ மங்கையராய் பிறப்பதற்கே நல்ல; மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் மகளிர் சமுதாயத்தின் முக்கியத்துவத்தினை மிக அழகான கவிதை வரிகளில் பாடியுள்ளார்.

இத்தகைய பெருமைக்குரிய மகளிர் சமுதாயம் வீட்டிற்குள் அடக்கி வைக்கப்பட்டிருந்த கொடுமையை எதிர்த்து தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் போராடியதன் விளைவாக பெண்கள் சமுதாயம் இன்று எழுச்சிப் பெறத் தொடங்கியுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக வீற்றிருந்த காலத்தில் பெண்கள் முன்னேற்றத்திற்கான கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு, சொத்துரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு, மகளிர் திட்டம் – மகளிர் சுய உதவிக்குழுக்கள் முதலான பல திட்டங்களை நிறைவேற்றினார். இத் திட்டங்களால் பெண்கள் வாழ்வில் உயர்ந்து பொருளாதார விடுதலை பெற்றுள்ளனர்.

உலகெங்கும் உழைக்கும் மகளிர் போராடி உரிமை பெற்ற நன்னாள் என மார்ச் 8ஆம் நாள் மகளிர் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்காக ஆற்றியுள்ள திட்டங்களை இங்கு நினைவுகூர்வது பொருத்த மாகும்.

**பெண்களை அர்ச்சகர்களாக்கி, ஓதுவார்களாக்கி சாதனை”**

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறப்பால் மனிதர்கள் அனைவரும் சமம் என்பதைக் கூறி, ஆண், பெண் என்ற வேறுபாட்டை நீக்கி 3 பெண்களை அர்ச்சகர்களாக நியமித்து, 5 பெண்களை ஓதுவார்களாகப் பணியில் அமர்த்தி அதிரடி சாதனை படைத்துள்ளார்.

**“பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்து திட்டம்”**

சமூகத்தில் பெண்களுக்கான உரிமையை நிலைநாட்டுவதில் திமுக அரசு முனைப்புடன் செயல்படும் என்றும், ஆண்களுக்கு நிகரான சமநிலையைப் பெண்கள் விரைவில் அடைவார்கள் என்றும் எப்போதும் சொல்லிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021 சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணம் உள்பட முக்கியத் திட்டங்களில் கையெழுத்திட்டு மக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளார்.

குறிப்பிட்ட தூரம் அல்லது நகரங்களுக்குள் இயக்கப்படும் சாதாரண கட்டணப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யும் இந்தத் திட்டம் மக்களிடையே அதிகம் பேசப்படும் திட்டமாக உள்ளது. இதனால் பெரிதும் பயனடைந்துள்ளதாக வேலைக்குச் செல்லும் மகளிர் பலரும் தெரிவித்து வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 40 லட்சம் பெண்கள் கட்டணமில்லாப் பேருந்து பயணம் – விடியல் பயணம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

**“புதுமைப் பெண் திட்டம்”**

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று பின்னர் உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் வகையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி “புதுமைப் பெண் திட்டம்” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால்

5-9-2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற மாணவிகள் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்பவராக இருத்தல் வேண்டும். தனியார் பள்ளிகளில், கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயின்று பின் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடை யலாம்.

எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சிக்கான முதலீடாக “புதுமைப் பெண்” திட்டத்தினைப் பார்ப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில், இத்திட்டத்தின் மூலம் நடப்பாண்டில் மாதந்தோறும் 2.73 லட்சம் மாணவிகள் பயனடைகின்றனர். மேலும் இந்த முயற்சியின் விளைவாக நடப்புக் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்று, கல்லூரிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

**“கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்”**

வீட்டில் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உழைக்கும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கிவைக்கப்பட்டு பெண்களின் ஆதரவைப் பெற்றுள்ளது. இத்திட்டம் குறித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் அண்மையில் வெளியிடப்பட்ட 2023 – 24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்படி, நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம், சிறு தொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியும் மகளிர் எனப் பல்வேறு வகைகளில் தங்களது விலை மதிப்பில்லா உழைப்பை வழங்கி வரும் பெண்களும் இத்திட்டத்தால் பயன்பெறுகின்றனர்.

தமிழ்நாட்டுப் பெண்களிடையே இத்திட்டத்திற்குக் கிடைத்துள்ள ஆதரவைப் பார்த்து, வேறு பெயர்களில் தங்கள் மாநிலங்களிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பிற மாநில அரசுகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்பான திட்டங்களால் மகளிர் சமுதாயம் அடைந்து வரும் முன்னேற்றம், தன்னம்பிக்கை உணர்வு, சமத்துவச் சிந்தனை இவையெல்லாம் பெண்களின் பெருமை பேசும் ஆவணங்களாகத் திகழ்கின்றன என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.





செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற பட்டா வழங்கும் விழாவில் பல்லாவரம், தாம்பரம் மற்றும் வண்டலூர் வட்டங்களை சேர்ந்த 3459 பயனாளிகளுக்கு ரூ.814.79 கோடி மதிப்பீட்டில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் பட்டாக்களை வழங்கினார்கள். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், சேகர், ஏ.கே.கருணாகரன், நடராஜன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.






சிவகங்கை நகர் சண்முகராசா கலையரங்கில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். மேடையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ, மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம். மணிமுத்து, நகர் கழகச் செயலாளர் சி.எம்.துரைஆனந்த், மாநில மாணவரணி இணைச்செயலாளர் திருமதி பூரண சங்கீதா மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள் .

### காட்டன் ஜி.சதிஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு ! இரா.செந்தில்குமார் தலைமை !

# 49(அ) வட்டத்தில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் ! நல உதவிகள் !

### டான் அசோக் சிறப்புரை ! ஆர்.டி.சேகர், கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி, என்.நவீன் பங்கேற்பு !

சென்னை, மார்ச் 6-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49(அ) வட்டம் சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் ( இன்று 6.03.2024 புதன் கிழமை ) மாலை 5.00 மணியளவில் புதுகாம்ராஜ் நகர் இராயபுரத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதிஷ்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளார்.

இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார் தலைமை வகிக்கிறார்.

அ.குமார், எஸ்.சௌந்திரபாண்டியன், ஜி.ஜீலியன், எ.கவிதா, ப.ஆனந்த குமார், வி.பிரேம்குமார், எஸ்.எஸ்.சிவசங்கர், ஆர். தங்கராஜ், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ, இராயபுரம் தொகுதி பொறுப்பாளர் என்.நவீன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்கள்.

இதில் கழக பேச்சாளர் டான் அசோக் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் பி.டி.பாண்டிசெல்வம், ந,மனோகரன், தா.இளையஅருணா, வே. சிவக்குமார், மு.கோபி, நாகம்மை, லயன் எம்.தீனதயாளன், க.கோவிந்தசாமி, லியோ.டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி,யு.ஹனிபா, எஸ். மணிகண்டன், கே. அசோக், ஆர்.குருவம்மாள், ஆர்.ராஜன், டாக்டர். பாண்டியராஜன், மெடிக்கல்.பி.சதிஷ்குமார், எ. ஆனத்தன், ப.ராஜேந்திரன், பி.ரவிசங்கர், பிடிபி. கதிரவன், வி.கே.ராஜ், புலவர் செல்வராஜ், த.ஜெயபாலன், பி.சேகர்,கு.சுந்தர், ப.ஜெயலட்சுமி, லோ. மோகன், கே.லட்சுமணன், எஸ்.சுரேஷ், க.கலைசெல்வன், எம்.என்.வெங்கட், ஐசிஎப்.பழனிவேல், என். பாரி, வி.குமார், அத்தோ பி.முனுசாமி,

என்.ராஜசேகர், கே. சி.பிரதாபன் நன்றி கூறுகிறார்கள்.

### கடலூர் அரசு மருத்துவமனையில் பிறந்த

# 13 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

### எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார்!

கடலூர், மார்ச் 6 -

கடலூரில் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா - மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்கமோதிரம் அணிவித்து நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே. பி.கதிரவன் வழங்கினார்.

இது பற்றிய விவரம் வருமாறு:

திருவாரூரை பூர்வீகமாகக் கொண்டவர் 33 வயது பெண்மணி ,இவரும் இவரது கணவரும் சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை புரிந்து வந்துள்ளனர். மூன்று நாட்களுக்கு முன்பாக அந்தப் பெண்மணிக்கு ரத்த கொதிப்பு தொந்தரவுக்கான மருந்துகள் சென்னை தனியார் மருத்துவ மனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ..

பிரசவத்திற்காக தனது தாயார் வீட்டுக்கு ரயில் மூலம் சென்னையில் இருந்து திருவாரூர் சென்று கொண்டிருந்தார். ஆபத்தான பயணத்தை ரயில் மூலம் மேற்கொள்ளும் பொழுது திடீரென்று அவருக்கு வலிப்பு நோய் ஏற்பட்டு மயக்கம் அடைந்துள்ளார்..

கடலூர் 108 ஆம்புலன்ஸ் பிரிவினர் கடலூர் திருப்பாதிரிப்புலியூர் ரயில்வே நிலையத்தில் தயாராக காத்துக் கொண்டிருந்தனர் ரயில் கடலூரை வந்தடைந்தது பிளாட்பார்முக்கு அருகே நிற்காமல் பிளாட்பார்மை விட்டு தள்ளி நின்ற ரயிலில் இருந்த கர்ப்பிணி பெண்மணியை 108 ஆம்புலன்ஸ் பிரிவினர் ரயில்வே டிராக்கில் இறங்கி பாதுகாப்பாக மீட்டு கடலூர் தலைமை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர்.

கடலூர் அரசு தலைமை மருத்துவமனையைச் சார்ந்த மயக்கவியல் நிபுணர் டாக்டர் பாஸ்கரன் கடலூர் தாய் சேய் நலப்பிரிவு மருத் துவர் டாக்டர் பரமேஸ்வரி மற்றும் அவர்களது குழு இணைந்து மயக்கத்தில் இருந்த அந்தப் பெண்மணிக்கு அறுவை சிகிச்சை செய்தனர். பெண் குழந்தை பிறந்தது.

திருவாரூருக்கும் கடலூருக்கும் தொப்புள்கொடி பந்தமாக அமைந்த இந்த நிகழ்வை பொதுமக்கள் அனைவரையும் பாராட்டினர் . வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் சார்பாக, மார்ச் 1 பிறந்த அந்தக் குழந்தை உட்பட 13 குழந்தைகளுக்கு, கடலூர் கிழக்கு மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தங்க மோதிரம் அணிவித்து மகிழ்ந்தார்.

கடலூர் அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கும் மருத்துவமனை நிர்வா கத்திற்கும் பாராட்டுகளை தெரிவித்தார் .

இந்நிகழ்வில் கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, மாநகர மேயர் சுந்தரி ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சுப்பிரமணியன், டி.காசிராஜன், மாநகர அவைத் தலைவர் பழனிவேல், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் கலைகோவன், மண்டல குழு தலைவர்கள் சங்கீதா பிரசன்னா, சங்கீதா செந்தில் முருகன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர் கணேசன், பகுதி செயலாளர் சலீம், இளையராஜா, நடராஜன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் பெரியசாமி, மாமன்ற உறுப்பினர்கள் ஆராமுது, பாலசுந்தர், சுதா, விஜயலட்சுமி, செந்தில் குமாரி, பார்வதி, கிரேசி அகஸ்டின், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கே.எஸ். ஆர். பாலாஜி, தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைபாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திக், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெயச்சந்திரன், குப்புராஜ், ராம்குமார்,

கோபி, மாநகர பொருளாளர் ராஜேந்திரன், மாநகர துணைச் செயலாளர் எல்சா, மாவட்டப் பிரதிநிதி சி.கே.என்.ராமு, சிவா, மாரி, துர்கா செந்தில், கி. கோ.செல்வமணி, மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ராஜராஜன், தகவல் தொழில்நுட்ப அணி பிரவீன், மாவட்டப் பிரதிநிதிகள் ரகுராம், லெனின், ஆறுமுகம், சிவா, வட்டச் செயலாளர்கள் முத்து குமரன், அருள்ஜீவன், விவேக், இளந்திரையன், அரங்கநாதன், ஆட்டோ செல்வம் தேவன்பு, பகுதி துணை செயலாளர் கேபிள் தமிழ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி நகரத்தில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம், பொன்னேரி நகர செயலாளர் ஜி.ரவிக்குமார் ஏற்பாட்டில் திருவள்ளூர் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் மாநில இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன் சிறப்புரையாற்றினார். பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் கே.பரிமளம் விசுவநாதன் வரவேற்புரையாற்றினார். மு.பகலவன், மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகர், பி.வெங்கடாஜலபதி சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், பா.சுகுமார், எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், டி.கே.சந்திரசேகரன், ஆ.சத்தியவேல். நா.செல்வசேகரன் கா.சு.ஜெகதீசன் ஜான்(எ)பொன்னுசாமி, இரா.அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழ்உதயன்; மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகர கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றனர். பி.எஸ்.வாசுதேவன், ஆர்.ராமலிங்கம் நன்றியுரையாற்றினர்.

### டிசம்பர் 2023ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# சேதமடைந்த வீடுகளைப் பழுது நீக்க ரூ.45.84 கோடி நிவாரணம்!

### அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மார்ச் 6-

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

கடந்த 2023, டிசம்பர் மாதம் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களும் அதிக கனமழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் இம்மாவட்டங்களில் வசித்து வந்த பெரும்பாலான ஏழை மக்களின் வீடுகள் பெரிதும் சேதமுற்றன.

அவ்வாறு மழைவெள்ளத்தினால் பகுதியாக சேதமடைந்த வீடுகளை பழுது பார்ப்பதற்கு ரூ.2.00 இலட்சம் வரையும் முழுமையாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாக கட்டுவதற்கு ரூ.4.00 இலட்சம் வரையும் நிவாரணமாக வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இவ்வறிவிப்பிற்கிணங்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பகுதியாக மற்றும் முழுமையாக சேதமடைந்த 955 வீடுகளுக்கு பழுது நீக்கம் செய்யவும் மற்றும் புதிய கட்டுமானத்திற்கும் ரூபாய் 24.22 கோடியும், பேரூராட்சி பகுதிகளில் உள்ள 577 சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.21.62 கோடியும் ஆகமொத்தம் ரூ.45.84 கோடி வழங்கி முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயர் கல்வி மாணவர்களுக்கு EDII's ஹேக்கத்தான் போட்டி!

# புத்தாக்கக் கண்டுபிடிப்புகள் இணையதளம் வழியாகப் பெறப்படுகின்றன!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 6-

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் செ.உமாசங்கர், வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயர்கல்வி பயிலும் மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்பிற்கான EDII's ஹேக்கத்தான்-2023-24, நிகழ்வு தொடங்கப்பட்டுள்ளது. புத்தாக்க கண்டுபிடிப்புக்கள் இணையதளம் வழியாக பெறப்படுகின்றன. *https://www.edii-innovation.tn.gov.in*

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தினை, (*Entrepreneurship Development and Innovation Institute - EDII-TN*) தமிழ்நாட்டில் புதிய தொழில்முனைவோர்களை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு 2001ல் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் நிறுவியது. இந்நிறுவனம் செயல்படுவதற்கான நிதிகளையும் தொடர்ந்து தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க சிந்தனைகளை பள்ளி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் உருவாக்குதற்காக EDII-TN நிறுவனம் ஆண்டு தோறும் உயர்கல்வி மாணவர்களுக்கு இ.டி.ஐ.ஐ ஹேக்கத்தான் போட்டிகளை 2017 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் மத்தியில், அவர்கள் படிக்கிற காலத்திலேயே புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதல் சிந்தனையினை தூண்டும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஹேக்கத்தான் போட்டிகளில் பங்கு பெறும் மாணவர்கள் புத்தாக்க முறையில் சந்தைப் படுத்தக்கூடிய புதிய பொருட்களின் மாதிரிகளை உருவாக்க வேண்டும். (*The students have to generate innovative ideas & convert their ideas into marketable product prototypes*). இவ்வாறு உருவாக்கப்படும் சிறந்த மாதிரிப் பொருட்களுக்கு ஆண்டுதோறும் உயர்கல்வி மாணவர்களுக்கு 25 முதல் பரிசுகள், தலா ரூபாய் 1 லட்சம் என அரசு வழங்கி வருகிறது. இதுவரையில் 136 மாணவர் அணிகளுக்கு 1.14 கோடி ரூபாய் ரொக்கப்பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியியல் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக்கல்லூரிகள், மீன் வளக்கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் (*polytechnics*) மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் (ITIs), போன்ற 1,700-க்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் இந்தப் போட்டியில் பங்கு பெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில் 3.20 லட்சம் மாணவர்கள் இந்தப் போட்டிக்குப் பயிற்சி பெற்று பங்கு பெற்று வருகின்றனர்.

பரிசுகள், பாராட்டுச் சான்றுகள் (இது மாறுதலுக்கு உட்பட்டது இன்னும் அதிக மாணவர்களுக்கு பரிசு தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது )

- முதல் பரிசு - முதல் 20 அணிகளுக்கு தலா ரூ.1 லட்சம்.
- 2வது பரிசு 60 அணிகளுக்கு தலா ரூ.25000
- ஒவ்வொரு நிலையிலும் மாணவர்களுக்கு பங்கேற்பாளர்கள் சான்று, பாராட்டுச்சான்று, மாணவ வழிகாட்டிகளுக்கு சான்றுகள், வழிநடத்துனர்களுக்கு சான்றுகள், சிறந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கு சான்றுகள் வழங்கப்படும்.

இப்போட்டிக்கான மாணவர்கள் கண்டுபிடிப்புக்கள் *https://www.edii-innovation.tn.gov.in/* இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

புத்தாக்க சிந்தனைகளைப் பதிவு செய்வதற்கான கடைசி தேதி 20.03.2024 மாலை 5.00 மணியாகும். எனவே உயர் கல்வி பயிலும் மாணவர்கள் இதில் பங்கேற்க விரும்பினால் உங்களது கல்லூரி நிர்வாகத்தினை தொடர்பு கொண்டு தாமதமில்லாமல் மாணவ வழி நடத்துனர்கள் வழியாகப் புத்தாக்க சிந்தனைகளை (*innovative ideas*) பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., ரமணி மாதவன் எம்.சி. பங்கேற்பு! மதுரவாயல்

# 147வது வட்டத்தில் உடற்பயிற்சி கூடம் திறப்பு, புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள்!

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்! வட்டச் செயலாளர் எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை. மார்ச் 6 -

மதுரவாயல் வடக்கு பகுதி, 147 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ். ஜி.மாதவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயில் வடக்கு பகுதி, 147 வது வட்டத்தில் இன்று (6.3.2024 - புதன்கிழமை) காலை 9 மணிக்கு, மேட்டுக்குப்பம் காந்தி தெருவில் உள்ள கபடி விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி கூடம் திறப்பு விழாவிற்கும், காலை 9.30 மணிக்கு, ஸ்ரீ தேவி நகர் 3 வது தெருவில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதை சரி செய்ய புதிய வாட்டர் பைப் லைன் அமைப்பதற்கு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், எம். ஜி.ஆர்.பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.

நிகழ்வில் மண்டலம் 11, வளசரவாக்கம், மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் கலந்து கொள்வதால் நமது வட்டத்திற்கு உட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் பொதுமக்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு 147 வது வட்டச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன். எஸ்.ஜி.மாதவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஜோலார்பேட்டையில்

# நிதிநிலை விளக்கப் பொதுக்கூட்டம்!

### சூரியாகிருஷ்ணமூர்த்தி - க.தேவராஜி எம்.எல்.ஏ. - சி.என்.அண்ணாதுரை எம்.பி. சிறப்புரை!

திருப்பத்தூர், மார்ச் 6 -

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகர தி.மு.க. சார்பில் ஜோலார்பேட்டை ஜங்ஷன் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகர் முதல்வர், கழக தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் தலைமைக் கழகப் பேச்சாளர் சூரியா கிருஷ்ண மூர்த்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார்.

ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ம.முத்தமிழ்ச்செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் (பொறுப்பு) ஏ.சி.தேவகுமார், மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சத்தியமூர்த்தி, ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சதிஷ் குமார், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளர் க. உமாகன்ரங்கம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.திருப்பதி, கந்திலி தெற்கு ஒன்றிய செயலாளர் டி.அசோக்குமார், மாதனூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.சீனிவாசன், நாட்றம்பள்ளி பேரூர் செயலாளர் உமா சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் சத்தியநாராயணன், ஜோலார்பேட்டை நகர மன்ற தலைவர் காவியாவிக்டர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.சுதா, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மு.ரகுபதி, மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சி. குணசேகரன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



இராயபுரம் பகுதியில் 48 வது வட்டத்தில் மார்ச் 1 மனித நேயத் திருநாள் – இலவச மருத்துவ முகாம் வட்டச் செயலாளர் இரா.பாலன் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில், மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., நா.மனோகரன், பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், இரா செந்தில்குமார், விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி., கு. ரமேஷ், ரெயின்போ விஜயகுமார், எஸ்.ரமேஷ், சத்யநாராயணன், ப.சோமசுந்தரமூர்த்தி, கார்த்திக், செங்குட்டுவன், ஜெ.கௌரீஸ்வரன், எஸ்.புகழேந்தி, கொரியர் முருகன், இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ், ந.குமார், ஆர்.வி.லட்சுமி, வேலு, வி.சுந்தரி, கோ.நித்தியானந்தம், அயத்பாஷா, எஸ்.தங்கவாசுகி, என்.சிவக்குமார், பி.பாலாஜி, கே.குணசேகரன், சி.சின்னராஜ், ஜி.சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

91-ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு - பாவலரேறு

# பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் 16 தொகுப்பு நூல்கள் முன் வெளியீட்டு திட்ட அறிவிப்பு!

## தொல். திருமாவளவன் எம்.பி. - பொழிலன் - தமிழ்கேள்வி செந்தில்வேல் - வாலாசா வல்லவன் கருத்துரை!

சென்னை, மார்ச் 6-

தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 91-ஆம் ஆண்டு பிறந்த நாள் நிகழ்வில், பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தடைவுகள் 16 தொகுப்பு நூல்கள் சென்னை பாவலரேறு தமிழ்க் களத்தில் 9.3.2024 அன்று முன்வெளியீட்டுத் திட்ட கருத்துரை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்வு முனைவர் மா.பூங்குன்றன் தலைமையில் தமிழ்த்திரு மா.பிறைநுதல் வரவேற்புரையில், இறை. பொற்கொடி, முனைவர் கி.குணத்தொகை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

எழுத்தடைவுகள் குறித்து பெருஞ்சித்திரனாரின் புதல்வர் தோழர் பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி) விளக்கவுரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., சொல்லாய்வு அறிஞர் அருளியார், ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, தமிழ் கேள்வி ஊடகம் செந்தில்வேல், தமிழ்மண் தன்னுரிமை இயக்கப் பேராசிரியர் த.செயராமன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி - வாலாசா வல்லவன் ஆகியோர் கருத்துரை ஆற்றுகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் தமிழறிஞர்கள் பலர் பங்கேற்கின்றனர்.

வரும் சூன் மாதம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 29-ஆம் ஆண்டு நிறைவு நினைவேந்தல் நாளில் நடக்க இருக்கும் நூல்கள் வெளியீட்டுக்குரிய முன் வெளியீட்டுத் திட்ட அறிவிப்பு குறித்த இக்கருத்துரை நிகழ்ச்சியை பாவலரேறு தமிழ்க்களம் ஒருங்கிணைத்திருக்கிறது.

நிகழ்வின் நிறைவில் தமிழ்த்திரு அரசி நன்றி கூறுகிறார்.

அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வழங்கினர்! சென்னை கிழக்கு

# மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நல உதவிகள்!

## எல்.சம்பத்குமார் தலைமை! எஸ்.முரளி - ராஜசேகர் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 6

சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா (3.3.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, தாதா முத்தியப்பன் தெரு, ஆச்சாரப்பன் தெரு சந்திப்பு, கொத்தவால் சாவடியில் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் எல்.சம்பத்குமார் தலைமை வகித்தார்..

இதில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, ஆர்.வரதன், எம்.ஷேக் அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி எம்.இப்ராஹிம் கனி, ராஜேஷ் ஜெயின், பி.விஜயகுமார், எம்.விநாயகம், பா.பிரதீப்குமார், பா.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆ.சு.அசோக்குமார், ஸ்டன்ட் புஷ்பா ஆர்.ஆறுமுகம், வி.ராஜமாணிக்கம் ச.ஜெயக்குமார், கே.ரமேஷ், மா.முத்து, வே.ராமு, எஸ்.ரமேஷ்பாபு கே.பிரகாசம், துரை கணேஷ், ஏ.என்.ஆர்.செந்தில்குமார், எஸ்.ஜெகன், அ.ஆதம் கிறிஸ்வர் பாரி, கொளத்தூர் கே.கங்காசரன் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறைஅமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், துறைமுகம் தொகுதி தேர்தல் பார்வையாளர் க.பிரபு, கோ.ஏகப்பன், இசட் ஆசாத், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் மற்றும் மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை, 57 வது வட்டக் கழகச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி ஆகியோர் நன்றி கூறினர்.

பொ.த.மதிவாணன் தலைமை! எம்.சுப்பிரமணி, சி.பி.கார்த்திக் முன்னிலை!

# 177 வது வட்டத்தில் கழகக் கொடி ஏற்றி அறுசுவை உணவு வழங்கல்!

## அசன் மௌலானா எம்.எல்.ஏ. - அரிமா சு.சேகர் பங்கேற்பு !

சென்னை மார்ச்: 6

வேளச்சேரி மேற்கு பகுதி 177 வது வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா திராவிட மாடல் நாயகரின் 71.வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 177. வது வட்ட தி.மு.கழக சார்பு மன்றமான உதய சூரியன் நற்பணி மன்றம் சார்பில் டி.ஏ. கோவில் முதல் தெருவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் வட்ட கழக செயலாளர் பொ.த.மதிவாணன் தலைமையில் எம்.சுப்பிரமணி (மன்ற செயலாளர்) சி.பி. கார்த்திக் (பகுதி கழக பிரதிநிதி) ஆகியோர் முன்னிலையில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா கலந்து கொண்டு பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கி உரையாற்றினார்.

விழாவின் துவக்கமாக பகுதிசெயலாளர் அரிமா. சு.சேகர் உதயசூரியன் நற்பணி மன்றத்தின் பெயர் பலகையை திறந்து வைத்து கழக கொடியேற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி நிர்வாகிகள் பொ.த.எழில்வாணன், வி.ஜி.மோகன், வட்ட கழக நிர்வாகிகள் மு.ஜெயசந்திரன், வி.கணேஷ்குமார், ர.ரமேஷ், நவபாரதி எத்திராஜ், எஸ்.புகழேந்தி செல்வன், டி.சதீஷ், சி.சிவசாமி, கடப்பா ராஜா, எல்.மலரவன், கே.புண்ணியகோட்டி, இ.எத்திராஜ், சி.முத்துகிருஷ்ணன், ஆர்.குணசேகரன், ஆர்.தட்சிணாமூர்த்தி, கே.மோகன், பிரேம்குமார், பரசுராமன், (ஜெகநாதபுரம்) நடராஜன், குணசேகரன், தயாளன், சுப்பிரமணி, பி.மோகன், வி.பழனி, சுசீலா சரவணன், பன்னீர்செல்வம், சிவா, சந்திரசேகர், கன்னியப்பன், ஹரி பாலாஜி, கௌதமன், மற்றும் உதயசூரியன்,

நற்பணி மன்ற நிர்வாகிகள் புண்ணியகோட்டி, எம்.சுப்பிரமணி, கஜேந்திரன், தீனதயாளன், சரத்குமார், பிரபு, ராஜலிங்கம், சதீஷ், மன்ற காப்பாளர்கள். லட்சுமி காந்தன், கார்த்திக் மன்ற ஆலோசகர்கள் செயற்குழு உறுப்பினர்கள் கார்த்திகேயன், சதீஷ், வனலிங்கம், தீபக், சம்பத், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மும்பை புறநகர் மாநில தி.மு.க. நடத்திய

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## அலிசேக் மீரான் சிறப்புரை! பி.கிருஷ்ணன் தலைமை!

மும்பை, மார்ச் 6-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா மும்பை திலக் நகர் செம்பூரில் உள்ள தருண்பாரத் சேவா சங்க அரங்கில் வைத்து நடைபெற்றது.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு.கழகத்தின் பொருளாளர் பி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற விழாவில் துணைச்செயலாளர் அ.இளங்கோ வரவேற்புரை ஆற்றினார்.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு.க. செயலாளர் அலிசேக் மீரான் விழாவில் எண்ணற்ற பெண்களுக்கு நலஉதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவ-மாணவிகளுக்கு குறிப்பேடுகள், எழுது கோல்கள், வடிவியல் பெட்டிகளும் (Geometry boxes) வழங்கிச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புறநகர் தி.மு.க. துணைச் செயலாளர் முனைவர் வதிலை பிரதாபன் திராவிட கழகத் தலைவர் பெ. கணேசன், மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ.ஜைனுல்லாபுதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மும்பை மாநிலத் தி.மு.கழக அவைத்தலைவர் வே.ம.உத்தமன், புறநகர் தி.மு.க. இலக்கிய அணிப் புரவலர் சோ.பா.குமரேசன் டோம்பிவிலி கிளைச் செயலாளர் வீரை.சோ.பாபு இளைஞரணி துணை அமைப்பாளர் அமரன் உத்தமன், தோழர் கண்ணன்,

பிவண்டி கிளைப் பொருளாளர் முஸ்தாக் அலி,


வாஷி கிளைக்கழகம் சார்ந்த தில்லை, ஆறுமுகம், எம்.ஈ.முத்து, டி.சங்கர், குலசேகரன், ஜி.பசுபதிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் க.கணேசன், சங்கர் திராவிட், அ.பாலசுப்பிர மணியன், பூ.சு.அழகுராஜா, குரு, எம்.மலையாண்டி தாஸ், ம.பரமசிவன், அசைலன், ராணி,

அழகம்மாள், வீரம்மா, மாயா, சக்குபாய், காமாட்சி, சந்திரா, பிச்சையம்மா, பார்வதி, சின்னப்பொன்னு, மாதுரி, சந்திரகலா, அமுதா கிருஷ்ணன், ராஜேஸ்வரி, மாரியம்மா, சேக் அலாவுதீன், அஞ்சலை, சீத்தாராமன், திருநாவுக்கரசு, தினேஷ், வேலு, மணி, அறிவு, ராணி, அரவிந்த், ராதாகிருஷ்ணன், ஆனந்தன், சேகர், பட்டு, மீரா, ரேகா, சுரேந்தர், மணி, சைமன், பாக்யலட்சுமி, மாரியம்மா, செல்வக்குமார், அஞ்சனா, கமல், ராமு, விஜயா, நாகு, கமீலா ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று மகிழ்ந்தனர்.

நிறைவாக, செம்பூர் கிளைச் செயலாளர் நம்பி நன்றியுரை ஆற்றினார்.



திருவள்ளூர் பேருந்து நிலையத்தில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான திருவள்ளூரில் இருந்து திருநெல்வேலி வரை செல்லும் அரசு விரைவு போக்குவரத்து சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், நகர மன்ற முன்னாள் தலைவர் பொன் பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, துணை மேலாளர் கந்தசாமி, திருவள்ளூர் பணிமனை துணை மேலாளர் புண்ணியமூர்த்தி, மேலாளர் எழில், நகர அவைத் தலைவர் தி.ஆ.கமலக்கண்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.நேதாஜி, டி.மோதிலால், பி.கே.நாகராஜ், பி.சரவணன், கொப்பூர் திலீப், கைலாசம் உள்பட பலர் உள்ளனர்.

# பல்லாண்டு பாடுவோம்; பலகோடி கூறுவோம்!



கலைஞர்க்குப் பிறகிந்தக்
கழகந்தான் என்னாகும்!
நிலைக்குமா? நீளுமா
நிலவுமா? எனக்கண்ணீர்
அலையாகத் தொண்டர்கள்
ஆற்றாமல் விடுகையில்
குலையாதீர்; கழகத்தின்
கொடியேந்தி நடப்பேன்நான்;
தலைமகன் அண்ணாவின்
தமிழெனும் தடத்திலே
இலையிங்கே கலைஞரெனும்
ஏக்கத்தைப் போக்குவேன்;
தலைநிமிர்ந்து செல்லுவேன்;
தன்மானம் பகுத்தறிவு
நிலைதந்த பெரியாரை
நெஞ்சிலே கொள்ளுவேன்!

விலையாகி வடவர்முன்
விழுந்திடும் ஆட்சியைத்
தொலைத்திங்கே
வெல்லுவேன்;
தொண்ணூற்று ஐந்தாண்டு
நிலைத்திங்கே கழகத்தின்
நெடும்பயண வெற்றிகண்ட
கலைஞரின் உயிர்உணர்வில்
கலந்துவிட்ட உடன்பிறப்பீர்!

மலையெதிர்த்து நின்றாலும்
மாக்கடல் மறித்தாலும்
வலைபல விரித்தாலும்
வஞ்சகம் சிரித்தாலும்
கொலைவாளே நீண்டாலும்
கொடுங்கோலே ஆண்டாலும்
புலையரை வணங்கேன்நான்;
புன்மையை இணங்கேன்நான்!

உலகெலாம் ஒளிவீசும்
ஓர்உதய சூரியனே
இலகிடச் செய்குவேன்;
இலக்கினை எய்துவேன்;
விலகிட அடிமைநிலை
விளைந்திட விடுதலை
உலவிடும் தென்றலே
உறுத்தெழும் புயலாவேன்;
கலக்கத்தைக் கொள்ளாமல்
கழகத்தின் வெற்றியே
இலக்காகக் கொள்ளுவேன்;
இடர்களைத் தள்ளுவேன்!
துலக்கமாய்ச் சொல்லுவேன்;
துணிவோடு செல்லுவேன்;
சலிக்காமல் எதிரிகளைச்
சமரினில் வெல்லுவேன்!
சொன்னபடி கழகத்தைத்
தூக்கியே நிறுத்தியவர்,
முன்னிருந்த பெருமைக்கு
முடுக்கியே விட்டவர்
கன்னக்கோல் கூட்டத்தைக்
காதகாதம் ஓட்டியவர்
மன்னர்போல் வெற்றிக்கு
மக்களைக் கூட்டியவர்

நின்றிருந்த ஆட்சித்தேர்
நில்லாமல் செலுத்துபவர்
பின்னிருந்து பேசாமல்
பீடுடன் ஆற்றுபவர்
மின்னல்போல் பணிகளை
வேகமாய் முடிப்பவர்
கன்னல்போல் மொழிபவர்
கார்முகிலாய்ப் பொழிபவர்
ஒன்றல்ல இரண்டல்ல
உடற்றிய பன்னூறு
நன்றான செயல்களால்
நடுங்காத திண்மையால்
இன்றல்ல நாளையும்
இவரேதான் ஆளுவார்!

எண்ணற்ற நன்மைகள்
இவராட்சி ஏற்றபின்
விண்ணுற்ற மீன்களாய்
விரிகடல் அலைகளாய்
மண்ணுற்ற மலைகளாய்
மாமழை முகில்களாய்க்
கண்ணுற்ற காட்சியாய்க்
கைகளில் கிட்டின!

பெண்களுக்கு இவர்செய்த
பெருமைகள் அருமைகள்
வண்ணம்போல் இனியவை;
வாழ்க்கைக்கு ஏற்றவை;
கிண்ணத்துப் பால்போலக்
கேளாமல் கிட்டுபவை;
எண்ணித்தான் பார்த்தாலோ
இவர்போல இன்னொருவர்
கண்ணிலே படவில்லை;
கருத்தையும் தொடவில்ல!

தண்ணீரும் காவிரியும்
சந்தனமும் நன்மணமும்
வெண்மையும் தந்தமும்
விளக்கொளியும்
வெளிச்சமும்
கண்களும் இமைகளும்
கருங்கடலும் பேரலையும்
பண்களும் இன்னிசையும்
பாடலும் கருத்தும்போல்
உண்மையாம்; மேன்மேலும்
உருவாகும்; உயர்வாகும்
வண்மைகள் ஓங்கிட
வழிகாணும் தளபதியை

அண்ணாவுடன் கலைஞர்
ஆன்றோர் பேராசிரியர்
மண்ணாளும் மாண்பினால்
மகிழ்ந்திங்கு வாழ்த்துதல்
கண்ணார நெஞ்சாரக்
கருத்தாரக் காணுவோம்!

எண்ணமெலாம் கழகத்தின்
எதிர்கால வெற்றியே
திண்ணமாய்க் காணுகின்ற
தில்லியே கலங்குகின்ற
வண்ணமாய் இயங்குகின்ற
வன்மைமிகு தலைவர்க்கு
வண்ணமலர் தூவுவோம்;!
வாயாரப் பாடுவோம்
உண்ணுநீர் காற்றைப்போல்
உவந்திங்கே வாழ்த்துவோம்!

செயல்வேகம் கண்டுகண்டு
திகைக்கின்றார் திசையெங்கும்;
அயர்கின்றார் மாற்றாரும்;
அடங்குகின்றார் போற்றாரும்!
புயல்வருமுன் மழையெழுமுன்
பொல்லாநோய் பற்றுமுன்
முயல்வேகம் கொண்டங்கு
முன்வந்து நிற்கின்றார்;
இயல்பாகத் தொண்டரை
இனிதாகக் காணுகின்றார்!

துயர்ப்படு வோர்களுக்குத்
துணையாக எழுகின்றார்;
பயப்படு வோர்களுக்குப்
பாங்கனாய்த் தெரிகின்றார்;
தயங்குவோர் தோள்களைத்
தட்டியே கொடுக்கின்றார்;
மயங்குவோர் குழப்பத்தை
மாற்றியே காட்டுகின்றார்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

வயல்செழிக்கும் பயிராக
வாழ்வுக்கோர் உயிராக
கயல்கொழிக்கும் கடலாக,
கார்புரளும் வானாக,
வியர்வைக்குக் காற்றாக,
வேட்கைக்கு நீராக
அயர்வுக்குத் தீயாக
ஆற்றலுக்கு நிலமாக
உயர்வுக்கு மலையாக
உழைப்புக்கோர் ஆறாக
வெயிலுக்கு ஞாயிறாய்
வெம்மைதீர் வெண்ணிலவாய்
மயிலுக்குத் தோகையாய்
வான்குயிலுக் கின்னிசையாய்
எயிறுபோல் அரணாக
இன,மொழிக்குக் காவலராய்
உயிருக்கு உயிராக
உள்ளவர் தளபதி
உயிர்த்திடும் பிறந்தநாள்
ஒப்பற்ற சிறந்தநாள்

உயர்ந்தோங்கி நூறாக
ஒளிர்கவே; வளர்கவே!

கரிகாலன் போல்இளமைக்
காலத்தில் சிறைப்பட்டு,
தரித்திருந்த மணமாலை
சருகாக வாடுமுன்
பிரிந்தவர் இன்துணையை,
பெருந்துயர் உற்றாலும்
உரிமைக்குப் போராடி
உதையுண்டும் வதையுண்டும்
வரிப்புலியாய்ப் பலமுறை
வன்சிறை மீண்டவர்,
விரிசிறகுப் பெரும் புள்ளாய்
விண்ணிலே எழுந்தவர்
குரிசிலாம் தளபதி
கொற்றத்தில் உளபதி
பரிசிலாய் வாழ்த்துகள்
பலகோடி வழங்குவோம்!

இரும்பரண் உருசியாவின்
ஈடற்ற தலைவராய்
இருந்தவர் பெயராலே
இலகுகின்ற தளபதி
கரும்பரண் போன்றவர்;
கழகந்தான் ஈந்தவர்;
அரும்பான காலத்தே
அரசியல் களத்திலே
துரும்பாகத் தூணையும்
தூக்கியே எறிந்தவர்!
இரும்பாரம் என்றாலும்
எதிர்கொண்டு நின்றவர்
பெரும்பாலும் போராட்டப்
பேரேட்டை நிரப்பியவர்
அரும்பாடு பட்டேனும்
அண்ணா கலைஞர்மேல்
சுரும்பாகப் பறந்தவர்;
தொண்டாலே சிறந்தவர்
இருந்தமிழ் போலென்றும்
இளமையாய் வாழ்கவே!

இத்தனை சிறப்புகள்
இமயமாய் இலகிடும்
மெத்தவும் பெருமைகள்
மேவிடும் தளபதியாம்
முத்துவேலர் பேரனை,
முத்தமிழ் அறிஞரின்
வித்தகச் செல்வனை
வெற்றிகாண் செம்மலை,
உத்தமித் தாய்வயிறு
உயிர்த்திட்ட ஒருமகனை
ஒத்துயர் கற்பரசி
உளத்துலவும் கொழுநனை,
தத்துகடல் இளங்கதிர்
உதயநிதி தந்தையை
வித்தான கழகத்தின்
விழுமிய தலைவனை
இத்தமிழ் நாடுபெற்ற
என்றென்றும் முதல்வனை
முத்துமுதல் மணிகளாய்
முகிழ்த்தலர் மலர்களைக்
கொத்தாகச் செண்டாகக்
குன்றாகக் கொட்டியே
நித்தமும் போற்றுவோம்;
நீடூழி வாழ்த்துவோம்!



கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 71–வது பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாங்காடு நகர தி.மு.க. சார்பில் நகர கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் – கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அருகில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.சீனிவாசன், திருப்பெரும்புதூர் தேர்தல் தொகுதி பொறுப்பாளர் உமாகாந்த் உள்ளிட்டோர் உள்ளனர்.

### படுநெல்லி பி.எம்.பாபு தலைமையில் - வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் சார்பில்

## முதல்வர் பிறந்த நாள் விழா! கல்வெட்டு திறந்து கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

### க.சுந்தர் எம்.எல்.ஏ. - க.செல்வம் எம்.பி. சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காஞ்சிபுரம், மார்ச் 6 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் படுநெல்லி ஊராட்சியில் 03. 03- 2024 அன்று ஒன்றியக் கழகச் செயலாளர் படுநெல்லி பி.எம்..பாபு ஏற்பாட்டில். கழகத் தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் பிரம்மாண்டமான கழக கல்வெட்டினைத் திறந்து, கழக இரு வண்ண கொடியினை ஏற்றி, 71 கிலோ கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினார்.

இவ்விழாவில் காஞ்சி நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட கழக துணை செயலாளர் சிறுவேடல் க.செல்வம், கழக மாணவ ரணி செயலாளர் சிவிஎம்பி. எழிலரசன் எம்.எல்.எ. ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வாலாஜாபாத் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட கவுன்சிலர் ராஜலட்சுமி , ஒன்றிய நிர்வாகிகள் வி.பழனி, வி.வெங்கட்ராமன், கவிதாடில்லிபாபு , மாவட்ட பிரதிநிதிகள்: கே. ஆறுமுகம், கே.பார்த்திபன், எம்திருஞானசம்பந்தம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள்: எம்.அருள்முருகன், என்.ஜெயபால், எஸ். கே.சுரேஷ், ஆர்.கே.சசிகுமார், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர்.

### எம்.ரூபன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை!

## மதுரவாயல் 146 வது வட்டத்தில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு !

### காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்! தினகரன் சண்முகம் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 6 - கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 146 வது வட்டம் பாரதிதாசன் நகரில் இன்று (06-03-2024) மதியம் 12.00 மணிக்கு மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர், வளசரவாக்கம் மண்டலக் குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் எம்.எல்.ஏ. முன்னிலையில்,146 வது வட்டக் கழக செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் தலைமையில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் ஏற்பாட்டில் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நா. மணிகண்டன் , வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என மதுரவாயல் எம்.ரூபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை வடக்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்!

### வேட்பு மனுத் தாக்கல்
### தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.டி.சேகர் அவர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, மார்ச் 6 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் சென்னை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

*"அண்ணா அறிவாலயம்"*
*சென்னை 18.*
*நாள் - 5- 3- 2024.*

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### மதவெறியை ஊட்டி போதைமயமாக்கும் ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. சூழ்ச்சியிலிருந்து

## இளைஞர்களை மீட்பதும் - பாதுகாப்பதுமே நமது முக்கிய கடமை!

### "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 6 - மதவெறியை ஊட்டி போதை மயமாக்கும் ஆர். எஸ்.எஸ். - பா.ஜ.க. சூழ்ச்சியிலிருந்து இளைஞர்களை மீட்பதும், பாதுகாப்பதுமே நமது முக்கியக் கடமையென "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:

தமிழ்நாடு இந்தியாவின் போதைப் பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது என்றும், போதைப் பொருள் கடத்தல்காரர்களின் புகலிடமாக மாற்றப்பட்டுள்ளது என்றும் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை போகிறப் போக்கில் சமீபத்தில் குற்றச்சாட்டை அள்ளி வீசியிருக்கிறார். அவர்களது சமூக ஊடக கூலிப் படைகள் மூலமாகவும் இந்தப் பிரச்சாரத்தை கட்ட விழ்த்துவிட்டுள்ளனர்.

இதையொட்டி உண்மையிலேயே போதைப் பொருள் பரவலின் பிறப்பிடமாக எந்த மாநிலம் இருக்கிறது, எங்கிருந்து சமீப சில ஆண்டுகளாக தமிழகம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போதைக் கலாச்சாரம் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்த ஆய்வுகளும், விவரங்களும் வெளிவரத் துவங்கி யுள்ளன.



தீக்கதிர்
2024 மார்ச் 05 செவ்வாய்க்கிழமை

போதைமயமாக்கும் பாஜக

தமிழ்நாடு இந்தியாவின் போதைப் பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது என்றும், போதைப் பொருள் கடத்தல்காரர்களின் புகலிடமாக மாற்றப்பட்டுள்ளது என்றும் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை போகிற போக்கில் சமீபத்தில் குற்றச்சாட்டை அள்ளி வீசியிருக்கிறார். அவர்களது சமூக ஊடக கூலிப் படைகள் மூலமாகவும் இந்தப் பிரச்சாரத்தை கட்ட விழ்த்துவிட்டுள்ளனர்.

இதையொட்டி உண்மையிலேயே போதைப் பொருள் பரவலின் பிறப்பிடமாக எந்த மாநிலம்

2023 டிசம்பர் 13 அன்று மாநிலங்களவையில் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில் ராஜஸ்தான், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட், மணிப்பூர், குஜராத், உத்தரப்பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்கள்தான் முதன்மை இடத்தில் உள்ளன. இந்த மாநிலங்களோடு ஒப்பிடும் போது தமிழ் நாட்டில் போதைப் பொருள் புழக்கம் குறைவே என்பது தெரிய வருகிறது. அந்த குறைவான போதைப் பொருள் புழக்கத்தையும் மட்டுப் படுத்த சமீப காலமாக தமிழ்நாடு அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளையில் இன்னும் வலுவான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

இதைப் பற்றி பேசும் போது, தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதும் மிக மோசமான போதைப் பொருள்கள் கடத்தலுக்கு காரணியாக இருப்பவர்கள் பெரும்பாலும் பா.ஜ.க.வினராக, அக்கட்சியுடன் தொடர்பு இருப்பவர்களாக உள்ளனர் என்ற தகவல்கள் தொடர்ந்து வெளியாகி வருவதை வெறுமனே கடந்து செல்ல முடியாது. பெரு வாரியான போதைப் பொருள்கள் இந்தியாவிற்குள் ஊடுருவது குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகம் வழியாகத்தான் என ஏராளமான செய்திகள் தரவுகளோடு வெளியாகி யுள்ளன. இந்த துறைமுகம் மோடியின் கூட்டுக் களவாணி அதானிக்குச் சொந்தமானது என்பது கவனிக்கத்தக்கது.

மதவெறியை ஊட்டி சமூகத்தை மனிதத் தன்மையற்றதாக மாற்றும் ஆர். எஸ்.எஸ். பா.ஜ.க., முழுக்க முழுக்க தனது கட்டுப்பாட்டிற்குள் இளைய சமூகத்தை கொண்டு வரும் நோக்கத்துடன் நாடு முழுவதும் போதை மயமாக்கும் சூழ்ச்சியை திட்டமிட்டு அரங்கேற்றுகிறது என்பதை மறுப்பதற்கு இல்லை.

அடுத்தடுத்து வரும் செய்திகள் இதை உறுதிப்படுத்துகின்றன. போதைமயமாக்கும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் சூழ்ச்சியிலிருந்து இளைஞர்களை மீட்பதும், பாதுகாப்பதும் நம் அனைவரின் முக்கியக் கடமையாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் கவரைப்பேட்டையில் 5 வயது குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முகாமினை துவக்கி வைத்தார். உடன் எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், வேதாச்சலம், கே.ஜி. நமச்சிவாயம், எம்.கேசவன், கே.வி.நாகராஜ், பி.அறிவழகன், தேசப்பன், மங்களம் ஜெ.சுரேஷ், ஜி.பாலசுந்தரம், ஜெ.என்.எஸ்.பாண்டியன் வட்டார மருத்துவ அலுவலர் மனேஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட நான்காவது மண்டலத்தில் உள்ள 33வது வார்டில் எர்த் பண்டில் சுமார் ஒரு கோடியே 92 லட்சம் ரூபாயில் சாலை பணியை மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மண்டல குழு தலைவர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், கழக நிர்வாகிகள் எம்.வினோத், கன்னியப்பன், பார்த்திபன் மதன், கமலக்கண்ணன், சிவா, மாரி, குட்டி, தயாளன், பிச்சையா மற்றும் அரசு அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், வள்ளல் அதியமான் கோட்ட வளாகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று (05.03.2024) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், தருமபுரி சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன் முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌரவ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுருளிநாதன் உட்பட துறைசார் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற 3500 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் வழங்கினார். உடன் பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு, தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார், கவுன்சிலர் ராஜேஷ் ஜெயின் உள்ளனர்.

### தருமபுரி மாவட்டம் – பாலக்கோடு – நல்லம்பள்ளி வட்டங்களில்

# இலங்கைத் தமிழர் முகாம்வாழ் பயனாளிகளுக்கு 168 வீடுகள்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் – செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தனர்!

தருமபுரி,மார்ச்.6-

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கெசர்குளி அணை இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 80 வீடுகள் மற்றும் நாகாவதி அணை இலங்கை தமிழர் முகாம் வாழ் பயனாளிகளுக்கான நல்லம்பள்ளி வட்டம், டொக்குபோதன அள்ளியில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் 88 வீடுகள் என மொத்தம் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் 168 குடியிருப்புகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று (05.03.2024) திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி முன்னிலை வகித்தார்கள்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், மதிகோன்பாளையம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட முகாம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பையாறு அணை முகாம், காரிமங்கலம் வட்டம், தும்பலஅள்ளி அணை முகாம், பாலக்கோடு வட்டம், கெசர்குளி அணை முகாம், சின்னாறு அணை முகாம், பென்னாகரம் வட்டம், நாகாவதி அணை முகாம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணை முகாம், அரூர் வட்டம், அரூர் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூட முகாம் உள்ளிட்ட 8 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 2,438 மக்கள் வசித்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டத்தில் சின்னார் அணை இலங்கை தமிழர்க்கான மறுவாழ்வு முகாமில் புதியதாக 50 வீடுகள் ரூ.2.51 கோடி மதிப்பில் கடந்த 17.9.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தற்போது நாகாவதி அணை முகாமில் 88 குடியிருப்புகளும், கெசர்குளி அணை முகாமில் 80 குடியிருப்புகளும் என மொத்தம் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் 168 குடியிருப்புகள் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோரால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் பொதுமக்களுக்கு வீடு சாவியினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான் கோட்டை ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வள்ளல் அதியமான் கோட்ட வளாகத்தில் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அதிநவீன நூலகத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், 7 புதிய பேருந்து வழித்தடங்களில் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். வள்ளல் அதியமான் கோட்ட வளாகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் வழங்கினார்கள்.

முன்னதாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு மாவட்ட அளவிலான பரிசளிப்பு விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 292 மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ரூ.7.80 இலட்சம் மதிப்பீட்டில் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் இன்று வழங்கினார்கள்.

மேலும், பாலக்கோடு பேரூராட்சியில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் வாழ் மக்களுடைய வாழ்வாதாரத்திற்கான நிரந்தர குடியிருப்புகளாக மாற்றி தர வேண்டும் என்ற நோக்கத்தோடு, முதல் கட்டமாக 3510 வீடுகளும், இரண்டாவது கட்டமாக 3959 வீடுகளும் கட்டித்தரப்படும் என அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் நேரடியாகவே வேலூருக்கு வருகை தந்து, அடிக்கல் நாட்டி, ஓராண்டு காலத்தில் கட்டப்பட்ட வீடுகளை பொதுமக்களுடையே பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்கள்.

இதைப்போல, தமிழகத்திலுள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் குடியிருப்புகள் கட்டப்பட்டு வரும் பணிகள் நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், கெசர்குளி அணை இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் 80 வீடுகள் மற்றும் நாகாவதி அணை இலங்கை தமிழர் முகாம் வாழ் பயனாளிகளுக்கான நல்லம்பள்ளி வட்டம், டொக்குபோதன அள்ளியில் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் 88 வீடுகள் என மொத்தம் ரூ.8.40 கோடி மதிப்பீட்டில் 168 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட முகாம்களில் வீடு கட்டுகின்ற பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை மூலம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் பொதுமக்களுக்கு பணக்கொடை, விலையில்லா அரிசி, பாத்திரங்கள், துணிமணிகள், விலையில்லா சமையல் எரிவாயு உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முகாம் வாழ் குழந்தைகளின் கல்விக்காக கல்லூரிகளில் பொறியியல் மற்றும் வேளாண்மை கல்லூரிகளில் முதற்கட்டமாக 50 இடங்களை ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கான அனைத்து கல்வி செலவுகளையம் அரசே ஏற்கிறது.

அதுமட்டுமல்லாமல் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, மகளிர் உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. படித்த இளைஞர்களுக்கு, திறன் மேம்பாடுகளை உருவாக்குவதற்காக பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் வாழ் பொது மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். இம்முகாம் வாழ் பொதுமக்கள் தங்களுக்கு கட்டிகொடுக்கப்பட்டுள்ள வீடுகளை நல்ல முறையில் பராமரித்து, வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் அடைய வேண்டும். மேலும், தங்களது குழந்தைகளுக்கு உயர் கல்வி வரையிலான கல்வியை அளித்து அவர்களும் வாழ்வில் முன்னேற உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். இவ்வாறு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ். செந்தில்குமார், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ. சுப்பிரமணி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌரவ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுருளிநாதன் உட்பட துறைசார் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





திராவிட மாடல் நாயகரின் 71.வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு,வேளச்சேரி மேற்கு பகுதி 177. வது வட்ட தி.மு.கழக சார்பு மன்றமான உதய சூரியன் நற்பணி மன்றம் சார்பில் டி.ஏ.கோவில் முதல் தெருவில் வட்ட கழக செயலாளர் பொ.த.மதிவாணன் தலைமையில் எம்.சுப்பிரமணி, சி.பி. கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் அசன் மௌலானா எம். எல்.ஏ பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கி உரையாற்றினார். விழாவின் துவக்கமாக பகுதிசெயலாளர் அரிமா.சு.சேகர் உதயசூரியன் நற்பணி மன்றத்தின் பெயர் பலகையை திறந்து வைத்து கழக கொடியேற்றி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்டம் முத்தூர் அங்கன்வாடி மையத்தில்

# போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், மார்ச் 6 -

திருப்பூர் மாவட்டம் முத்தூர் அங்கன்வாடி மையத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமை 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தை களுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாமைத் துவக்கி வைகக்கப்பட்டுள்ளது. போலியோ எனப்படும் இளம் பிள்ளை வாத நோயை அறவே ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நாடு முழுவதும் பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தை களுக்கும், ஒரே நாளில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் 895 மையங்கள் மூலமாகவும், நகர்ப்புறங்களில் 259 மையங்கள் மூலமாகவும் என மொத்தம் 1,154 மையங்களில் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தை களுக்கும் கூடுதல் தவணை போலியோ சொட்டு மருந்து ஆங்காங்கே உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்பசுகாதாரநிலையங்கள், துணை சுகாதார நிலை யங்கள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிக்கூடங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், டோல்கேட் மற்றும் தனியார் சொட்டு மருந்து முகாம் மையங்களிலும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது. இதில் 26 நடமாடும் குழுக்கள் மூலமாகவும், பேருந்து நிலையங்கள் மற்றும் புகை வண்டி நிலையங்களில் 23 குழுக்களும் அமைத்து சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

இப்பணிக்காக சுகாதாரத்துறை, அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த 4,616 பணியாளர்கள் மற்றும் ரோட்டரி சங்கத்தினர் ஈடுபடவுள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் சுமார் 1.98 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. இம்முகாம்களுக்கு தேவையான சொட்டு மருந்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு தயார் நிலையில் உள்ளது. அரசால் வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்து தரமானது, பாதுகாப்பானது உலக சுகதார நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்றது. எனவே 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு இது வரை எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து அளித்திருந்தாலும் முகாம் நாளான இன்று கூடுதல் தவணையாக போலியோ சொட்டு மருந்து அளித்து தங்கள்குழந்தைகளைபோலியோ நோயிலிருந்து பாதுகாப்பதுடன் போலியோ நோய் இல்லாத இந்தியாவை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே. ஆர்.முத்துக்குமார், ஒன்றியக் கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, வட்டார மருத்துவ அலுவலர் டி.ராஜலட்சுமி, முத்தூர் மருத்துவ அலுவலர் பிரசாத் தாமரைக்கண்ணன், பேரூராட்சி தலைவர் சுந்தராம்பாள், துணைத்தலைவர் மு.க.அப்பு, நல்லூர் அப்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஜெ.பால்மோகன் தலைமை! அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் – சென்னை கிழக்கு மாவட்ட

# சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் 271 பாதிரியார்களுக்கு நல உதவிகள்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் வழங்குகிறார்! மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை,மார்ச்.6-

மார்ச் 1 மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழா சென்னை கிழக்கு மாவட்ட திமுக சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் 58 அ வட்டத்தில் சூரிய சுடர் 51 ஒருவருக்கொருவர் அருள் செய்வோம் உடன்பிறப்புகள் துணை நிற்போம் 271 பாதிரியார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (7.3.2024 வியாழக்கிழமை) காலை 8 மணியவில் சி.எஸ்.ஐ செயின் பால் சர்ச் சூளையில் நடைபெறுகிறது.

அமைச்சர் பி.கே சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைத் தலைவர் ஜெ. பால்மோகன் தலைமை வகிக்கிறார்.

பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் 271 பாதிரியார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இதில், மேயர் பிரியா ராஜன், இ பரந்தாமன் எம்.எல்.ஏ., தாயகம் கவி எம்.எல்.ஏ ,ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஓ.ஏ நாகலிங்கம், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, சி. மகேஷ் குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, வே. உமா காந்த், வி.சுதாகர், சொவேலு, கோ. ஏகப்பன், பா ஸ்ரீராமலு, கே.எஸ்.எம் நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஆர். நிர்மலா தேவி, எம் பெரஸ் கான் ,எல் சுந்தர்ராஜன், பாத்திமா முஸ்ஸபர் ,எஸ் ரசூல் ,டிவி வேலு, எம் மலர்மாறன் ,கே அன்னபூரணி, எஸ் ஜெகதீசன், வி விஜயகுமார் எஸ் டால்பினரி ,இ மொய்தீன்,வான்மதி கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இறுதியில் ஆர்.பாபு (எ) சந்திரசேகர் நன்றியுரையாற்றுகிறார்.

### எஸ்.தமிழ்ச்செல்வன் ஏற்பாடு! தி.மு.தனியரசு தலைமையில்

# 10வது வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள்! 1000 பேருக்கு உணவு வழங்கல்!

## மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, மார்ச் 6-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி 10வது வட்ட செயலாளர் எஸ்.தமிழ்செல்வன் ஏற்பாட்டில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (6.3.2024) காலை 10 மணிக்கு மேற்கு மாடவீதி தெரு, 10வது வட்ட கழகத்தில் 1000 பேருக்கு இனிப்பு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் நடைபெறுகிறது.

வரவேற்புரை: இ.பாலசுப்பிரமணியன் டி.என்.முரளிமனோகரன் கே.மோகன் எஸ்.சிரிஷா சி.டி.வீரப்பன் வி.ஜி.எம்.பாலாஜி கே.ராஜேந்திரன் ஜி.சுகுமார் எம்.ராஜேந்திரன் முன்னிலை எம்.வி.குமார் ஆர். எஸ்.சம்பத் கே.பிரபாவதி ஆர்.குமரேசன் எஸ்.பொண்ணிவளவன் ஏ.பி.ஜெ.பாலமுருகன்.

கழக கொடி ஏற்றி 1000 பேருக்கு இனிப்பு , ஆறுசுவை உணவு வழங்குபவர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.. சிறப்பு விருந்தினர்: வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் சி.தசரதன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், ஆர்.சி.ஆசைதம்பி ஆகியோர் இதில் கலந்து கொள்ள உள்ளனர் .

ஆகையால் மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுகொள்கிறேன்.

நன்றியுரை: பி.கணேஷ் குமார்.





சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் கழக தலைவர் – முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று, மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் மா சுப்பிரமணியன் வழிகாட்டலில், மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி, மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், ஆகியோர் அறிவுறுத்தல்படி, மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.ஜெ. ரோஷன் காந்த் தலைமையில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரலாக திண்ணை பிரச்சாரம் மற்றும் வீடுகள் தோறும் கழக சாதனை விளக்கி பிரச்சாரம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வட்ட கழக செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம், துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் , மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு மற்றும் ஏ.ஜி.வேலன், டாக்டர் எம் .சி.அழகிரி, ஏ. சுந்தரி , டி.கலைநேசன் எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி.சீனிவாசன், எஸ்.ஜமுனா, எஸ்.பாலாஜி எம். ஜி.சுரேஷ், எ.லீலவாதி, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன், பி.நாகராஜ் ,கே.முருகன், கே.பிரகாஷ், எஸ் ஆனந்தன், எம் .பி.நவசுந்தர், டி.நிக்சன், டி.ஆல்பர்ட், எம். எம். கண்ணப்பன், எம்.எஸ்.லட்சுமணன், எம்.டி.ராஜி. இளைஞர் அணி சேர்ந்த எம்.எஸ் . கார்த்திக், எம்.ஜி.விக்னேஷ், எம்.எஸ்.ரூபன், முகேஷ், வலீத் ,ரிஷி பென்னி, கர்ணன் , கே.தயாநிதி, எம்.பி.எழிலரசு, வி.திருமுருகன், எம்.வினோத், எஸ்.சபரி, சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.



மாநகர் போக்குவரத்துக் கழக பொது நிர்வாக பணியாளர் சங்கத்தின் சார்பாக மார்ச் 1 அன்று பல்லவன் இல்லம் முன்பு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை தொ.மு.ச. பேரவையின் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி, தொ.மு.ச. பேரவையின் பொருளாளர் கி.நடராசன் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சங்க பொதுச் செயலாளர் வி.மகேந்திரன், தலைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, பொருளாளர் க. ரமேஷ் மற்றும் சங்க முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் முடங்கியதால் மக்கள் தவிப்பு

சென்னை, மார்ச் 6 -

இன்றைய சூழலில் பெரும்பாலானோர் உபயோகிக்கும் செயலி எதுவென்றால் அது இன்ஸ்டாகிராம் தான். இன்றைய இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு தருவதில் இன்ஸ்டாகிராம் முக்கிய பங்கு வகுக்கிறது.

தற்போது இரவு 8.30 மணியில் இருந்து உலகில் உள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு இன்ஸ்டாகிராம் ஸ்லோவாக உள்ளதாகவும், பலரும் ஆப்பை ஓபன் செய்ய முடியாமல் திணறிக் கொண்டும் இருக்கின்றனர்.

இதை அந்நிறுவனம் வேகமாக சரி செய்ய வேண்டும் என்று மக்கள் அனைவரும் இன்ஸ்டாகிராம் நிறுவனத்திற்க்கு ரிபோர்ட் அடித்து கொண்டு வருகின்றனர்.



சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு .மொழியாக அறிவிக்கக் கோரி சென்னை ராஜ ரத்தினம் ஸ்டேடியம் அருகே காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்தி வரும் மக்கள் இயக்கம் மற்றும் வழக்கறிஞர் செயல்பாட்டு குழுவினரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளின் படி கழக அமைப்புச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சென்று சந்தித்து போராட்டக் குழுவினரின் கோரிக்கை நிறைவேற திமுக உறுதியாக துணை நிற்கும் என்றும், உண்ணா நிலை நோன்பை கைவிடக் கோரியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்த கோரிக்கை கடிதத்தினை போராட்ட குழுவினரிடம் அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி வழங்கி உறையாற்றினார். இந்நிகழ்வின் போது கழக வழக்கறிஞர் என்.மருது கணேஷ் உடன் இருந்தார்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

### பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### த.ஆறுமுகம் தலைமை! க.ஜெயராமன் - அ.முருகன் முன்னிலை!

# பெரம்பூர் 44 வது வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### கோ.வி.லெனின் - பொள்ளாச்சி சித்திக் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை

சென்னை,மார்ச்,6

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி 44 வது வட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை பொதுக் கூட்டம் இன்று (6.3.2023 புதன் கிழமை) மாலை 6 மணிக்கு பெரம்பூர், பழனி ஆண்டவர் கோயில் தெருவில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் த.ஆறுமுகம் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கி.ரவி,பி.சண்முகம்,இரா. முரளிதரன்,கு.பரத்,வி.மணி, பா.வினோத்,ஜெ.கோமதி, நா.தட்சணாமூர்த்தி,கோ. பொன்னிவளவன்,ப.பிரதீப்,பூ.வேல்முருகன், பி. கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் கழகத் தகவல் தொழில் நுட்ப அணி ஆலோசகர் கோ.வி.லெனின், கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் பொன்னாச்சி சித்திக் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.,வழக்கறிஞர் சரவணன், ஐட்ரீம் மூர்த்தி,எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர், எம்.எல்.ஏ. இரா.கருணாநிதி, இரா.நரேந்திரேந்திரன், .மனோகரன்,எஸ்.ஆர்.கமலக் கண்ணன், வி.தயாளன்,ந. சர்ப ஜெயா தாஸ், ஏ.ஆர். ஆர்.மலைச்சாமி, சி. ஆனந்தி,க.சர்மிளாகாந்தி,ஏ. தமிழ்ச்செல்வன்,டி.கமலக் கண்ணன், ப.மதிவாணன், க.அமுல்,நா.சேகர்,ஆர்.எஸ். மனோகரன்,க.பாபு,ஜி.மாரி முத்து,கி.தினகரன்,வி.முருகன், கே.வி.ராஜன்,என்.கார்த்தீபன், மு.உமாபதி, இரா. அரிதாஸ், கே.இ.செந்தமிழ் அரசு,சி.எஸ்.இரவி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். தி.தீசாம்பிளசன் நன்றி கூறுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி 86வது வட்ட திமுக சார்பில் சூரிய சுடர் 43 நிகழ்வில் 171 சிகை அலங்காரம் செய்பவர்களுக்கும் 170 பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகளை தலைமை நிலைய செயலாளர் துறைமுகம் காஜா வழங்கினார். 86வது வட்டக் கழகச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் எம்.கமல் தலைமையில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி, டி,எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தா.கண்ணபிரான், ஏ.மல்லிகா, எம்.டி.மோனிஷா நன்றி கூறினர்.

## கே.என்.தாமோதரன் தலைமையில் 176 அ வட்டத்தில் 1000 பேருக்கு உணவு

சென்னை, மார்ச் 6 -

கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை கொண்டாடி மகிழும் விதமாக மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவிப்பின்படி வேளச்சேரி விஜயநகர் முதல் பிரதான சாலை அருகில் 176 அ வட்ட கழகத்தின் சார்பில் வட்ட செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில் மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு. சேகர் , 176வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே. ஆனந்தம் முன்னிலையில் கழக இருவண்ணக் கொடியேற்றி பொது மக்களுக்கு காலை உணவு 1000 பேர்க்கு வழங்கி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வா கிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்,வட்ட செயற்குழு உறுப்பினர்கள், செயல்வீரர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை கொண்டாடி மகிழும் விதமாக மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அறிவிப்பின்படி வேளச்சேரி விஜயநகர் முதல் பிரதான சாலை அருகில் 176 அ வட்ட கழகத்தின் சார்பில் வட்ட செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில் மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு. சேகர் , 176வது வார்டு மாமன்ற உறுப்பினர் வே. ஆனந்தம் முன்னிலையில் கழக இருவண்ணக் கொடியேற்றி பொது மக்களுக்கு காலை உணவு 1000 பேர்க்கு வழங்கி மகிழ்ந்தனர். இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்,வட்ட செயற்குழு உறுப்பினர்கள், செயல்வீரர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலை!

# ரூ.4.17 கோடியில் நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடம்!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் திறந்து வைத்தார்!

நாமக்கல், மார்ச் 6-

நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டியில் உள்ள மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டு ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலக புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, 3 நகர்ப்புற பேருந்துகள் மற்றும் 2 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் பேசும் போது, நாமக்கல் மாவட்டத்தில் புதிய போக்குவரத்து அலுவலகம் திறப்பு விழாவும், புதிய வழித்தட பேருந்துகளை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி என இரண்டு நிகழ்ச்சிகள் இணைந்து சிறப்பாக நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்களின் உத்தரவின்படி, மாநில நிதியிலிருந்து 2000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, முதற்கட்டமாக தற்போது 250க்கும் மேற்பட்ட பேருந்துகளை செயல்பாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும் ஒவ்வொரு பகுதியிலும் பழைய பேருந்துகளை புதிய பேருந்துகளாக மாற்றி செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு கொண்டிருக்கிறது.

வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, வேலூர் பொன்மலர்பாளையம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்து, இராசிபுரம் பேருந்து நிலையத்தி லிருந்து ஆண்டகளூர் கேட், பாச்சல் பிரிவு நத்தமேடு சிங்காளந்த புரம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்துகள் என 2 நகர்ப்புற பேருந்துகளும், இராசிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்கா பாளையம் கோவை வழித்தடத் திற்கு 1 புறநகர் பேருந்து, மோகனூர் பேருந்து நிலையத்திலிருந்து நாமக்கல், துறையூர், விழுப்புரம் கிளாம்பாக்கம் வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து, நாமக்கல் பேருந்து நிலையத்திலிருந்து சேலம், ஆத்தூர், சிதம்பரம் மயிலாடுதுறை வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து என 3 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜெர்மன் வங்கி நிதியுதவியோடு 2200 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இந்த பேருந்துகள் அனைத்தும் 15 வருடங்களாக உள்ள பேருந்து களுக்கு மாற்றாக எட்டு மாத காலத்திற்குள் கொண்டு வரப்பட உள்ளது. லாரி உரிமையாளர் சங்கங்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. எந்த கோரிக்கையாக இருந்தாலும் அதனை நிறைவேற்ற உறுதுணையாக இந்த அரசு இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

#### சாலை விதிகளை பின்பற்ற வேண்டும்!

கடந்த வருடத்தை விட இந்த வருடம் சாலை விபத்துகள் குறைந்துள்ளது. மேலும், சாலை விபத்து களை குறைப்பதற்காக போக்குவரத்து துறையின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி வருகின்றன. மேலும் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் பேருந்து ஓட்டுநர்கள் விபத்து ஏற்படாமல் பேருந்து இயக்குவதற்கு ஓட்டுநர்களை ஊக்குவிக்கும் வகையில் 25 வருடம் விபத்து இல்லாமல் ஓட்டிய ஓட்டுநர்களுக்கு தங்க நாணயமும், 10 வருடம் விபத்து இல்லாமல் ஓட்டிய ஓட்டுநர்களுக்கு வெள்ளி நாணயமும் வழங்கப்பட்டது.

இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தில் சிகிச்சை அளிப்பதற்காக ரூ.1.00 இலட்சத்தி லிருந்து ரூ.2.00 இலட்சமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி உத்தரவிட்டுள்ளார்கள். தொடர்ந்து, பின்பற்றி விபத்து இல்லாத மாநிலமாக மாற்ற அனைவரும் சாலை விதிகளை பின்பற்ற வேண்டும் என அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்தார்.

இவ்விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் புதிய வட்டார போக்குவரத்து அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கடந்த வருடம் 572 சாலை விபத்துகளினால் இறந்துள்ளார்கள். இதில் 67 சதவீதம் இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல், 4 சதவீதம் நான்கு சக்கர வாகனத்தில் சீட் பெல்ட அணியாத காரணத்தினால் இறந்துள்ளார்கள். இந்த சாலை விபத்துகளில் 42 சதவீதம் மதியம் 3 மணி முதல் இரவு 9 மணி வரை ஏற்பட்டுள்ளது. இதில் 37 வயது முதல் 60 வயது வரை 45 சதவீதம் நபர்கள் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டு இறந்துள்ளார்கள். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமங்கள் வழங்கப்படும் பொழுது அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றால் மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு இருசக்கர வாகனங்களை இயக்கி காட்ட இருசக்கர வாகனங்கள் இல்லாத நபர்கள் உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து பெற்று வருகின்றார்கள். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு வரும் நபர்களுக்கு எந்த ஒரு சிரமமும் ஏற்படாமல் இருக்க 91 வட்டார போக்குவரத்து அலுவலகங்களுக்கு புதிய வாகனங்களை கொடுத்துள்ளார். மேலும், சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தை தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். நாமக்கல் மாவட்டத்திற்கு புதிய வட்டார அலுவலகம் கட்டுவதற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு அரசிற்கும், போக்குவரத்து அலுவலர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் மண்டலம்) சார்பில் வேலூர்பொன்மலர்பாளையம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்து, இராசிபுரம் பேருந்து நிலையத்தி லிருந்து ஆண்டகளூர் கேட், பாச்சல் பிரிவு நத்தமேடு சிங்காளந்த புரம் வழித்தடத்திற்கு 1 நகர்ப்புற பேருந்துகள் என 2 நகர்ப்புற பேருந்துகளும், இராசிபுரம் பேருந்து நிலையத்தி லிருந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம் கோவை வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து, மோகனூரிலிருந்து நாமக்கல், துறையூர், விழுப்புரம் கிளாம்பாக் கம் வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து, நாமக்கல் பேருந்து நிலையத்திலிருந்து சேலம், ஆத்தூர், சிதம்பரம் மயிலாடுதுறை வழித்தடத்திற்கு 1 புறநகர் பேருந்து என 3 புறநகர் பேருந்துகள் என மொத்தம் 5 புதிய வழித்தட பேருந்துகளை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மு.செந்தில்குமார், அட்மா குழுத்தலைவர் (நாமக்கல்) வி.கே. பழனிவேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) நிர்வாக இயக்குநர் ஆர்.பொன்முடி, துணை போக்குவரத்து ஆணையர் (ஈரோடு சரகம்) பெ.சுரேஷ், நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலர் ஆ.கா.முருகன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர திமுக சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்த நாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் தி.வை.இரவி ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. கழக சட்ட துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் கே.ஜெ.ரமேஷ், பிரபுகஜேந்திரன், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், சன்.பிரகாஷ், கே.சுரேஷ்குமார், பெ.வினோத், ஜெ.அன்பழகன், உஷாராணி ரவி, சி.கமலக்கண்ணன், தெ.நாகராஜ், ர.பேபி, ஆர்.ரவி, ச.பாபு, சீ.குணசேகரன், பி.எல்.ஆர்.தேவியோகா, இ.எச்.சலீம், எம்.மோகன், கு.தமிழ்செல்வி, ஆர். செந்தாமரை கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# கபட வேஷம் கலையும் காலம்!



ப.திருமாவேலன்

“இனிமேல் தி.மு.க. இங்கு இருக்க முடியாது. இனிமேல் தி.மு.க.வை தேடினாலும் கிடைக்காது” என்று மாட்சிமை தாங்கிய மன்னர்பிரான் நரேந்திரமோடி அறிவித்திருக்கிறார். பராக் பராக்!

இதைக் கேட்கும் போதே ‘பயமாக’ (!) இருக்கிறது! சென்னைக்கு வருகை தரும் மோடியை வரவேற்று சைதாப்பேட்டையில் ஒருவர் வைத்துள்ள வரவேற்பு பலகையில், **‘மந்திரவாதியே வருக!’** என்று குறிப்பிட்டுள்ளார். மோடி பேசுவதைப் பார்த்தால் மந்திரவாதி பேசுவதைப் போலத் தான் இருக்கிறது. **‘மந்திரத்தால் மாங்காய் பழுக்காது’** என்பது கிராமத்து பழமொழி.

‘புலிக்கு பயந்தவர் என் மீது படுத்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்வார்கள் அல்லவா? அப்படி இருக்கிறது.... தோற்கப் போகும் மோடி, தோல்வி பயத்தில் வாய்க்கு வந்ததை எல்லாம் சொல்லி வைத்து விட்டுப் போயிருக்கிறார்.

அதிகாரம் கண்ணை மறைத்த நிலையில் இப்படி அவர் பேசி இருப்பதற்கு, ஞானக் கண்ணை திறந்து வைக்கும் நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள்.

**“தி.மு.க.வை அழிப்பேன் என்று கிளம்பியவர்கள் என்ன ஆனார்கள் என்பதுதான் தமிழ்நாட்டு அரசியல் வரலாறு. மே மாதத்துக்கு பிறகு பதவியை இழக்கப் போகும் மோடி, அதை ஓய்வுக்காலத்தில் படிக்கட்டும். அவரது பாணியில் பா.ஜ.க.வே இருக்காது என நான் சொல்ல மாட்டேன். எங்களை தலைவர் கலைஞர் அப்படி வளர்க்கவில்லை. ஜனநாயகக் களத்தில் நின்று ஒரு கட்சி எப்படிச் செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்படும் உரிமை பா.ஜ.க. வுக்கு உண்டு. கடந்த காலத்தில் நல்ல ஆளும் கட்சியாக இருக்கத் தெரியாத பா.ஜ.க., வருங்காலத்தில் நல்ல எதிர்க்கட்சியாகவாவது இருக்கட்டும் என நான் வாழ்த்துகிறேன்”** என்பதாவது மோடி மனதைப் பக்குவப்படுத்துமா எனத் தெரியவில்லை.

நெல்லையில் இருந்து டெல்லி போன பிறகு நள்ளிரவு வரை நடந்த பா.ஜ.க. தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில், “இந்தியா முழுவதும் இருந்து வரும் செய்திகள் நமக்குச் சாதகமாக இல்லை” என்று வருத்தத்துடன் பேசப்பட்டதாமே! அப்படியானால், ‘இருக்காது’ என்ற வினைச்சொல் யாருக்குப் பொருந்தும்?!

இந்தியா முழுமைக்கும் பெரும்பாலான மாநிலங்களில் ‘இந்தியா’ கூட்டணி வலுவான அணிச்சேர்க்கைகளைச் செய்துள்ளது. இவர்களில் ஓரிரு மாநிலங்கள் தவிர அனைவருமே கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது பிரிந்து இருந்து பா.ஜ.க.வுக்கு நன்மை செய்தவர்கள். இப்போது ஒன்றாகச் சேர்ந்து ஆப்பு வைக்கத் தயாராகி விட்டார்கள். இதுதான் டெல்லியில் நடந்த ரகசியக் கூட்டத்தில் நடந்த விவாதம் ஆகும்.

இப்படி அனைவரையும் ஒன்று சேர்த்த பெருமையும் மோடிக்குத்தான் உண்டு. விசாரணை அமைப்புகளை வேட்டைக்கு பயன்படுத்தியதன் பலன், அனைவரும் ஒன்று சேர்ந்து விட்டார்கள். இதற்காக மோடிக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

**இப்படி ஒன்று சேர்ந்தாக வேண்டும் என்பதை முதலில் சொன்னவர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘பா.ஜ.க.வை வீழ்த்துவதற்கும் அகில இந்தியக் கொள்கைக்கு உடன்படும் கட்சிகள், மாநில அளவில் கூட்டணியைச் செய்து கொள்ளுங்கள்’ என்று முதலில் சொன்னவர் அவர்தான். அதுதான் நடந்துள்ளது.**

அவர் வரமாட்டார், இவர் வரமாட்டார் என்ற வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அனைவரும் சேர்ந்ததுதான் பிரதம மன்னருக்கு ஆத்திரம். அதற்கு காரணமானவர் என்பதால் தி.மு.க. தலைவர் மீது அதிகப்படியான கோபம் காட்டப்படுகிறது.

தி.மு.க. இப்படி பலரைப் பார்த்து விட்டது. பக்குவப்பட்டு விட்டது. அதன் வலிமையை அதிகப்படுத்தியவர்களே அதன் எதிரிகள்தான்.

**மோடிக்கு எட்டு வயது இருக்கும் போதே மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்று ‘உதயசூரியன்’ சின்னத்தை பெற்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். 1958 முதல் சின்னம் மாறாத கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்.**

**சூரியனால் தாமரை கருகுமே தவிர, சூரியனை தாமரையால் எதுவும் செய்ய முடியாது.**

**அழிச்சிடுவேன் பார், ஒழிச்சிடுவேன் பார் என்று கிளம்பியவர்கள் எல்லாம் ஆக வேண்டியது போல ஆனார்கள் அப்பனே!**

**ஐம்பதுகளில் திராவிட இயக்க ஒழிப்பு மாநாடுகளை நடத்திய ம.பொ.சி, அறுபதுகளில் ‘உதய சூரியன்’ சின்னத்தில் போட்டியிட்டு சட்டசபைக்குள் போகும் தகுதியைப் பெற்றார். சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத், காங்கிரஸ் கட்சிக்குள் சேர்ந்து விட்டார். திராவிட இயக்கத்தை ஒழிக்க ‘சக்கர வியூகம்’ அமைத்த சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், விருகம்பாக்கம் தி.மு.க. மாநாட்டுக்கு வந்து உட்கார்ந்து கொண்டு, ‘என் மீது இவ்வளவு பாசம் வைத்துள்ளீர்களா?’ என்று உருகிய காட்சியைப் பார்த்தது தமிழ்நாடு. எழுபதுகளில் விலகிய எம்.ஜி.ஆர்., எண்பதுகளில் அ.தி.மு.க.வை தி.மு.க.வுடன் இணைக்கும் பேச்சுவார்த்தையில் ஒரே சோபாவில் கலைஞரோடு உட்கார்ந்தவர்தான்.**

**கலைஞரை எதிர்ப்பதற்காகவே பத்திரிகை தொடங்கியவர் சோ. 1996 ஆம் ஆண்டு அண்ணா அறிவாலயம் வாசலுக்கு வந்து நின்றதோடு அவரது கசப்புக் காய்ச்சல் முடிவுக்கு வந்தது. அதற்குப் பிறகு அவர் எழுதியவை அனைத்தும், காலநீட்டிப்புக்காக விட்ட மூச்சுப் பயிற்சிகளே!**

இன்றைக்கு இணையத் தளங்களில் கொம்பு சுற்றிக் கொண்டிருக்கும் சங்கிக் குஞ்சுகளுக்குத் தெரியுமா? அ.தி.மு.க., தி.மு.க. முதுகில் ஏறித் தான் நாடாளுமன்ற - சட்டமன்றங்களுக்குள் அக்கட்சி போனது என்பது?!

**1980 இல் பா.ஜ.க. உதயமானது. அதில் இருந்து தமிழ்நாட்டில் அதன் நிலைமை இதுதான்...**

*** 1984 நாடாளுமன்றத் தேர்தல் - ஒரு தொகுதியில் போட்டி - தோல்வி**

*** 1989 நாடாளுமன்றத் தேர்தல் - 3 இடத்தில் போட்டி - தோல்வி**

*** 1991 நாடாளுமன்றத் தேர்தல் - 15 இடத்தில் போட்டி - தோல்வி**

*** 1996 நாடாளுமன்றத் தேர்தல் - 37 இடத்தில் போட்டி - அத்தனையிலும் தோல்வி**

*** 1996 சட்டசபைத் தேர்தல் - பத்மநாபபுரம் தொகுதியில் மட்டும் வெற்றி**

*** 1998 நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் சேர்ந்தது - 5 இடத்தில் போட்டி - 3 இடத்தில் வெற்றி**

*** 1999 நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் சேர்ந்தது - 6 இடத்தில் - போட்டி 4 இடத்தில் வெற்றி**

*** 2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் 21 இடத்தில் போட்டி - 4 இடத்தில் வெற்றி**

*** 2004 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் 7 இடத்தில் போட்டி - அனைத்திலும் தோல்வி**

*** 2006 சட்டசபைத் தேர்தலில் தனித்து போட்டி - 225 தொகுதியில் போட்டியிட்டு அனைத்திலும் தோல்வி - 221 தொகுதிகளில் டெபாசிட் போனது.**

*** 2009 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையில் சில கட்சிகள் கூட்டணி - அனைத்திலும் படுதோல்வி**

*** 2011 சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையில் சில கட்சிகள் கூட்டணி - அனைத்திலும் படுதோல்வி - 204 தொகுதியில் போட்டியிட்டு 198 இடங்களில் டெபாசிட் போனது.**

*** 2014 மோடி பிரதமர் ஆன நாடாளுமன்றத் தேர்தல் - தே.மு.தி.க., பா.ம.க., ம.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இருந்தது. 8 தொகுதிகளில் போட்டியிட்டு கன்னியாகுமரியில் பொன்னார் மட்டும் வென்றார்.**

*** 2016 சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையில் சிறு கட்சிகள் கூட்டணி - 180 தொகுதியில் போட்டியிட்ட பா.ஜ.க. அனைத்திலும் டெபாசிட் இழந்தது.**

*** 2019 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வுடன் கூட்டணி - 5 இடங்களில் போட்டியிட்ட பா.ஜ.க. அனைத்திலும் தோல்வி.**

*** 2021 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் 20 இடங்களில் போட்டி - 4இல் மட்டுமே வெற்றி.**

இதுதான் தமிழக பா.ஜ.க.வின் தேய்மான வரலாறு. இப்படி ஒரு கட்சியை தமிழ்நாட்டில் வைத்துக் கொண்டு, ‘தி.மு.க. இனி இருக்காது’ என்று பேசு வதற்கு மோடிக்கு உண்மையில் தைரியம் வேண்டும்.

இதன் மூலம் நாம் உணர்வது, பிரதமர் யதார்த்தத்தில் இல்லை என்பதுதான். ஏதோ ஒரு கற்பனை லோகத்தில் அவரை வைத்திருக்கிறார்கள் என்பது புரிகிறது. தமிழக பா.ஜ.க.வுக்கு 18 சதவிகிதம் வாக்கு வந்துவிட்டது, 23 சதவிகிதமாகக் கூட அது ஆகலாம் என்று சொல்லும் கப்சாக்களை சங்கிக் குட்டிகள் நம்பலாம். பிரதமருமா நம்புவது? இவை அனைத்தும் **‘பீம்சிங் கப்சாக்கள்’** என்பார் பழைய எடிட்டர் ஒருவர். ‘ என்ன எழுதுவது என்று தெரியாத போது பில்டிங்கின் பீம் பார்த்தால் யோசனை வருமாம். அந்த கற்பனைகளை சிலர் எழுதுவார்கள்’ என்பார் அவர். அத்தகைய ‘பீம்சிங்’ சர்வேக்களை வைத்துக் கொண்டு வாயாடக் கூடாது.

**தமிழ்நாட்டில் பா.ஜ.க. எப்போதுமே ஓட்டை தான். இங்கு ஓட்டு எடுக்க முடியாது. ஆனால் பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் வட மாநிலங்களிலேயே ஓட்டை விழுந்து விட்டது. அதைத் தான் நடக்கப் போகும் தேர்தலில் பார்க்கப் போகிறோம். ‘இருக்காது பா.ஜ.க.’ என்று அங்கே சொல்ல ஆரம்பித்திருக்கின்றன ‘இந்தியா’ கூட்டணி கட்சிகள்.**

எல்லா காஸ்டியூமும் போட்டாச்சு. தோற்ற பிறகு போடும் காஸ்டியூம் என்னவாக இருக்கும்?!

---

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில்

## தாம்பரத்தில் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. – திருச்சி சிவா எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

தாம்பரம், மார்ச்.6-

தாம்பரம் மாநகரத்தில் மார்ச் 06ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் சமூக நீதி நாயகன் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 71வது அகவை நாள் விழா மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் கழகப் பொருளாளர், நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் டி.ஆர். பாலு எம்.பி., கழகக் கொள்கைப்பரப்புச் செயலாளர், திருச்சி என்.சிவா எம்.பி., மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாவட்டத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் என்.மருதுகணேஷ், பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் க.அன்புசெழியன் ஆகியோர்கள் உரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு பகுதிக் கழகச் செயலாளர் டி.காமராஜ் வரவேற்புரையில் ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி (எ) விவேகானந்தன், ஒன்றியப் பெருந்தலைவர் பா.சங்கீதா, பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.இந்திரன், பகுதிக் கழகச் செயலாளர், எஸ். சேகர் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், 1வது மண்டலக்குழுத் தலைவர் வே.கருணாநிதி, 2வது மண்டலக்குழுத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, மாநகரத் துணைச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா எம்.சி., மாநகரப் பொருளாளர் வ.விஜயரங்கன், பி.சதாசிவம், பகுதிச் செயலாளர்கள்.இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், த.ஜெயக்குமார், இ.எஸ். பெர்னாட், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள். க.தேவேந்திரன், மு. ரஞ்சன், ஆர்.எஸ்.சங்கர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மு.வேல்முருகன், சி. கே.ஜெகதீஸ்வரன், ஜனனி சுரேஷ்பாபு, எல்.பிரபு, வி. ரவிச்சந்திரன், பி.கே.ஏ. சத்யபிரபு, ரமணிஆதிமூலம் எம்.சி., இ.மனோகரன், மலர் மு.கருணாநிதி, இரா. விஜயகுமார், இரா.ரத்தினகுமார், டைகர் சிவா, தி.ச.நடராஜன், கோ.தேனுபுரி, ஆர்.அகஸ்டின், டி. கே.கோட்டி, கி.முத்து மாறன், எம்.எஸ்.லலித் ராஜதீபன், மரு.எஸ்.கண்ணன், எஸ்.சத்தியசீலன், வீ.கார்த்திக், ச.இராஜேஷ், டி.கே. தாமஸ், ச.பிரபு, ஜெ.இன்சமாம் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத்தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், பகுதிக்கழக நிர்வாகிகள், வட்டக்கழகச் செய லாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக பேச்சாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாய் கலந்து கொள்கின்றனர்.

---

பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## மாதவரத்தில் முதலமைச்சர் பிறந்த நாள் விழா! மாபெரும் பொதுக்கூட்டம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையில், அமைச்சர் ஆர்.காந்தி, திண்டுக்கல் லியோனி சிறப்புரை!

சென்னை, மார்ச் 6-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், எல்லோருக்கும் எல்லாம், திராவிட மாடல் நாயகர் முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் 6.3.2024 புதன்கிழமை மாலை 6 மணிக்கு 16வது வட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நடைபெறும் இப்போது கூட்டத்திற்கு, மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை தாங்குகிறார்.

வட்டச் செயலாளர்கள் இ.கண்ணப்பன், கே.அங்குசாமி, கே.கருணாகரன், கா. தாமரைச்செல்வன், பி.எஸ். சந்துரு,வி.ரா.குப்பன் ஆகியோர் வரவேற்கிறார்கள்.

பகுதி நிர்வாகிகள் வி.திராவிட வீரன், கா.சிவசங்கரன்,ஆ.ராஜேந்திரன், எஸ்.கவுரி, ஆர்.முரளி, பி. தரணி, க.காசிநாதன், பி. நிர்மல் குமார், கே.செல்வன், நா.மோகன் குமார் நாகூரார், வி.கார்த்திகேயன், பா. சந்திரன், கே.ராஜா, நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாண்புமிகு இராணிப்பேட்டை ஆர்.காந்தி நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.கழக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்எல்ஏ, நா.சந்திரபாபு, மிசா பா.மதிவாணன், வி.இராமநாதன், வி.கண்ணதாசன், வீ.கவி கணேசன், குறிஞ்சி எஸ் கணேசன், மூ.ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு, ஜி.துக்காராம், ஏ.வி.ஆறுமுகம், எஸ். நந்தகோபால், பெ. சரவணன், வை.மா.அருள்தா சன், மி.வே.கருணாகரன், ஜி.தயாளன், ஜி.ராஜேந்தி ரன், ஜெ.ஜெய் மதன், என்.பரந்தாமன், டி.ஏ.ராஜு, இரா. முருகேசன், பி.சாந்தி, ஆர். டி.மதன்குமார், எம்.எம். செந்தில், எஸ்.ஏ.சீனி வாசன், வி.தியாகராஜன் எம் கோமலவல்லி,அம்மு மூர்த்தி, பி. வெங்கடேசன், பி.சன் முனியாண்டி, து.கோபால், சி.ஏழுமலை, லட்சுமி காந்தன், ஜி. தேவநேசன், ஏ.சுந்தர்ராஜ், கு,தமிழ்மணி. ஆர்.டி.குமார்,காஞ்சி மதிவாணன், கோவிந்தராஜ், ரா. மோகனசுந்தரம், கே. ரவிக்குமார், ஜே.அப்துல்அசன், உதயராஜ், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மு.சதீஷ்குமார், கேபிள் த.கணேசன், டி.ஜி. ஆர்.மணிவண்ணன், ஜி. கே.இனியன், ஏகா கார்த்திகேயன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, பி.துரைசாமி, பி.குணசேகரன், துரை தசரதன், முகமது வசீம் ,அமுதா மணிராஜ், கலைச்செல்வி, சுதா, எஸ்.சுதா, கே.யுவராணி, சரவணன், எஸ்.கோபாலகிருஷ்ணன், பா.கோபிநாத், வி. மணிகண்டன், இ.பாஸ்கரன், சி.அருணாசலம், எச்.பீர் முகமது, கே.சேரலாதன், எஸ். சிவகுமார், பேன்சி ரமேஷ், எஸ்.விஜி, கே.சண்முக பிரியன், எம்.என்.அஜய் தென்னவன், விஜயன் யுவராஜ், த. விக்னேஸ்வரன், என். பிரபு ,ராஜன் 16 வது வட்ட நிர்வாகிகள் இ.அருள், இ.வெங்கடேசன், என் பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ்குமார், கே.ராஜ்மோகன், சி.முத்தையா, வி.மாரி, கே.ஏ.ரமேஷ், சி.உத்திராஜ், 16வது வட்ட பாக முகவர்கள் வி.ராஜி, ஜி.நித்யானந்தம், எஸ்.வெள்ளைச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள். முடிவில் பகுதி துணை செயலாளர் கே.சிவசங்கரன் நன்றி கூறுகிறார்.

### வாட்ஸ் அப்பில் வருவது அல்ல வரலாறு!

மதுக்கடைகளை நம்பித்தான் அரசு இருக்கிறது என்ற திரிபுவாதம் தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்டு, பொதுப்புத்தியிலும் ஏற்றப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன எதார்த்தம் என்பதை நாட்டு மக்கள் அறிந்துகொள்ளும் வகையிலான ஒரு சம்பவம் சமீபத்தில் நடந்திருக்கிறது. சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கடந்த 27, 28, 29 ஆகிய தேதிகளில், சென்னை இலக்கியத் திருவிழா, இளைஞர் இலக்கிய விழா நடைபெற்றது.

அதில், 'தமிழ்நாட்டின் பொருளாதாரம்' எனும் தலைப்பில் திட்டக்குழுத் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் பேசினார். பின்னர் மாணவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், மாணவர் ஒருவர் "மதுக்கடைகள் மூலம்தான் அரசின் பொருளாதாரம் இருக்கிறதே!" என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த ஜெயரஞ்சன், "அரசின் வருமானம் 3 இலட்சம் கோடி ரூபாய்; ஆனால், டாஸ்மாக்கின் மூலம் வரும் வருவாய் அதில் 15 ஆயிரம் கோடி ரூபாய்தான். ரூ.3 லட்சம் கோடி ரூபாய் எங்கே இருக்கிறது? வெறும் 15 ஆயிரம் கோடி ரூபாய் எங்கே இருக்கிறது? கல்லூரி மாணவர்கள் உண்மை தெரியாமல் பேசலாமா? இது எவ்வளவு அபத்தமாக இருக்கிறது?" எனக்கூற மாணவர்கள் உண்மையை உணர்ந்தனர்.

### ஃப்ளாஷ்பேக்


தனலட்சுமி



### தினம் ஒரு கடிதம்!

என் தந்தை வழக்கறிஞர் விஜயராமன் அவர்கள் 54 ஆண்டு காலம் தி.மு.கழகத்துக்காக உழைத்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு தினம் ஒரு கடிதம் எழுதுவதைத் தனது வாழ்நாள் பழக்கமாகக் கொண்டிருந்தார். என் தந்தை, கம்பம் வட்டச் செயலாளராக இருந்த போது 1990- ஆம் ஆண்டு கலைஞரைச் சந்தித்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. "சாகும்போது நான் எழுதும் கடிதம் மறுநாள் கலைஞரின் கைகளில் கிடைக்க வேண்டும். அது போதும் எனக்கு" என்று வாழ்ந்த என் தந்தையை நினைத்தால், எனக்குப் பெருமையாக இருக்கிறது.

–வி.தனலட்சுமி, கம்பம்,
தேனி மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in


### கருவூலம்

#### பெரியாரின் தொலைநோக்கு!

1937-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியைச் சந்தித்தது. நீதிக்கட்சியின் தோல்வியை ஒரு தரப்பினர் வரவேற்றுக் கொண்டாடினர். அதைப் பார்த்த பெரியார், "நீதிக்கட்சி இன்று தோற்கடிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அதன் கொள்கைகளும் குறிக்கோளும் எந்தக் காலத்திலும் தோற்கடிக்கப்பட மாட்டாது" எனக் குறிப்பிட்டார். பெரியாரின் தொலைநோக்குச் சிந்தனைதான் 1967-ஆம் ஆண்டு கழகம் ஆட்சியைப் பிடித்தது.

## எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 1





# சமூக நீதிக்கான குரல்!

'எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கவேண்டும்' என்பதே திராவிட மாடல். இந்த உயர்ந்த இலட்சியத்தை நோக்கி, தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். ஆனால், புராண காலம் தொட்டு இன்றுவரை அனைவருக்கும் அனைத்தும் சமமாகக் கிடைக்கவில்லை. ஆதிக்க வகுப்பார் நாட்டின் வளங்கள் அனைவருக்கும் கிடைத்துவிடாமல், தடுக்கும் அநீதியும், அந்த அநீதியை எதிர்க்கும் சமூக நீதிப் போராட்டமும் வரலாறு நெடுகத் தொடர்கிறது. அதில் ஒரு பகுதி இடஒதுக்கீட்டுக்கான போராட்டம்.

தங்கள் ஆதிக்கத்தைத் தொடர விரும்புபவர்கள் ஒரு வர்க்கமாகவும், அவர்களின் அநீதியான ஆதிக்கத்தை எதிர்ப்பவர்கள் ஒரு வர்க்கமாகவும் எதிரெதிர் திசையில் நின்று மோதுவதை, "இன்று வரையிலான வரலாறு முழுவதும் வர்க்கப் போராட்ட வரலாறே" என்றனர் கார்ல் மார்க்ஸும் ஏங்கெல்சும். வர்க்கப் போராட்ட வரலாற்றை இந்தியச் சூழலில் பார்ப்பனியத்துக்கும் பௌத்தத்துக்கும் இடையேயான மோதல் என்றார் அண்ணல் அம்பேத்கர்.

'எங்களுக்கு மட்டுமே கல்வி கற்கும் அறிவும் உரிமையும் உண்டு' என்பது மோசடியான இடஒதுக்கீடு. 'அறிவை விரிவுசெய்' என்பது நியாயமான அறிவுப் பங்கீட்டுக்கான போர்க்குரல். 'மதிப்புமிகு வேலைகளைச் செய்வது எங்கள் பிறப்புரிமை' என்பது அநீதியான இட ஒதுக்கீடு. 'கண்ணியமான வேலைவாய்ப்பு எங்களுக்கும் வேண்டும்' என்று போராடுவது நீதியை நிலைநிறுத்த கோரும் உரிமைக்கான இட ஒதுக்கீடு.

நீண்டகாலம் இந்துக்களின் சட்டநூலாக விளங்கிய மனுதர்மம், வேதங்கள் ஓதுதல், கற்பித்தல், யக்ஞங்கள் செய்தல், செய்வித்தல், தானம் கொடுத்தல், வாங்குதல் ஆகிய ஆறு தர்மங்களை, பிராமண வர்ணத்துக்கு ஒதுக்கியது. ஒரு வகுப்பாரின் ஆதிக்கத்துக்கு வழிவகுக்கும் ஒதுக்கீடு இது. நான்காம் வர்ணமாகிய சூத்திரர்களுக்கு மனு ஒதுக்கிய தர்மம் என்னவெனில், முதல் மூன்று வர்ணத்தாருக்கு (பிராமணர், ஷத்திரியர், வைசியர்) பணிவிடை செய்வதே ஆகும். இது ஒரு வகுப்பாரின் நலன்களுக்கு எதிரான ஒதுக்கீடு. தங்களுக்கு ஒதுக்கப்பட்டத் தர்மங்களை மீறும் சூத்திரர்கள் தண்டிக்கப்பட்டனர். சூத்திர வர்ணத்தில் பிறந்த சம்புகன், தனக்கு ஒதுக்கப்பட்ட வர்ண தர்மத்தை மீறி தவம் செய்ததற்காக இராமனால் தண்டிக்கப்பட்டான்.

சூத்திரன் தவம் செய்யக்கூடாது என்று மனுதர்மம் வகுத்த மோசடியை மீறி, தவம் செய்ததற்காக சம்புகன் தண்டிக்கப்பட்டான். சூத்திரனாய் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக, ஏகலைவனுக்கு வில்வித்தை கற்றுக்கொடுக்கத் துரோணர் மறுத்தார். இதை ஏற்றுக்கொள்ளாத ஏகலைவன் மறைந்திருந்து வில்வித்தை கற்றான். சூத்திரன் வில்வித்தை கற்றுக்கொள்ளக் கூடாது என்பது அநீதி. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற ஏகலைவனின் குரல், ஆதிக்கத்தை எதிர்க்கும் உரிமைக்குரல்.

அநீதியை ஏற்றுக்கொள்ள மறுத்து, உயிரைத் தியாகம் செய்து போராடிய பலரின் கதையை வரலாறு பதிவு செய்துள்ளது. அநீதியான இட ஒதுக்கீட்டை எங்கள் உயிரைக் கொடுத்தேனும் எதிர்த்து, நியாயமான இடஒதுக்கீட்டை வகுப்போம் என்பதே அவர்களின் தியாகத்தில் இருந்து நாம் கற்கும் பாடம்.

அனைத்திலும் அனைவருக்கும் உரிமை உண்டு என்பது நீதி. எங்களுக்கு மட்டுமே அறிவும் வளமும் உண்டு என்பது அநீதி. அநீதிக்கு எதிரான போர்க்குரலின் சட்டவடிமே இடஒதுக்கீடு. அதன் வரலாற்றைப் புரிந்துகொள்வது, நாம் இன்று அடைந்துள்ள உயரங்களுக்குப் பின்னால், நமது முன்னோடிகள் பட்ட காயங்களை அறிந்து கொள்வது சமூக நீதி களத்தில் தொடர்ந்து செயலாற்ற நமக்கு பாடமாக இருக்கும். அந்த வரலாற்றை வாராவாரம் அறிய தரும் 'எல்லோருக்கும் எல்லாம்'.

–குரல் ஒலிக்கும்

## மாநாடு

ர.பிரகாசு 1





ஓவியம் :
கி.சொக்கலிங்கம்

# அரசியல் விழிப்புக்கு ஒரு வழி!

ஒரு நாட்டின் அரசியலுக்கும் இன்னொரு நாட்டின் அரசியலுக்கும் வேறுபாடுகள் இருக்கலாம். ஒரே நாட்டுக்குள்ளேயே ஒரு மாநிலத்துக்கும் இன்னொரு மாநிலத்துக்கும் அரசியல் தட்பவெப்பம் மாறுபடலாம். ஒரு மாநிலத்துக்குள்ளேயே கூட ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்கும் வித்தியாசங்கள் பல இருக்கலாம். ஆனால், உலகம் முழுக்க அரசியல் கட்சிகளுக்குள் வேறுபாடு இல்லாத ஒன்று 'மாநாடு'.

19-ஆம் நூற்றாண்டில்தான் உலகம் முழுக்க அரசியல் மாநாடுகள் அதிகம் நடக்கத் தொடங்கின. ஆனால், அமெரிக்காவைப் பொறுத்தவரை 1766-ஆம் ஆண்டிலேயே ஹார்ட்போர்ட் நகரில் முதல் அரசியல் மாநாடு நடந்ததாக வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. இந்தியாவில் 1888-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நடந்த 'முதல் இந்திய தேசிய சங்க அமர்வு'தான் முதல் மாநாடாக அறியப்படுகிறது.

தொண்டர்கள், நிர்வாகிகளைக் கூட்டி கொள்கைகள், லட்சியங்களை அறிவிப்பது, அரசுக்குத் தீர்மானங்களை வலியுறுத்துவது, மக்களுக்குத் தங்கள் கட்சியின் பிரகடனங்களை அறிவிப்பது என மாநாடுகளுக்கு என்று தனி வரையறை உலகம் முழுக்க இருக்கிறது. அப்படித்தான் தென்னிந்தியாவிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் மாநாடுகளை மிக முக்கிய கருவியாகக் கையிலெடுத்தது.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் சுதந்திர வேட்கை வீறு கொண்டெழுந்த சமயம். இந்தியத் துணைக்கண்டம் முழுக்கப் பற்றியெரிந்த அந்த நெருப்பு தமிழ்நாட்டிலும் கொழுந்துவிட்டு எரிந்தது என்றாலும் கூட, ஆங்கிலேயர்களிடம் இருந்து விடுதலை பெறுவது மட்டுமே போதுமானது எனக் கருதவில்லை தமிழ்நாடு. ஆங்கிலேய ஆதிக்கத்தோடு, ஆரிய ஆதிக்கத்தையும் ஒழித்து, சமத்துவம்- சமூக நீதி- சம உரிமையும் பெறப்பட வேண்டுமென்ற வேட்கையும் தமிழ்நாட்டில் ஊற்றெடுத்தது. அதற்கான முதல் ஊன்றுகோலை நீதிக்கட்சி நட்டது. பின்னர் அது பெரியாரால் திராவிடர் இயக்கமாய் பரிணமித்தது. பேரறிஞர் அண்ணா- முத்தமிழறிஞர் கலைஞரால் திராவிட அரசியலாக வீறுகொண்டு எழுந்தது அந்த சுயமரியாதை வேட்கை.

இந்தச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் திரும்பத் திரும்பப் பேசியும், இயங்கிக் கொண்டே இருந்ததால்தான் இன்றைக்கும் சுயமரியாதை உணர்வை தமிழ்நாடு இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு திராவிட இயக்கம் பயன்படுத்திய ஆயுதங்களில் மிக முக்கியமானது 'மாநாடுகள்'. இன்றைக்கு தமிழ்நாடு வாய் நிரம்ப அழைக்கும் 'பெரியார்' என்ற பட்டமே 1938 தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் பெரியாருக்குக் கொடுக்கப்பட்டது.


ஒருகாலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்குக் கூடப் போய் சேராதிருந்த திருக்குறள் இன்றைக்கு உலகப் பொதுமறை. அதற்கு மிக முக்கியக் காரணம் பெரியார் நடத்திய திருக்குறள் மாநாடுகள். ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு கொடுக்க வேண்டுமென்று, செங்கல்பட்டு, 1929 முதல் சுயமரியாதை மாநாட்டில் பெரியார் இயற்றிய தீர்மானம்தான், கலைஞர் ஆட்சியில் சட்டமானது. இப்படி நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கி, இன்றுவரை திராவிட இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் சட்டங்களாகி உள்ளன. அந்த மாநாடுகள் எல்லாம் இன்றைக்கு வரலாறுகளாகி இருக்கின்றன.

அத்தகைய வரலாற்றை இன்றைய இளம் தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கிற முயற்சியே 'மாநாடு' தொடர். வாரம் ஒரு வரலாற்றை வாசிப்போம் இனி!

## திராவிடத்தால் வாழ்கிறோம்

409

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




–வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131


1924 - 2023
MTC
தமிழ்நாடு அரசு
மாநகர போக்குவரத்துக் கழகம் - சென்னை
வேளச்சேரி 100 அடி சாலையில் 5 ஆண்டு காலம்
மேம்பால பணிக்காக மாற்றுப் பாதையில் இயக்கப்பட்ட
மாநகர பேருந்துகளை, பழைய வழி தடத்தில் இயக்கவும்
மற்றும் புதிய வழித்தடங்களில் மாநகர பேருந்துகளை
பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கும் நிகழ்ச்சி
பேருந்துகளை மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கிவைத்து சிறப்பிப்பவர் :
மாண்புமிகு. மா.சுப்பிரமணியன் B.A., LLB., அவர்கள்
சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு துறை அமைச்சர்
முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் MP
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர்
இரா.துரைராஜ்
சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர் - 13 வது மண்டல குழு தலைவர்
அரிமா.சு.சேகர்
வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர்
வேளச்சேரி P.மணிமாறன் MC
தேர்தல் பணி குழு செயலாளர்
வேளச்சேரி S.பாஸ்கரன் MC
மாவட்ட பொருளாளர்
மகேஸ்வரி முருகவேல் MC
S.முருகவேல் கே.என்.தாமோதரன் பொ.த.மதிவாணன் த.பார்த்திபன்
தே.கோபி க.பாரதிதாசன் எஸ்.சக்திவேல் ஜி.பி.எஸ்.பாலசதீஷ்
என்றும் அன்புடன்
வேளச்சேரி வே.ஆனந்தம் B.A.,MC
மாவட்ட அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி, 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர்
நாள் : 06.03.2024 - புதன்கிழமை - காலை 9.00 மணி
இடம் : 100 அடி சாலை, HDFC பேங்க் அருகில், வேளச்சேரி சென்னை - 42
9444129952
சென்னை தெற்கு மாவட்டம் - விளையாட்டு மேம்பாட்டு அணி


மார்ச்-1
மக்கள் முதல்வரின்
மனிதநேயத் திருவிழா
சூரியச் சுடர் - 47
நேர்மையின் பக்கம் போராடுவார்!
நெஞ்சுக்கு நீதியாய் வாதாடுவார்!!
நாள் : 06.03.2024 புதன்கிழமை காலை 8.00 மணி
இடம் : திருவள்ளுவர் திருமண மாளிகை, பெரியார் நகர்,
சூரியச் சுடர் - 48
இணக்கம் வளர்ப்பது திராவிடம்!
இஸ்லாம் முதல்வரின் சிநேகிதம்!!
நாள் : 08.03.2024 புதன்கிழமை காலை 10.00 மணி
இடம் : ஹயாத் மஹால், பிராட்வே
தலைமை
துரைகண்ணன்
மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்
இசட்.ஆசாத் எம்.சி
மாவட்ட பொருளாளர்
முன்னிலை
திரு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - மாண்புமிகு அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை
மேயர் பிரியாராஜன்
திரு. கலாநிதிவீராசாமி எம்.பி திரு. தயாநிதிமாறன் எம்.பி
இரா.விடுதலை க.பிரபு
ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் எம்.சி
கே.சந்துரு சி.மகேஷ்குமார்
சரிதாமகேஷ்குமார் எம்.சி தேவஜவகர்
எஸ்.பன்னீர்செல்வம் எஸ்.தனசேகர்
ஆர்.எஸ்.சித்திக் ம.அசோக்குமார்
எஸ்.இராஜசேகர் எஸ்.முரளி எம்.விஜயகுமார்
ஜி.எம்.தேவன் ப.ஸ்ரீராமுலு எம்.சி
NPM.சேக்அப்துல்லா ஆர்.கலைச்செல்வி
இப்ராஹிம்கனி பி.விஜயகுமார் எம்.வினாயகம்
பா.ஜெகதீஷ் பா.பிரதீப்குமார் எஸ்.புகாரி
200 வழக்கறிஞர்களுக்கு
நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திரு. என்.ஆர்.இளங்கோ எம்.பி
கழக சட்டத்துறை செயலாளர்
271 பள்ளிவாசல் இமாம் துணை இமாம் மற்றும்
பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
திரு. செஞ்சி.கே.எஸ்.மஸ்தான்
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
நன்றியுரை
கே.பி.ஆதவன்மணி
68வது வட்ட கழக செயலாளர்
பி.டி.சி.ரவி
68 அ வட்ட கழக செயலாளர்
க.கவியரசு
60வது வட்ட செயலாளர்
ஆ.நா.பாத்திபன்
60 அ வட்ட செயலாளர்
த.கதிரவன்
56வது வட்ட செயலாளர்
Star Signs
044 - 43 55 48 47
கொளத்தூர் கிழக்கு பகுதி, துறைமுகம் கிழக்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள்!

# திருவொற்றியூர் மேற்கு பகுதியில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் - முனைவர் கோ.வி.செழியன் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 6

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (06.03.2024, புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு அஜாக்ஸ் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு. முனைவர் கோ.வி. செழியன். சிறப்புரையாற்ற வருகிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி., மாநில மீனவர் அணி தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., மாநில ஆதி திராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் மயிலை சி.தசரதன், 1-வது மண்டல குழு தலைவரும், கிழக்கு பகுதி கழக செயலாளருமான தி.மு.தனியரசு எம்.சி., 2வது மண்டலக் குழு தலைவரும், மத்திய பகுதி கழக செயலாளருமான ஏ.வி.ஆறுமுகம் எம்.சி.,

பகுதி கழக நிர்வாகிகள் நா.திருசங்கு, யு.எஸ்.குறளரசன், இ.குமரவேல், ஏ.இந்துமதி, எம்.வஜ்ரவேல், வட்ட கழக செயலாளர்கள்: 1-வது வட்ட கழக செயலாளர் மு.சிவகுமார் எம்.சி, 3(அ) வட்டக் கழக செயலாளர் பி.தமிழரசன் எம்.சி, 2 வது வட்டக் கழக பொறுப்பாளர் டி.சேகர், 3 வது வட்ட கழக செயலாளர் மு. மாணிக்கவேலன், 4 வது வட்ட கழக செயலாளர் கே.பவுல், 6 வது வட்ட கழக செயலாளர் கி. கண்ணன் எக்ஸ்.எம். சி,

மாவட்ட கழகப் பிரதிநிதிகள்: எம்.சந்திரகுமார், ந.ராம்குமார், ஜி.தினேஷ், வி.வீரமுத்து, ஆர். தினேஷ்குமார், பொன்.கோ.விஜயன், முருகாஆறுமுகம், எஸ். கணேஷ், எஸ். ஆர்.மலைராஜ், எஸ். மகேந்திரன், இ.வி. சரவணன் ஆகியோர் பங்கேற்க உள்ளார்கள்.

இதில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட, பகுதி,வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் ( பி. எல்.ஏ.-2) பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நன்றியுரை: ஜி.தினேஷ் (மாவட்ட கழகப் பிரதிநிதி)

வே.மதிமாறன் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

# பெரம்பூர் வடக்குப் பகுதியில் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## பகுதிச் செயலாளர் அ.முருகன் வேண்டுகோள்! ஏ.சரவணன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 6-

பெரம்பூர்வடக்குப்பகுதிச் செயலாளர் அ.முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெரம்பூர் வடக்கு பகுதி கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் 71 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா இரண்டரை ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (6.3.2024 - புதன்கிழமை) மாலையில் 13வது மத்திய குறுக்கு தெரு எம். கே.பி. நகர் 37வது வட்டத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திராவிட கழக பேச்சாளர் வே.மதிமாறன் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றுகிறார். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். இதில் டாக்டர் கலாநிதி வீராச்சாமி எம்.பி. தொகுதிப் பொறுப்பாளர் ஏ.சரவணன் ஆகியோர் உரையாற்றுகிறார் கள். எனவே பகுதி கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன் தலைமையில் ஸ்டேட் பேங்க் காலனியில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து 500 ஏழை எளிய மக்களுக்கு காலை சிற்றுண்டியை, ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டல குழு தலைவருமான, என். சந்திரன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் எம். எஸ். கே. இப்ராகிம் , மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் ஆர். ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், மாமன்ற உறுப்பினர் ஏ. சாலமன், வட்டகழகசெயலாளர்கள் இ.உலகநாதன்,டி.ஜேசுதாஸ்,ஏ.ஆர்.சரவணா, மாவட்ட பிரதிநிதிகள் பகுதி நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு துறைமுகம் சட்டமன்றத் தொகுதி மேற்கு பகுதி சார்பில் நேற்று (5.3.2024) சென்னை, கொண்டிதோப்பு, தங்கசாலை தெருவில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் கட்டிட தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், 5 வதுமண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமலு, உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளைச் சேர்ந்த முரளி, ராஜசேகர், லண்டன் முருகன் மற்றும் மாசிலாமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராயபுரம் மேற்கு பகுதிக் கழகம் சார்பில் முதல்வர் பிறந்தநாள்

# அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பொதுக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 6-

இராயபுரம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வ.பெ. சுரேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா - கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை - பொதுக்கூட்டம் வட்டங்கள் தோறும் பின்வருமாறு நடைபெறுகிறது.

இன்று (6.3.2024) வட்டச் செயலாளர் பா. லட்சுமணன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி உரையாற்றுகிறார்.

7.3.2024 - வட்டச் செயலாளர் எம்.எல்.ரவி தலைமையில்நடைபெறும் கூட்டத்தில் திராவிட இயக்கப் பேச்சாளர் வே.மதிமாறன் உரையாற்றுகிறார்.

8.3.2024 - வட்டச் செயலாளர் எஸ். புகழேந்தி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கழக மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி உரையாற்றுகிறார்.

9.3.2024 -வட்டச் செயலாளர் ஜெ.கௌரீஸ்வரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி. எழிலரசன் எம். எல்.ஏ. உரையாற்றுகிறார்.

11.3.2024 - வட்டச் செயலாளர் இரா.பாலன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கழக மாணவர் அணித் துணை செயலாளர் தமிழ் க. அமுதரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டங்களில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர், எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம். எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் என். நவீன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் வ.பெ. சுரேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏகா.கார்த்திகேயன் ஏற்பாடு ! இமயவர்மன், எத்திராஜ் முன்னிலை!

# 14(அ) வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள்! உணவு வழங்கல்!

## பி.எஸ்.சைலஸ் பங்கேற்பு !

சென்னை மார்ச்:6

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி 14(அ) வட்ட கழகம் சார்பில் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் தியாகராயபுரத்தில் அறுசுவை உணவு பொதுமக்களுக்கு வட்ட கழக செயலாளர் ஏகா. கார்த்திகேயன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது.

வட்ட அவைத் தலைவர் இமயவர்மன், மாவட்ட கழகப் பிரதிநிதி குட்டி (எ) எத்திராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்.அப்துல்சலீம், ஆர். ஜெயாளுதீன், எஸ்.மைக்கேல்,வட்ட பொருளாளர் ஏ.கார்த்திக், டைலர் பாபு,

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கழகப் பிரதிநிதி பி.எஸ். சைலஸ், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட அமைப்பாளர் கு. தமிழ்மணி, சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பா. பாலஉமாபதி,

எம்.எல்.வேலன், மகிழன், டி.இ. பரணி குமார், ரா.கணே சன், நேவிராஜ், ஏசு, ஜோசப், வினோலியா,சங்கு கோபி, கே. கார்த்தி, இளங்கோ,பிரதாபன், பாபு, ஆசிர்வாதம், ஆறுமுகம், எஸ்.ஐ. ராஜா, ஜோதி, தாமஸ், சபஷ்டியன், லார ன்ஸ்,சுதாகர், சிவா, பிரேம் மற்றும் தியாகராயபுரம் கழகத் தோழர்கள் உள்ளிட்ட ஏரா ளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.









கடலூர் மேற்கு மாவட்டக் கழக, விருத்தாசலம் நகர தி.மு.க. மற்றும் இளைஞர் அணி, சார்பில் கழக அரசின் நிதிநிலை விளக்கம் மற்றும் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், விருத்தாசலத்தில் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். நகரச் செயலாளர் க.தண்டபாணி, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், மாவட்ட கழக பொருளாளர் ஜி.தண்டபாணி உரையாற்றினர். நகர மன்ற தலைவர்கள் , மாவட்ட, ஒன்றிய, நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், நகரச் செயலாளர் க.தண்டபாணி, ஒன்றியச் செயலாளர்கள் மற்றும் இளைஞரணி, சார்பு பணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகி கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாகர்கோவில் மாநகரத்தில் "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நாகர்கோவில், வேப்பமூடு சந்திப்பு, பொன்னப்பநாடார் திடலில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் – மேயர் ரெ. மகேஸ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் என்.தில்லை செல்வம், என். சுரேஷ் ராஜன், கேட்சன், விஜிலா சத்தியானந்த், வழக்கறிஞர் ப. ஆனந்த், இ. ஜவஹர் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.









மக்கள் முதல்வரின்
மனிதநேயத் திருவிழா
சூரியச் சுடர் - 50
நெஞ்சுக்கு நீதி வழி!!
திராவிடமே ஒன்றியத்தின் ஒளி!!
நாள் : 06.03.2024 புதன்கிழமை மாலை 6.00 மணி
இடம் : பெரியார் நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி மைதானம், கார்த்திகேயன் சாலை
தலைமை கே.சந்துரு
முன்னிலை
திரு. பி.கே.சேகர்பாபு
மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்
ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன் எம்.சி சி.மகேஷ்குமார்
சரிதாமகேஷ்குமார் எம்.சி தேவஜவகர் எஸ்.பன்னீர்செல்வம்
எஸ்.தனசேகர் துரைகண்ணன் ம.அசோக்குமார் ஆர்.எஸ்.சித்திக்
புகழரங்கத்தை துவக்கிவைப்பவர்
ஆசிரியர் கி.வீரமணி
தலைவர் - திராவிடர் கழகம்
மேனாள் நீதியரசர் கே.சந்துரு
மேனாள் நீதியரசர் கே.என்.பாஷா
மேனாள் நீதியரசர் ஜி.எம்.அக்பர் அலி
மேயர் பிரியாராஜன்
டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி
ப.ரங்கநாதன் மு.எம்.எல்.ஏ
என்.ஆர்.இளங்கோ எம்.பி
இரா.கிரிராஜன் எம்.பி
இரா.விடுதலை
நன்றியுரை
கே.பி.ஆதவன்மணி 68வது வட்ட கழக செயலாளர்
பி.டி.சி.ரவி 68 அ வட்ட கழக செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க
Star Signs
044 - 43 55 48 47




நாள் : 06.03.2024
புதன் கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
இடம்: தரமணி
பேருந்து நிலையம்,
தரமணி, சென்னை-113.
சென்னை தெற்கு மாவட்டம் - வேளச்சேரி மேற்கு பகுதி
178 வது அ வட்ட தி.மு.க சார்பில்
மாண்புமிகு
தமிழ்நாடு முதல்வர் தளபதி
அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு
பாட்டுப்பட்டிமன்றம்
தலைப்பு
முதல்வர் தளபதியிடம் முதன்மையாய் இருக்கும் குணம்
மண்ணுரிமை மீட்பதா? பெண்ணுரிமை காப்பதா?
பேராசிரியர் பழனி (விஜய் டி.வி. புகழ்)
மண்ணுரிமை மீட்பதே!
அன்னலட்சுமி
பேரா.சங்கீதா
மண்ணுரிமை காப்பதே!
அறந்தாங்கி நிஷா
லலிதா
நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A.,LLB.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட செயலாளர்
முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன்
தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
வேளச்சேரி எஸ்.பாஸ்கரன்
சு.சேகர்
வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர்
Our CM Our PRIDE
அன்புடன்: தரமணி தே.கோபி
178 வது (அ) வட்ட கழக செயலாளர்
தரமணி A.V.ரங்கா M.K.காமராஜ் மு.ரகுநாதன்
இரா.தனசேகரன் இரா.தஷ்ணா D.எசேக்கியேல்